# உதயன்

23



www.onlineuthayan.com

30 பக்கங்கள் சுடர் 27 கதிர் 347 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 22 புதன்கிழமை (07/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00

# தேடப்படும் குற்றவாளிகளான டக்ளஸ், கே.பி. ஆகியோரை தமிழர்களின் தலைவர்களாக்க அரசு முயற்சிப்பது ஏன்?

### நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, நவ.7

இந்தியாவினாலும் இன்ரப்போலினாலும் தேடப்படும் சர்வதேசக் குற்றவாளிகளான டக்ளஸ் தேவானந்தாவையும், கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனையும் தமிழர்களின் தலைவர்கள் ஆக்குவதற்கு அரசு முயற்சி செய்வது ஏன்?

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

தேடப்படும் குற்றவாளிகளான இந்த இருவரையும் தலைவர்களாக்குவதால் அரசுக்கு என்ன லாபம் இருக்கிறது என்றும் அவர் கேட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனும் இந்தியாவினாலும், சர்வதேசப் பொலிஸாரினாலும் தேடப்படும் குற்றவாளிகள். இது இலங்கை அரசுக்கும் நன்குதெரியும். அதன் பின்னரும் அவர்களை தமிழர்களின் தலைவர்கள் ஆக்குவதற்கு மஹிந்த தலைமையிலான அரசு முயற்சிகளை

பார்க்க பக்கம் 4

# வடமாகாண ஆளுநர் கருத்து சபையின் அங்கீகாரம் ஆகாது

## திட்டவட்டமாகத் தெரிவித்தது உயர்நீதிமன்றம்; 'திவிநெகும' தீர்ப்பை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, நவம்பர் 7

'திவிநெகும' சட்ட வரைவுக்கு ஏனைய எட்டு மாகாணங்களிலும் முறையாக அனுமதியைப் பெற்றுவிட்டு வடக்கு மாகாணத்தில் மட்டும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒருவரின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது சட்டத்தின் முன் அனைவரும்சமம்என்கின்றஅரசமைப்பின் கோட்பாட்டை மீறும் வகையில் உள்ளது. எனவே ஆளுநரின் அனுமதியை அங்கீகாரமாக கருத முடியாது. மாகாண சபையின் கருத்து முறையாக பெறப்படவேண்டும். இவ்வாறு திட்டவட்டமாக அறிவித்துள்ளது உயர் நீதிமன்றம்.

> ★ 'திவிநெகும' நடைமுறைக்கு 2/3 பெரும்பான்மை அவசியம்
> ★ வரைவில் பல பிரிவுகள் அரசமைப்புக்கு முரணானவை
> ★ அதில் ஒரு பிரிவுக்கு வாக்கெடுப்புத் தேவை
> ★ அனைத்து மாகாண சபைகளிலும் கருத்து முறையாகப் பெறப்படவேண்டும்

'திவிநெகும' சட்ட வரைவு தொடர்பான உயர்நீதிமன்றின் தீர்ப்பு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதனைச் சபாநாயகர் நேற்றுச் சபையில் வாசித்தார்.

அந்தத் தீர்ப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தீர்ப்பின் முழு விவரம் வருமாறு:-

சட்டவரைவு ஒன்றை

பார்க்க பக்கம் 4

## பொறுப்புக்கூறலை இலங்கை துரிதப்படுத்துவது அவசியம்

### வலியுறுத்துகிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, நவ.7

இலங்கையில் பொறுப்புக்கூறும் விவகாரங்களில் இன்னும் கூடுதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் பேர்னாட் சாவேஜ் தெரிவித்துள்ளார்.

காணாமல்போதல்கள் உள்ளிட்ட விவகாரங்கள், குறிப்பாக ஊடகவியலாளர்கள் கட்டாயமாகக் காணாமல் போதல்கள் கவலையளிக்

பார்க்க பக்கம் 4

## கல்வி அமைச்சும் இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் கீழா?

### கேள்வி எழுப்புகிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ.7

கல்வி அமைச்சைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கின்றதா என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்று

பார்க்க பக்கம் 4

## நிதி ஒதுக்கீட்டு சட்டவரைவின் இரு பிரிவுகள் முரணானவை

கொழும்பு, நவ.7

நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவின் இரண்டு பிரிவுகள் அரசமைப்புக்கு முரணாக உள்ளன எனவும் அவற்றைத் திருத்துவதன் மூலம் இச் சட்டவரைவை நிறைவேற்ற முடியும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என சபாநாயகர் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

2013 ஆம் ஆண்டுக்கான

பார்க்க பக்கம் 4

## பிரபாகரனின் மகனை கொன்றது பாரிய குற்றம்

கொழும்பு, நவ.7

இலங்கை மீதான பல தாக்குதல்களுக்கு ஆயுதங்களை வழங்கிய உலகமே தேடும் பாரிய குற்றவாளியான கே.பி. குற்றமற்றவர் என அரசு கூறியிருப்பது சரியென்றால், பிரபாகரனின் 12 வயது மகனைக் கொலை செய்தமை பாரிய குற்றமாகும் என்று மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளால் தேடப்படும் நபர்களை அந்தந்த

பார்க்க பக்கம் 4

### தமிழர்களை இராணுவத்தில் சேர்க்கிறது அமெ.

*பென்ரகன்,நவ 7*

*அமெரிக்க இராணுவத்தில் தமிழ்மொழித் தேர்ச்சி பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை தலைமையகமான*

பார்க்க பக்கம் 4

## நீதியரசர் தெரிவுக்குழு விட்யத்தில் நீதிமன்ற விதிகளை மீற முடியாது

### ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்ற நியதிகளின் படி இடம்பெறவேண்டும். இந்த விதிமுறைகளின்படி அரசு செயற்படத் தவறினால், அடுத்த வருடம் இடம்பெற

பார்க்க பக்கம் 4

## சவேந்திர சில்வாவை தூதுவராக ஏற்குமா தென்னாபிரிக்கா?

கேப்டவுன்,நவ.7

தென்னாபிரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அவரை தென்னாபிரிக்கா ஏற்றுக்கொள்ளுமா என கேள்வி எழுந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள்தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி வரும் தென்னாபிரிக்கா சவேந்திர சில்வாவை ஏற்றுக்கொள்ளாது என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## ஒரு குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் நீதியரசரின் பதவி பறிக்கப்படும்

### குற்றப் பிரேரணை ஒழுங்குப் பத்திரத்தில்

கொழும்பு, நவ.7

பிரதம நீதியரசருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுகளில் ஒன்று அல்லது அதற்கு மேலானவை உண்மையென உறுதிப்படுத்தப்பட்டால் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வகையிலும் நீதியரசரை பதவியிலிருந்து நீக்குவதற்கான முன்மொழிவை

பார்க்க பக்கம் 4

## யாழ். பல்கலை ஊழியர் நியமனங்களை உயர்கல்வி அமைச்சு நிறுத்தவில்லை!

### பேரவைக் கூட்டத்தில் சொல்லப்பட்ட காரணம் பொய்யா?

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். பல்கலைக்கழகத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட கல்விசாரா ஊழியர்கள் 39 பேரின் நியமனங்களை நிறுத்தி வைக்குமாறு உயர்கல்வி அமைச்சு ஒருபோதும் அறிவிக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார் அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன.

கணினி பிரயோக உதவியாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் எழுதுவினைஞர்கள்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கே.பி. குற்றமற்றவர் என்று சொல்லும் அரச தரப்பினரே போர்க்குற்றவாளிகள்

## சபையில் மங்கள சமரவீர ஆவேசம்

சர்ச்சைக்குரிய 'திவிநெகும' சட்டவரைவு நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த சட்டவரைவு மூலத்தை சபையில் சமர்ப்பித்தார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல்ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

### திவிநெகும சட்டவரைவுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம்

'திவிநெகும' சட்டவரைவுக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, அதன் தீர்ப்பு இன்று வெளியிடப்படவுள்ள நிலையில் நேற்று நாடாளுமன்ற நுழை வாயிலில் இந்தச் சட்ட வரைவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றும் நடைபெற்றது.

ஸ்ரீ ஜவர்த்தனபுர நாடாளுமன்ற வீதியில் ஆரம்பித்து நாடாளுமன்றம் அமைந்துள்ள ஜயந்திபுர வரையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுத்தப்பட்டனர். பேரணி ஒன்று நடத்திய வடக்கு,கிழக்கு தீவகம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களும் இதில் இந்த ஆர்பாட்டத்தில் பங்கேத்திற்றிருந்தனர்.

'திவிநெகும'சட்ட வரைவுக்கு ஆதரவு வழங்கக் கோரியும், தமது ஆதரவைத் தெரிவித்தும் இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனால் ஜயவர்த்தனபுர ஆரம்பத்தில் இருந்து நாடாளுமன்ற நுழை வாயில் வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியே 'திவிநெகும' சட்டவரைவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் அதேவேளையில் சபாநாயகர் இந்த சட்ட வரைவு தொடர்பான உயர் நீதிமன்ற தீர்ப்பை சபையில் தெரிவித்தார்.

### மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்

'திவிநெகும' சட்ட வரைவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் தொடர்பான தீர்ப்புகள் எனது கைக்குகிட்டியுள்ளன.

அதன்படி சட்டவரைவு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதன் மூலமே நிறைவேற்றப்பட வேண்டும். அதேவேளை இந்த சட்டவரைவில் காணப்படும் சில விதிகளில் திருத்தம் செய்யப்படினும் திருத்தங்களின்படி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு (விசேட பெரும்பான்மை) பெரும்பாண்மை வாக்குகளின் மூலம் நிறைவேற்றப்படவேண்டும். மூலமே 'திவிநெகும' சட்டவரைவை அங்கீகரிக்கமுடியும் என உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது என சபாநாயகர் அறிவித்தார். அதேவேளை நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளையும் சபாநாயகர் அறிவித் தார்.

### பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை

நேற்று நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் குற்ற விசாரணைப் பிரேரணையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரேரணையில் 117 அரச தரப்பு உறுப்பினர்கள் கையெழுத்திட்டு 14 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படிருந்தன.

### சிரேஷ்ட, மூத்த அமைச்சர்களின் கையெழுத்துகள் காணப்படவில்லை

இந்தக் குற்றப் பிரேரணையில் முக்கிய அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களான டியூ.குணசேகர, வாசுதேவ நாணயக்கார திஸ்ஸ விதாரண ஆகியோரின் கையெழுத்துக்கள் காணப்படவில்லை.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து பரிந்துரை வழங்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் இந்தப் பிரேரணையில் கூறப்பட்டிருந்தது.

### சபை நடவடிக்கைகள் 20 நிமிடம் ஒத்திவைப்பு

சபையின் வழமையான நடவடிக்கைகள் மற்றும் வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் என்பன முடிவுற்ற பின் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறும் என அறிவித்த சபாநாயகர் சபை அமர்வுகளை இருபது நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்..

வழமையாக நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தும்போது சபை நடவடிக்கைகள் ஒரு போதும் ஒத்திவைக்கப்படுவதில்லை. ஆனால் நேற்று சபை அமர்வு இருபது நிமிடம் ஒத்திவைக்கப்பட்டு கட்சித் தலைவர்கள் கூட்டம் ஆரம்பமானது.

இருபது நிமிடங்களின் பின்னர் சபை கூடியபோது கட்சித் தலைவர்களின் கூட்ட இணக்கப்பாடு தொடர்பாகவோ நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பாகவோ எதுவும் அறிவிக்கப்படவில்லை.

அடுத்த கட்டமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ 'திவிநெகும' சட்ட வரைவை சபையில் முன்மொழிந்தார்.

### பஸிலின் ஒன்றரை மணி நேர உரை

'திவிநெகும' சட்ட வரைவு தொடர்பாக பல தரப்பட்ட விமர்சனங்கள் எழுந்தாலும் இந்த சட்ட வரைபு வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டது என்று அமைச்சர் விளக்கமளித்தார்.

### அரசமைப்புக்கு விரோதமானது

எதிர் அணிகளின் சார்பில் அனுரகுமார திஸ்ஸநாயக்க விவாதத்தை ஆரம்பித்தார்.

'திவிநெகும' சட்ட வரைவு தனியொரு மனிதனிடம் அதிகாரங்களை தாரைவார்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டிக்கின்றது.

இந்த சட்ட வரைவில் 47 ஒழுங்கு விதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன அவற்றுள் பிரதானமான 12 பிரிவுகள் அரசமைப்புக்கு முரணானவை. எனவே மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே 'திவிநெகும' உருவாக வேண்டும் என நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியுள்ளது என்றார் அவர்.

'திவிநெகும' சட்ட சரைவு இந்த நாடாளுமன்றத்துக்கும், அரசுக்கும் அப்பால் இன்னும் ஒரு அரசை உருவாக்குவது போன்றே அமைந்துள்ளது. தனியொரு மனிதரிடம் அதிகாரங்களை ஒப்படைத்து தான் விரும்பியபடி செயற்பட பூரணஅதிகாரத்தை வழங்கவே இந்தச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என ஜே.வி.பி உறுப்பினர் அனுரகுமார திஸ்ஸ நாயக்க குறிப்பிட்டார். அதேவேளை இந்த சட்டவரைவின் பெரும்பகுதி அரசமைக்கு முரணான வகையில் அமைந்துள்ளது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

'திவிநெகும' சட்டவரைவு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார் .




பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட 'திவிநெகும' சட்டவரைவின் 47 பிரிவுகளில் 12 பிரிவுகள் அரசமைக்கு ஒவ்வாதவை இவை தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் திருத்தங்களுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேற்றப்பட வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலம் நடைமுறைக்கு வருமானால் நாடெங்கிலும் சமுர்த்தி அதிகார சபையில் கடமையாற்றும் பல ஆயிரம் ஊழியர்களின் எதிர்காலம் கேள்விகுறியாக்கப்பட்டுவிடும். அந்த ஊழியர்களின் தொழிலுக்கு உத்தரவாதம் இல்லை என்றும் சுட்டிக் காட்டினார் அனுரகுமார திஸ்ஸ நாயக்க

### சபைக்கு வந்த கே.பி.விவகாரம்

அனுரகுமார திஸாநாயக்க உரையற்றும் போது அமைச்சர் மேர்வின் சில்வா அடிக்கடி இடையூறு செய்து கொண்டே இருந்தார். அதனால் சூடான வாத்தைப் பிரயோகமும் இடம்பெற்றன. இதனால் தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்பட்டு கே.பி. தொடர்பான விவகாரம் ஆரம்பமானது.

பிரபாகரனின் 2 ஆவது மகனை படுகொலை செய்தது கொடூரமான பயங்கரவாதமே என எதிர்கட்டசி உறுப்பினர் மங்கள சமரவீரக ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைத்தார். சர்வதேச நாடுகளால் தேடப்படும் நபர்களை அந்த நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றகருத்தை பிரேரணையில் முன்வைத்தார். கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் ஒரு சர்வதேச பயங்கர வாதி. சர்வதேச நாடுகள் பலவற்றால் தேடப்படுபவர். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை கொலை செய்வதற்கும் ஆயுதம் வழங்கியவர் இவர்தான்

அதேபோன்று புலிகளுக்கு பணம் திரட்டியவர், ஆயுதம் சேர்த்தவரும் இவரே.

சர்வதேச பயங்கரவதியான கே.பியை நாம் கைது செய்து விட்டோம். அவரிடம் இருந்த பல கப்பல்களையும் பலகோடி ரூபா பெறுமதியான தங்கமும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பெருமையுடன் கூறினார்.

### கே.பி.குற்றமற்றவர்

ஆனால் அரசின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கே.பி. குற்றம் அற்றவர். அவர் மீது வழக்கு தொடரவோ, நடவடிக்கை எடுக்கவோ எந்த விதமான ஆதாரமும் இல்லை. எனவே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று கூறுகிறார்.

நாட்டில் படு கொலைகளுக்கு காரணியாக இருந்தவரும் சர்வதேத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்படுபவருமான குமரன்பத் மநாதன்(கே.பி.) குற்றமற்றவர் என்று இந்த அரசு கூறுமானால் பிரபாகரனின் 12 வயது பாலகனை படுகொலை செய்தது இந்த அரசின் படுபாதகமான பயங்கரவாதம் என்றும் சுட்டிக் காட்டினார் மங்கள சமரவீர

### ரணில் விக்கிரமசிங்கவினால் நிராகரிக்கப்பட்டவர் கே.பி

இன்று அரசின் கூட்டாளியாக மாறி இருக்கும் கே.பி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரினால் நிராகரிக்கப்பட்டவர். அரசுக்கும் புலிகளுக்குமிடையில் சமாதான பேச்சு நடந்த போது புலிகளின் சார்பில் கே.பியின் பெயர் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால்சர்வதேச பொலிஸாரினால் தேடப்படும் ஒரு நபரை சமாதானப் பேச்சில் இணைத்துக் கொள்ள முடியாது என அப்போதே நிராகரித்து விட்டார் ரணில் என்பதையும் மங்கள சமரவீர நினைவு படுத்தினார்.

இந்தப் பிரேரணையை வழிமொழிந்தார் ஆரிய வீராக்காரியவசம்

### போர் புரிந்தவர்களை மன்னிக்கும் அரசு அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் இந்த விவாதத்தில் உரையாற்றும் போது இந்த அரசும் அமைச்சர்களும் 12 ஆயிரம் முன்னாள் போரளிகளை விடுதலை செய்துள்ளதாக அடிக்கடி கூறுகின்றனர். அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். அதே வேளை எந்தவிதமான குற்றச் செயல்களிலும் ஈடுபடாதவர்கள் புலிகளுக்கு உதவினார்கள். தகவல் தர தவறினார்கள் போன்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பல வருடங்களாக சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று கே.பி. குற்றமற்றவர் என்று கூறி விடுதலை செய்யும் அரசு சந்தேகத்தின் பேரில் அடைத்து வைத்திருக்கும் தமிழ்க் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தினார் .

*

# சிறைகளில் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளை நிறுத்துங்கள்

## சிறைச்சாலை அமைச்சருக்கு வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவர் கடிதம்

யாழ்ப்பாணம், நவ.7

கிறிஸ் பூதவடிவிலும் அதன் பின்னர் பாலியல் பலாத்கார வடிவிலும் தொடர்ந்த அடக்குமுறைகள் தற்போது மிக வேதனையான முறையில் கைவிலங்கு இட்ட தமிழ்ப் பெண்கள் மீதும் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் கண்டனம் தெரிவிப்பதுடன், இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சருக்கு வலி. மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வலி. மேற்குப் பிரதேச சபை தவிசாளர் திருமதி. நா. ஐங்கரன் அனுப்பியுள்ள கடித்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழ்ப் பெண் அரசியல் கைதிகளுக்கு வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாலியல் கொடுமைகள் தொடர்பாக வெளியான செய்திகள் குறித்து அதிர்ச்சி அடைந்தேன்.

தேசிய ரீதியில் பெண்களைஎழுச்சி செய்ய பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இப்படிப்பட்ட கொடூரமான செயல்களைக் கண்டு வேதனை அடைகின்றேன்.

இத்தகைய செயல்கள் தமிழ் மக்கள் மத்தியில் சமாதானம் மீதான நம்பிக்கைகளை குறைவடையச் செய்து விடும். ஒரு பெண் தவிசாளர் என்ற வகையில் இந்தச் சம்பவங்கள் எனக்கு வேதனையாக இருக்கிறது.

பெண்கள் மீது பல்வேறு பட்டவடிவங்களில்மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறையானது ஆண், பெண் சமத்துவ கருத்துகளுக்கு மேலாக பெண்ணியத்தை தரம் தாழ்த்தும் செயலாகவே கருத முடியும்.

ஒரு காலப் பகுதியில் கிறிஸ் பூதம் வடிவிலும், அதன் பின்னர் பாலியல் பலாத்கார வடிவிலும் தொடர்ந்த அடக்குமுறைகள் தற்போது மிக வேதனையான முறையில் கைவிலங்கிடப்பட்ட பெண்கள்மீது மேற்கொள்வது மிலேச்சத்தனத்திலும் மேலான ஒரு செயலாகும்.

மேற்படி விடயம் தொடர்பில் சிறைத்துறை சட்ட விதிமுறைகளுக்கு அமைவாகவும், சிறை அதிகாரிகள் தவிர ஏனையோர் சோதனை செய்வது முறையற்ற செயலாகவுமே எண்ணுகின்றேன்.- என்றுள்ளது. (த-5-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் டெங்கு தீவிரமாகும் நிலை தடுப்புப் பணிகள் திருப்தி இல்லை

## சுகாதார வைத்திய அதிகாரி விசனம்

மன்னார்,நவ.7

மன்னார் மாவட்டத்தில் டெங்கு தொடர்பாக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் திருப்தியளிப்பதாக இல்லை என மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற டெங்கு தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்த கடும் மழையைத்தொடர்ந்து கடந்த இரண்டு வாரங்களுக்குள் மன்னார் மாவட்டத்தில் 7 பேர் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் குப்பை அகற்றுதல், வடிகால்கள் சீரமைத்தல், கழிவு நீர் வெளியேற்றுதல் போன்ற வேலைத்திட்டங்கள் உடனடியாக இடம்பெற வேண்டும். ஆனால் இங்கு டெங்கு தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் தற்போது திருப்தியில்லாத நிலையில் அமைந்துள்ளமை கவலையளிக்கின்றது.

மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபைகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

டெங்கு தொடர்பான செயற்பாடுகள் திருப்தியளிக்காமை குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் எனக்கு முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நகர சபையும், பிரதேச சபைகளும் கழிவுகளை அகற்றுதல், கழிவு நீரை வெளியேற்றுதல், கழிவு நீர் கால்வாய்களை சீர் செய்தல் போன்ற பணிகளை துரிதப்படுத்தும் பட்சத்தில் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும்.

இதற்கு அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(க-12)

# விசுவமடு நூலகத்தை சிறப்பாக இயங்க வைக்குமாறு கோரிக்கை

## வாசிப்பதற்கு பத்திரிகைகள் மட்டுமே

முல்லைத்தீவு,நவ.7

முல்லைத்தீவு விசுமடு பொது நூலகத்தின் வசதிகளை மேம்படுத்தி அதனை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வாசகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விசுவமடு பொது நூலகம் சகல வசதிகளையும் கொண்டதாக விளங்கி வந்தது. ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நூல்களும், சிறுவர் விளையாட்டு முற்றம், பூங்கா வசதிகள் என்பனவும் காணப்பட்டன.

அதிகளவான வாசகர்களும்இந்த நூல் நிலையத்துக்கென இருந்தனர். போர் காரணமாக நூலகம் சேதமடைந்துள்ள போதிலும் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான நூல்கள் விசுவமடு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் குறித்த நூலகம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பத்திரிகைகள் மட்டுமே இங்கே வைக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் அமைக்கப்பட்ட நூலக கட்டடத் தொகுதி, சிறுவர் நூலகத் தொகுதி என்பவற்றுக்கான கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ள போதும் இதுவரை நூல்கள் எவையும் நூலகத்தில் வைக்கப்படவில்லை. இதனால் நூலகச் செயற்பாடுகள் முடங்கிய நிலையில் காணப்படுகின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட அதிக வாசகர் பரப்பைக் கொண்ட இந்த நூகத்தை முன்னரைப் போன்று இயங்க வைக்குமாறு பாடசாலை மாணவர்களும் வாசகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



ஒட்டுசுட்டான், கற்சிலைமடுவில் வேலுப்பிள்ளை புஸ்பராசா என்பவருக்கு இராணுவத்தினரால் அமைத்து வழங்கப்பட்ட வீட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றார். (க-500)

# விபத்தில் சிக்கி காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில்

முல்லைத்தீவு,நவ.7

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த ஒருவர் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு வற்றாப்பளை வீதியில் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவரை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த நபர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வரத்தினம் (வயது-53) என்பவர் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். க-6)

# விவசாயிகளின் அக்கறையின்மையே பயிர் அழிவுகளுக்கு காரணம்

## கமநல சேவை அதிகாரி கூறுகிறார்

முல்லைத்தீவு,நவ.7

விவசாயிகளின் அக்கறையின்மையால் விவசாயத்தில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநலசேவை அதிகாரியான ரி. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுற்று வேலிகள் அமைக்கப்படாததால் சிறு குளங்களின் கீழ் செய்கை பண்ணப்பட்ட விவசாயம் கட்டாக்காலி கால்நடைகளால் அழிவடைவதாக விவசாயிகள் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

சுற்று வேலிகள்
அமைக்கப்படாததால்
சிறு குளங்களின் கீழ்
செய்கை
பண்ணப்பட்ட
விவசாயம் கட்
டாக்காலி
கால்நடைகளால்
அழிவடைவதாக
விவசாயிகள்
தெரிவித்த போதே
அவர் இவ்வாறு
கூறினார்.

கற்சிலைமடு பெரிய குள வெளியில் உள்ள விவசாயிகள் விவசாயக் கூட்டங்களுக்கு ஒழுங்காக சமுகம் கொடுக்காமையால் கிராம மட்ட அமைப்புக்களைத் தெரிவு செய்து இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது விவசாயிகளே என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு ஒன்றரை மாத காலம் பூர்த்தியான நிலையில் கால்நடைகள் தினமும் பயிர்களுக்கு அழிவை ஏற்படுத்தி வருகின்றன என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(க-500)

# பேசாலை திருட்டுச் சம்பவம்; சந்தேக நபர்கள் இருவர் மறியலில்

மன்னார்,நவ.7

மன்னார் பேசாலைப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு நபர்களும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மன்னார் பேசாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றது. இதில் சுமார் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பொருள்கள், பணம் என்பன திருட்டுப் போயிருந்தன.

இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்பட்ட இரண்டு பேர் கடந்த சனிக்கிழமை இரவு தலைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிருவரும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் அதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளதுடன் திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-12)

# 'நீர் நிலைகளில் நீராட அனுமதிக்க வேண்டாம்'

முல்லைத்தீவு,நவ.7

சிறுவர்களை வாய்க்கால்களிலோ அல்லது குளங்களிலோ நீராடுவதற்கு அனுமதிக்க வேண்டாமென ஒட்டுசுட்டான் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இங்குள்ள பல இடங்களிலும் மழை நீர் பெருக்கெடுத்துப் பாய்கின்றது.

முத்துஐயன்கட்டு பிரதான வாய்க்காலில் நீர் நிறைந்து பாய்வதுடன் இங்குள்ள சிறு குளங்களும் நீர் நிறைந்து காணப்படுகின்றன. மேலும் குளங்களில் மண்ணெடுத்த குழிகள் காணப்படுவதுடன் சுனைகளும் உள்ளன.

சிறுவர்கள் இத்தகைய இடங்களில் நீராடுவதால் ஆபத்தை எதிர்கொள்வதுடன் தமது உயிர்களையும் இழக்க வேண்டிய அவலமும் ஏற்படும்.

மேலும் தற்போது பல்வேறு வகையான தொற்று நோய்கள் பரவி வருவதால் மழை வெள்ளத்தில் நீராடும் சிறுவர்களும் பாதிக்கப்படும் அபாயமுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (க-500)

# பொறுப்பற்ற விதத்தில் சுத்திகரிப்பு பணியாளர்கள்

## மன்னார் நகரசபைச் செயலாளர் கருத்து

மன்னார்,நவ.7

மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வதால் நகர சபை மீது மக்கள் நம்பிக்கையீனம் கொண்டுள்ளதாக நகரசபைச் செயலாளர் பேனாட் குரூஸ் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற இடர் முன்னறிவித்தல் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை மன்னார் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்றது.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்;

நகர சபையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்கின்றனர். இவர்கள் தமது சம்பளத்தைப் பெற்றவுடன் பல நாள்கள் பணிக்கு வருவதில்லை.

மேலும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சுகாதாரப் பொருள்களையும் வீசி விடுகின்றனர்.

இவர்களிடம் சுத்திகரிப்புப் பணிக்கென வழங்கப்படுகின்ற உபகரணங்களும் திரும்பி வருவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் செயலாளரின் கருத்து முற்று முழுதாகப் பணியாளர்களையும், நகரசபையையும் குற்றம் சுமத்துவதாகவுள்ளது.

செயலாளரின் தவறுகள் காரணமாகவே இந்தப் பிரச்சினைகள் உருவாகின்றன என்று குறிப்பிட்டார்.

(க-12)

# போக்குவரத்து நெருக்கடிக்குள் பூநகரி, வினாசியோடை மக்கள்

அக்கராயன்,செப்.7

பூநகரி, வினாசியோடை கிராம மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்திலே சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஆனால் பஸ் சேவை எதுவும் இடம்பெறுவதில்லை. இதனால் பெரும் போக்குவரத்து நெருக்கடியை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்களில் இதுதொடர்பாக பல தடவைகள் குரல் எழுப்பப்பட்ட போதிலும் இந்தக் கிராம மக்களின் போக்குவரத்து நெருக்கடி தீரவில்லை.

மேலும் இங்குள்ள பாடசாலையில் 80 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் ஏழு ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். இவர்கள் பாடசாலைக்குச் சென்று வருவதில்அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆசிரியர்கள் தனியார் வாகனங்களில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாடியடிச் சந்தியிலிருந்து 18 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் பூநகரி கல்விக் கோட்டம் பல்வேறு நெருக்கடிக்குள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக் கூறலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கின்றன.

லசந்த விக்கிரமதுங்க கொலை, பிரெஞ்சுத் தொண்டர் நிறுவனப் பணியாளர்களின் கொலைகள், திருகோணமலையில் மாணவர்கள் கொலை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

இந்த விவகாரங்கள் பற்றி எமது ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளும், ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் ஏனைய உறுப்பினர்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட நிபுணர்குழுவும் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருந்தது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஒரு குற்றம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் வகையிலும் தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான பிரேரணை நேற்று நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளுந்தரப்பைச் சேர்ந்த 117 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட இப்பிரேரணையில் 14 குற்றச்சாட்டுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட மற்றும் பதவி முறையில் மேற்கொண்ட அதிகாரத் துஷ்பிரயோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

* துர்நடத்தை அல்லது பிரதம நீதியரசர் பதவியை வகிப்பதற்குத் தகாத விதத்திலான நடத்தை உறுதிசெய்யப்படுவதாலும்

* நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகக்கூடியதான விடயங்கள் தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கு அல்லது கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகக்கூடியதான விடயங்கள் தொடர்பில் ஏற்புடையதான அல்லது ஏற்புடையதாகக்கூடிய விடயங்கள் தொடர்பில் செயற்பட்டுள்ளார் என்பதாலும்

* நீதி, நியாயம் வழங்குவதில் நிர்ப்பந்தங்களைச் செய்துள்ளார் என்பதாலும்

* வழக்குத் தரப்பினர்கள் பக்கச்சார்பு மற்றும் பக்கச்சார்பின்மை தொடர்பிலான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு வாய்ப்புள்ளதான ஏதுக்கள் உருவாக்கலாம் என்பதாலும்

முழுமையாகவே உயர் நீதிமன்றத்தையும் குறிப்பாக, பிரதம நீதியரசர் பதவியையும் அவமதிப்புக்கு உள்ளாக்கியுள்ளார்.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள துர்நடத்தைக் குற்றச்சாட்டுகளின் காரணமாக துர்நடத்தைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தி இக்குற்றச்சாட்டுகளில் ஒன்று அல்லது அதற்கு மேலானவை உண்மையானவை என உறுதிசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவுக்குழு நாடாளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பட்சத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை நீக்குவதற்கான முன்மொழிவை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கக்கூடிய வகையில் தெரிவுக்குழு ஒன்றை அமைக்கவேண்டும் என அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 107(3)ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்படவேண்டிய 107(2) பிரிவின் ஏற்பாடுகளின்படி 78ஆம் இலக்க நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் அடிப்படையிலேயே இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆகிய பதவிகளுக்காக நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுகள் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் நியமனங்கள் இரண்டு மாதங்களாகியும் யாழ். பல்கலைக்கழக பேரவையால் அங்கீகரிக்கப்படாமல் இருப்பது குறித்துக் கேட்கப்பட்ட போதே அவர் திட்டவட்டமாக இதனை 'உதயனிடம்' தெரிவித்தார்.

24.04.2012 இல் கணினிப் பிரயோக உதவியாளர்களுக்கும், 25.04.2012 எழுதுநர் சேவைக்கும் தெரிவுப் பரீட்சை நடத்தப்பட்டது. கணினிப்பிரயோக உதவியாளர்களுக்கான செய்முறைத்தேர்வு 17.05.2012 இல் நடத்தப்பட்டது. விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி த.வேல்நம்பி ஆகியோரடங்கிய தேர்வுக் குழு இறுதிப்பட்டியலைத் தயார் செய்தது. சுருக்கெழுத்தாளர் பதவிக்கு 2 பேரையும், கணினிப்பிரயோக உதவியாளர் பதவிக்கு 32 பேரையும், எழுதுநர் பதவிக்கு 7 பேரையும் இந்தக் குழு சிபார்சு செய்தது.

இந்த நேர்முகத் தேர்வைத் தொடர்ந்து 29.09.2012 அன்று வவுனியா வளாகத்தில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் அந்தப் பட்டியல் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்படவில்லை. அது தொடர்பில் கேட்கப்பட்டதற்கு உயர் கல்வி அமைச்சர் அதனை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டார் என்று பதிவாளர் பதிலளித்திருந்தார்.

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தின் போதும்கூட நியமனப் பட்டியல் பேரவையின் அங்கீகாரத்துக்காக முன்நகர்த்தப்படவில்லை. அது பற்றிப் பீடாதிபதிகள் கேள்வி எழுப்பிய போதும், உயர் கல்வி அமைச்சர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் ஆகியோரின் அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றதான, தெளிவற்ற பதில் ஒன்றைப் பதிவாளர் வழங்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த காரசாரமான விவாதத்தை அடுத்து பீடாதிபதிகள் பேரவைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்திருந்தனர்.

''உயர் கல்வி அமைச்சரோ அமைச்சோ எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நியமனங்களை இடைநிறுத்தி வைக்குமாறு அறிவிக்கவில்லை. இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம்தான் கேட்க வேண்டும்'' என்று தெரிவித்தார் அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்தின. (உ-02)

## தேடப்படும்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேற்கொள்கிறது.

அரசு தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை மதித்துச் செயற்படவேண்டும் என்பதுடன், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் கருமங்களை ஆற்றுவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். வடமாகாண சபைத் தேர்தலுக்காக இந்தியாவால் தேடப்படும் இரண்டு குற்றவாளிகளை அரசு சிபாரிசு செய்துள்ளது என கூறப்படுகின்றது. ஏன் வடக்கில் வேறு பிரதிநிதிகள் இல்லையா? என்றார்.

## நிதி ஒதுக்கீட்டு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர் இச்சட்டவரைவின் 2(அ) பிரிவு அரசமைப்பின் 148 ஆவது பிரிவுக்கு முரணானது. இருப்பினும், கடன் பெறுவதற்கு முன் அது தொடர்பான நிர்ணயங்களுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும் என்று திருத்தம் செய்தால் அது அரசமைப்புக்கு முரண்படா.

குறித்த சட்டமூலத்தின் 7(அ) பிரிவு அரசமைப்பின் 148 ஆவது பிரிவுக்கு முரணானது. நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மாத்திரம் இதை முன்னெடுப்பது என்று திருத்தினால் அரசமைப்புக்கு முரணற்றதாக இதை மாற்றமுடியும் என அத்தீர்ப்பு அமைந்துள்ளதாக சபாநாயகர் கூறினார்.

## பிரபாகரனின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாடுகளிடம் ஒப்படைப்பது தொடர்பிலான சபை ஒத்திவைப்புப் பிரேரணையை நேற்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கே.பி. என்கின்ற அதி பயங்கரமான குற்றவாளியை இன்டர்போலும், முழு சர்வதேசமும் தேடிக்கொண்டிருக்கும் நிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு கே.பியைப் பாதுகாக்கின்றது. அவரைப் பெரியவர்களுடன் சந்திக்க இடமளிக்கின்றது.

15 வருடங்களில் 23 பெயர்களில் அவர் சர்வதேசத்தில் வாழ்ந்துவந்தார். பல நாடுகளில் இருந்து அவர் செயற்பட்டார்.

அன்று முதல் இன்றுவரை இன்டர்போல் அவரைத் தேடுகின்றது. லக்ஷ்மன் கதிர்காமரைக் கொல்வதற்கும், மத்திய வங்கி மீதான தாக்குதலுக்கும் ஆயுதங்களை வழங்கியவர் கே.பி.

அப்படிப்பட்ட கே.பி. குற்றவாளி இல்லை என்று அரசு கூறுகின்றது. 2009இல் கே.பி. கைதுசெய்யப்பட்டபோது ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமான - ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட புலித் தலைவர் கே.பி. கைதுசெய்யப்பட்டார் என்று ஜனாதிபதி செயலக இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அப்படிப்பட்ட கே.பி. எப்படி இப்போது குற்றமற்றவராக மாறினார்? நிச்சயமாகத் தந்தை செய்யும் பாவத்தை இங்கு புதல்வர்கள் அனுபவிக்க நேரிடும்.

கே.பிக்கு ராஜ மரியாதை வழங்கப்படுகிறது. இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் தடைசெய்யப்படும் நிலையில் கே.பி. மாத்திரம் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இப்படிப்பட்ட குற்றவாளியை எப்படி இந்த அரசு குற்றவாளி இல்லை என்று சொல்லும்? கே.பி. குற்றவாளி இல்லையென்றால் பிரபாகரனின் 12 வயது அப்பாவி மகனைக் கொலை செய்தமை பாரிய குற்றமாகும்.

கே.பியிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் புலிகளின் சொத்து விவரங்களை அரசு நாடாளுமன்றிற்குத் தெரியப்படுத்தவேண்டும் - என்றார்.

## நீதியரசர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் இலங்கைக்குப் பெரும் நெருக்கடி ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று எச்சரிக்கை விடுத்தது.

தெரிவுக்குழுவில் தாம் பெரும்பான்மையைக் கொண்டிருப்பதால் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பான தீர்ப்பை அரசு தமக்குச் சாதகமாக எழுத முடியாது. மேற்படி பிரேரணையூடாக அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு உரிய சாட்சிகளை முன்னிறுத்தி, சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் அதை நிரூபிக்கவேண்டும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்று (நேற்று) சபாநாயகரால் நியமிக்கப்படவுள்ளது. இந்தத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்ற நியதிகளுக்கமையவே இடம் பெறவேண்டும்.

அந்த விதிமுறைகளின்படி அரசு செயற்படத் தவறினால் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள், நீதியரசர்கள், சட்டத்தரணிகள் மாநாட்டில் இலங்கைக்குப் பெரும் நெருக்கடிகள் ஏற்படக்கூடும் - என்றார் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல்ராஜபக்ஷ தலைமையில் கூடியது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் அறிவித்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விகள் கேட்கப்பட்டன.

இதன்போது, கல்வி அமைச்சுக்கு சொந்தமல்லாத கட்டடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுவது குறித்த விவகாரம் தொடர்பில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கல்வியமைச்சரிடம் கேள்விகளை எழுப்பி இருந்தார்.

இதற்கு பிரதிக் கல்வி அமைச்சர் பதிலளித்துக்கொண்டு செல்கையில் இடையீடு செய்த கருணாநாயக்க அரசு ஏன் அதிபர்களுக்கு கேர்ணல் பதவி வழங்குகின்றது? கல்வி அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கா என கேள்வி எழுப்பினார். (ஐ)

## தமிழர்களை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பென்ரகன் அறிவித்துள்ளது.

சிறப்பு மொழித்தேர்ச்சி அடிப்படையில் அமெரிக்காவில் தற்காலிகமாக வசித்து வரும் 550 பேரை முதற்கட்டமாக அமெரிக்க இராணுவம் சேர்த்துக் கொள்ளவுள்ளது.

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை பேசக்கூடியவர்கள் இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தமிழ், ஹிந்தி, அரபி, சீன, இக்போ, குர்திஸ், நேபாளி, பாஸ்ரோ, ருஸ்ய மொழிகள் உள்ளிட்ட 35 மொழிகளைப் பேசுவோர் இவ்வாறு அமெரிக்க இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ளனர்.

இவர்கள் 10 வாரகால அடிப்படைப் பயிற்சிகளின் பின்னர், பணிகளில் அமர்த்தப்படுவர்.

இரண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் தற்காலிகமாக குடியிருந்தவர்கள் அமெரிக்க இராணுவத்தில் சேரமுடியும்.

இவர்களுக்கு நிரந்தர அமெரிக்க குடியுரிமை வழங்கப்படும்.இந்த முன்னோடித்திட்டம் வெற்றியளித்தால், இராணுவத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் இது விரிவுபடுத்தப்படும் என்று பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க இராணுவத்தில் தற்போது 29,000 வெளிநாட்டவர்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## வடமாகாண...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு முன் அச்சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானதா என்று ஆராய்ந்துபார்த்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கே உள்ளது.

ஏனைய எட்டு மாகாணங்களிலும் முறையாக அனுமதியைப் பெற்று வடமாகாணத்தில் மட்டும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒருவரின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கின்ற அரசமைப்பின் கோட்பாட்டை மீறும் வகையில் உள்ளது. எனவே, ஆளுநரின் அங்கீகாரத்தை வடமாகாண சபையின் அங்கீகாரமாகக் கருதமுடியாது. மாகாணசபையின் கருத்து முறையாகப் பெறப்படவேண்டும்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு இச்சட்டவரைவை நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியும்.

அரசமைப்பின் 12(1) சரத்தின் படி சட்டவரைவின் 'ஏ' பிரிவு அரசமைப்புக்கு முரணானதாகும். எனவே, இதை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றவேண்டும்.

இச்சட்டவரைவின் 4,42 ஆம் பிரிவுகள் அரசமைப்புக்கு முரணாக இருப்பதால் அதையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றவேண்டும்.

அதேபோல், சட்டவரைவின் 8(2) சரத்து அரசமைப்பின் 3 ஆவது பிரிவுக்கு முரணாக இருப்பதால் இதை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

திணைக்களத் தலைவர்கள் அமைச்சரவையில் நியமிக்கப்படுவதாக இருந்தால் அது அரசமைப்புக்கு முரண் அல்ல. சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லை.

அதேபோல் சட்டவரைவின் 11 மற்றும் 18ஆம் பிரிவுகளும் அரசமைப்புக்கு முரணாக உள்ளன. ஆகவே, இதையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்ற வேண்டும்.

இச்சட்டவரைவின் 14 ஆவது பிரிவு அரசமைப்புக்கு முரணாக உள்ளபோதிலும் 'திவிநெகும' திணைக்களப் பணிப்பாளர்கள், 'திவிநெகும' மக்கள் சங்க நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு என்பவை தொடர்பில் வலய அமைப்புகளின் கருத்தை அறிந்து செயற்படுவதால் அப்பிரிவு அரசமைப்புக்கு முரணாகாது.

இச்சட்டவரைவின் 17(1) பிரிவு அரசமைப்புக்கு முரணானது. ஆகவே, அரசமைப்பின் 84(2) ஆவது சரத்தின்படி இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல, சட்டவரைவின் 19 ஆவது பிரிவும் அரசமைப்புக்கு முரணாக இருப்பதால் இதனையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

மேலும், சட்டவரைவின் 25(4) மற்றும் 29(4) ஆகிய பிரிவுகள் அரசமைப்புக்கு முரணாக இருப்பதால் இதையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றவேண்டும்.

சட்டமூலத்தின் 'ஏ'யில் உள்ள சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரணானவை. நாடாளுமன்ற அனுமதியுடன் கூட்டு நிதியத்தில் வைப்புச் செய்வதாயின் இது அரசமைப்புக்கு முரண்படா.

ஆகவே, இச்சட்டவரைவு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்று சபாநாயகர் கூறினார். (த)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சூடுபிடிக்கும் கூடங்குளம் விவகாரம்

தமிழகத்தில், அதன் தென்கோடிக் கடற்கரைக் கிராமமான கூடங்குளத்தில், இந்திய மத்திய அரசு நிர்மாணித்து வரும் அணு மின்நிலையத்தால் தமக்குப் பாதிப்புகள் உண்டாகலாம் என்ற அச்சத்தால், அந்த மாநில மக்கள் அத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

சங்கிலிப் போராட்டம், உண்ணாவிரதம், கடல்வழியாக படகுகளில் சென்று முற்றுகையிடும் போராட்டம், பெண்கள் அறவழியில் கடற்கரைப் போராட்டம், அணு உலையிலிருந்து 500 மீற்றர் தொலைவில் மீனவர்களின் முற்றுகைப் போராட்டம் என்று பலவிதமான அறவழிப் போராட்டங்களை நடத்துவதற்கு கூடங்குளம் மக்கள் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள். அணு உலை அமைக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து ஏற்கனவே பல போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

பாட்டாளி மக்கள் கட்சி, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம், புதிய தமிழகக் கட்சி ஆகியன கூடங்குளம் அணுமின்நிலையத் திட்டத்தை எதிர்த்து தமிழக செயலகத்தை முற்றுகையிட்டன. அதன்போது வைகோ, நெடுமாறன், திருமாவளவன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

குறிப்பிட்ட திட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனினும், அணுமின்நிலையம் மக்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

மேலும், அணுமின்நிலையம் தொடர்பான விவகாரத்தினால் உண்டாகியுள்ள தளம்பல் நிலையால், ரஷ்யப் பிரதமரின் உத்தேச இந்திய விஜயம் கூட ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

1988 இல் ராஜீவ்காந்தி, சோவியத் யூனியனின் கடைசி ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவுடன் செய்துகொண்ட ஒப்பந்தமே கூடங்குளம் அணு மின்நிலைய ஒப்பந்தம். அமெரிக்கா அன்று இதனை எதிர்த்ததனால் அப்போதும் அது சர்ச்சைக்குரிய ஒப்பந்தமாகவே இருந்தது.

சோவியத் யூனியன் துண்டாடப்பட்ட நிலையில், பத்து வருடங்கள் கிடப்பில் போடப்பட்ட பின்பு, புத்துயிர் பெற்று பல தடைகளைத் தாண்டி 24 வருடங்களின் பின்னர், கூடங்குளம் அணு மின்நிலையம் இப்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்தியாவை ஒரு வல்லரசாக்கும் கனவுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றான, கூடங்குளம் அணு மின்நிலையம் இயங்க ஆரம்பிக்குமானால், முதலில் ஆயிரம் மெகாவாட் அணு மின் திறன் கொண்ட இரு அணு உலைகள் உற்பத்தியை ஆரம்பிக்கும். இந்தியாவிலேயே மிகவும் அதிக செயல் திறன் கொண்டதாக கூடங்குளம் அணு மின்நிலையம் திகழும்.

அந்த அணு மின்நிலையம் குறித்து இலங்கை அச்சமடையத் தேவை இல்லை என்கிறார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் இதனால் தமிழ்நாட்டுக்கு ஆபத்து ஏற்படாது என்கிறார். ஆனால், இந்த அணு மின்நிலையம் குறித்து தமிழ்நாட்டு மக்களினதும் குறிப்பாக, கூடங்குளம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மக்களினதும் இலங்கையின் மன்னார் பகுதி மக்களினதும் உணர்வுகளை எவரும் அசட்டை செய்துவிட முடியாது.

ரஷ்யாவின் செர்னோபில், ஜப்பானின் புகுஷிமா, டயிச்சி அணு மின்நிலையங்களில் ஏற்பட்ட விபத்துப் போன்று கூடங்குளம் அணுமின்நிலையத்திலும் ஏற்படாது என்று எவ்வாறு நம்பமுடியும்? இந்த விபத்தை அடுத்து ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் தமது சில அணு உலைகளை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதையும் மறந்துவிட முடியாது.

இந்த அணு மின்நிலையம் இயங்குவதைத் தடுப்பது சாத்தியப்படாவிட்டாலும், இலங்கையில் மன்னார் மக்களினதும் குறிப்பாக மன்னார் மீனவர்களினதும், தமிழ்நாட்டு மக்களினதும் ஆதங்கங்களைக் கருத்தில் கொண்டு அவற்றுக்கு மதிப்பளித்து, இந்தியா பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்; கட்டாயம்.

ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் இந்தியத் தூதுவர் அசோக் காந்தாவைச் சந்தித்த தூதுக்குழுவினர், இந்த அணு மின்நிலையம் தொடர்பாக மூன்று விடயங்களை அவரது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

* அணு மின்நிலையத்தில் விபத்து ஏற்பட்டால் எதிர்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் எவை?

* அபாயகரமான அணு மின் கழிவுகளை இந்திய அரசு எப்படி அகற்றப்போகிறது?

* இலங்கையில் வடமாகாணத்தில் குறிப்பாக, மன்னார் வலயத்தில் வாழும் மக்களின் வாழ்வாதார நெருக்கடிகளுக்கான விசேட ஏற்பாடுகள் என்ன?

இவை நியாயமான கேள்விகள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ஏனெனில், விபத்து என்பது, எந்த நேரமும் எந்த வடிவத்திலும் வரலாம். கடலில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் இந்த அணு மின்நிலையம் இருப்பதால் ஆழிப்பேரலை கூடத் தாக்கலாம்.

கூடங்குளம் அணு மின்நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில், ஆழிப்பேரலை ஆபத்து இப்போது போன்று பெரிதாக இருந்ததில்லை. இந்த மின் நிலையத்தில் விபத்து இடம்பெற்று கதிரியக்கக் கசிவு ஏற்படுமானால் பேரழிவு ஏற்படும்.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால், அப்போது உண்டான பூமி அதிர்ச்சியினால் ஒனாகாவா அணு உலை நிலையம் முற்றாக அடித்துச் செல்லப்பட்டது.

கூடங்குளம் அணு மின்நிலையம் இந்தியாவின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அவசியமானது என்பதில் சந்தேகம் இல்லை. அதற்காக மனித உயிர்களைப் பணயம் வைக்க முடியாது.

ஆகையால், கூடங்குளம் அணு மின்நிலையம் குறித்த தமிழக மற்றும் மன்னார் மாவட்ட மக்களின் அச்சத்தை அகற்றவும், அவர்களைப் பாதுகாக்கவும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதில் இந்திய அரசு முழு அளவில் அக்கறை கொள்ளவேண்டும்.

# துமிந்த சில்வா எம்.பியின் அகற்றப்பட்ட மண்டையோட்டு பகுதி குறித்து அறிக்கை

## நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவு

கொழும்பு,நவ.7

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட மண்டையோட்டின் பகுதிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலைசெய்யப்பட்ட வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை பணிப்பாளருக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக அவரது மெய்ப் பாதுகாவலர் அனுர துசார டி மெல் சாட்சியமளித்திருந்தார்.

அவர் தனது சாட்சியத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது மண்டையோட்டின் சில பகுதிகள் அகற்றப்பட்டன என்று தெரிவித்திருந்ததாக அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மண்டையோட்டில் அகற்றப்பட்ட பகுதிகள் இருந்தால் அது வழக்குக்கு முக்கியமானது என்று பிரதிவாதி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அதனைத் தொடர்ந்தே அகற்றப்பட்ட மண்டையோட்டின் பகுதிகள் தொடர்பிலான வைத்திய அறிக்கையை எதிர்வரும் 20 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

# அரசுக்கு எதிராக அதிபர், ஆசிரியர்கள் போராட்டத்தில் குதிக்க தயாராகின்றனர்

கொழும்பு,நவ.7

சம்பள முரண்பாடுகள் நீக்கப்படுதல் உள்ளிட்ட தமது கோரிக்கைகள் குறித்து இதுவரை அரசிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்காததால் நாளை 8 ஆம் திகதியின் பின்னர் அதற்கு எதிரான இறுக்கமான தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவுள்ளதாக ஆசிரியர்கள், அதிபர்களின் ஒருங்கிணைந்த தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தம்முடன் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு முன்வராவிட்டால் அரசின் பொறுப்பு வாய்ந்த வேறு ஓர் அமைச்சர் என்றாலும் அவருக்குப் பதிலாக எம்முடன் பேச வேண்டும் எனவும் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க, கல்வி அமைச்சரின் தலைக்கனம் மிக்க பேச்சுக்குப் பதிலளிப்பதற்கு தமது குழு தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

(த-22)

# சமிக்ஞை இருக்கும் இடங்களில் இனிமேல் பொலிஸார் இல்லை

## பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவிப்பு

கொழும்பு,நவ.7

போக்குவரத்து ஒளி சமிக்ஞைகள் காணப்படும் இடங்களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் போக்குவரத்துப் பொலிஸார் இனி ஈடுபடமாட்டார்கள். இந்த நடைமுறை நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

போக்குவரத்து ஒளி சமிக்ஞைகள் இல்லாத இடங்களில் மாத்திரமே, போக்குவரத்துப் பொலிஸார், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்று ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

இதனால், போக்குவரத்து ஒளி சமிக்ஞைகளுக்கு ஏற்ப, சாரதிகள் தமது வாகனங்களைச் செலுத்த வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு ஆலோசனை வழங்கியுள்ளது. (ச)

# வாசிப்பு மாத போட்டிகள்

பளை,நவ.7

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பிரதேச மாணவர்களுக்கான போட்டிகளை இன்றும் நாளை மறுதினமும் நடத்தவுள்ளனர். பொது நூலக மண்டபத்தில் போட்டிகள் நடைபெறும்.

இன்று ஆங்கில சொல்வதெழுதல், சித்திரம், கட்டுரைப் போட்டிகளும் நாளை மறுதினம் தரம்-1, தரம்-2 மாணவர்களுக்கான கதைகூறல், தரம்-3 மாணவர்களுக்கான திருக்குறள் மனனம், தரம்-10,11 வகுப்பு மாணவர்களுக்கான பொது அறிவு வினா விடைப் போட்டியும் இடம்பெறுமென பிரதேச சபைத் தலைவர் எவ்.டி.அன்ரன் அறிவித்துள்ளார்.

(த-9)

# கூட்டுறவுப் பணியாளர்களின் ஒழுக்கம் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு கல்வி அபிவிருத்தித் திட்டத்தினால் நடத்தப்படும் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும், நேற்று செவ்வாய்க்கிழமையும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான கருத்தரங்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் 'கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் நடத்தையும், குற்றங்களும் அதன் வகைகளும்' என்னும் தலைப்பில் யாழ்மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன், 'ஆரம்ப விசாரணையும் அதற்கான நடைமுறைகளும், தீர்மானங்கள் எடுத்தலும்' என்னும் தலைப்பில் வடமாகாண தலைமை அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள்.

இரண்டாம் நாள் கருத்தரங்கில் 'குற்றப் பத்திரம் வழங்கல், விளக்கம் கோரல் நடைமுறைகள்' என்னும் தலைப்பில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் வி.கே. சிவராசசுந்தரமும், விசாரணை உத்தியோகத்தர் நியமனம்-விசாரணை ஒழுங்கு முறைகள்', 'காண்புகள், காண்புகளின் படியான தீர்ப்பு வழங்கல்-தண்டனைகளின் வகைகள்', 'மேன்முறையீடு- நடைமுறைகள் மேன்முறையீட்டு தீர்ப்பு' ஆகிய தலைப்புக்களில் ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தியும் கருத்துக்களை வழங்கினார்கள்.

இந்தக் கருத்தரங்கில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

(த-13)

# உடுப்பிட்டி முன்பள்ளிக்கு மாவை எம்.பி நிதி உதவி

வலி.வடக்கு,நவ.7

உடுப்பிட்டி இலகடி இராசலிங்கம் சனசமூக நிலையத்தின் முன்பள்ளிச் சிறார்களின் மலசல கூடத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபாவை இதற்கென வழங்கியுள்ளார்.

இராசலிங்கம் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி சிறார்களின் மலசலகூடத் தேவையைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் இந்த நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார்.

இதன் மூலம் முன்பள்ளிச் சிறார்கள் 65 பேர் பயனடைவதுடன் சனசமூக நிலையத்தைப் பயன்படுத்தும் வாசகர்களும் நன்மை அடைவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உரிமைகள் மறுக்கப்பட்டால் ஜனநாயக வழியில் போராடுவோம்

## மன்னார், பனங்கட்டிக் கொட்டு மீனவர் சங்கம் அறிவிப்பு

மன்னார்,நவ.7

மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் தொடர்ந்தும் தமது உரிமைகள் மறுக்கப்படுமாயின் தாம் ஜனநாயக வழியிலான போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக மன்னார் பனங்கட்டிக் கொட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினர் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடற்பரப்பில் தென்பகுதி மீனவர்கள் அத்துமீறி வருகை தந்து மீன் பிடிப்பதால் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகவும் அவர்கள் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த மூன்று தசாப்த காலமாக எமது பிரதேசம் போரால் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் இங்குள்ள மீனவர்கள் தமது உடைமை, சொத்து,தொழில் அனைத்தையும் இழந்தனர்.

இவ்வாறான நிலையில் கடற்றொழில் செய்வதற்கு விதிக்கப்பட்ட பல்வேறு வகையான 'பாஸ்' நடைமுறைகள், க ட்டுப்பாடுகள், கெடுபிடிகள் காரணமாக நாம் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டோம்.

தென்பகுதி மீனவர்கள் கடந்த காலங்களில் எமது பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வந்தார்கள். அவர்களுக்கு கடற்றொழில் பாஸ் நடைமுறையில் அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. தற்போதைய அமைதிச் சூழலிலும் எம்மால் தொழில் செய்ய முடியாதுள்ளதை நினைத்து எமது மீனவர்கள் வேதனைப் படுகின்றார்கள்.

வட பகுதி மீனவர்கள் முப்பது வருடமாக போரால் பாதிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு கடற்தொழில் அமைச்சர் வெளி மாவட்ட மீனவர்கள் வடபகுதிக்கு கடற்றொழிலின் நிமித்தம் செல்ல வேண்டாம் என்று அடிக்கடி தெரிவித்திருப்பதாக நாம் அறிகின்றோம்.

இந்த நிலையில் தென் பகுதி மீனவர்களின் வருகை தொடர்பாக கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி தலைமன்னார் கடற் படைத் தளத்தில் கடற்படை உயர் அதிகாரிகள், மன்னார் கடற்றொழில் பணிப்பாளர், தென் பகுதி மீனவர் பிரதிநிதிகள், எமது சங்கம், தலைமன்னார், சிலாவத்துறை மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கிடையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது 50 இற்கு மேற்பட்ட படகுகளை அனுமதிப்பதனால் எமது வாழ்வாதாரம், பாதிக்கப்படும் என்பதை நாம் விளக்கமாக எடுத்துக் கூறி இந்த ஆண்டு 50 தென்பகுதி படகுகளை மட்டுமே சௌத்பார் பகுதிக்கு தொழில் செய்ய அனுமதிப்போம் எனவும் தெரிவித்தோம்.

அப்போது உதவி கடற்றொழில் பணிப்பாளர் கடற்தொழில் அமைச்சர் இந்த ஆண்டு 65 தென்பகுதி படகுகளை அனுமதிக்குமாறு தமக்கு அறிவுறுத்தியிருப்பதாக அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

நீண்ட விவாதங்களின் பின்னர் அமைச்சரின் வேண்டுகோளுக்கு அமைவாக 65 படகுகளை மட்டும் இவ் வருடம் சௌத்பார் பகுதிக்கு நாம் அனுமதித்துள்ளோம்.

ஆனால் கடந்த 28 ஆம் திகதி தென்பகுதி மீனவர்களின் வருகை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எமது சங்கத்தினருக்கும் தள்ளாடி இராணுவ முகாம் அதிகாரிகளுக்கும் இடையில் இடம் பெற்றது. அதில் தென்பகுதியில் இருந்து வரும் 108 படகுகளை சங்கம் அனுமதிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாம் எமது மீனவ சமூகத்தின் கடந்த கால நிலைமைகள் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினோம்.

இரண்டு வருடங்களுக்கு முன் சௌத்பார் கடற்கரை பகுதிகளில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டுவாடிகளை அவர்கள் அகற்ற மறுக்கின்றனர்.

இதனால் எமது மீனவர்களால் பாரம்பரிய கரைவலைத் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது.

ஒரு வருடத்தில் குறித்த பருவ காலத்தில் 6 மாதங்கள் மட்டுமே நாம் தொழில் செய்கின்றோம். ஆனால் தென்பகுதி மீனவர்கள் தென் பகுதியில் முதல் 6 மாத பருவ காலத்தில் தொழில் செய்து விட்டு எமது பகுதியில் பருவ காலம் தொடங்கும் போது இங்கு வந்து மிகுதி 6 மாதம் எமது தொழில், வாழ்வாதாரத்திற்கு இடையூறு ஏற்படுத்துவதை எம்மால் அனுமதிக்க முடியாது.

மேலும் 108 படகுகளுக்கு சங்கம் பாஸ் வழங்க மறுத்ததால் அவர்களுக்குத் தாம் கடற்படையூடாக பாஸ் வழங்கி அவர்களை எமது சௌத்பார் பகுதியில் தொழில் செய்ய அனுமதிக்கப் போவதாக இராணுவம் தெரிவித்துள்ளது. இதனை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

தடை செய்யப்பட்ட வலைகள் மூலமாக தொழில்கள் அங்கு உருவாக்கப்பட்டு வருகின்றன. தற்போது இந்தியாவிலிருக்கும் எமது மீனவர்களும் படிப்படியாக நாடு திரும்பிக்கொண்டிக்கின்றனர். நாங்கள் இந்த நாட்டு மக்கள். நாம் எமது உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம் என இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## மாதர் சங்கத்தினால் வாழ்வாதாரக் கடன்கள்

கிளிநொச்சி,நவ.7

கிளிநொச்சி, பூநகரி சின்னப்பல்லவராயன் கட்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் சுழற்சி முறையில் வாழ்வாதாரக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சின்னப்பல்லவராயன் கட்டுக்கிராமத்தில் கிராம மட்ட அமைப்புக்களை வலுப்படுத்தும் வகையில் கடந்த 2002 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏழு லட்சத்து 84 ஆயிரம் ரூபா நிதியைக் கொண்டு சுழற்சி முறையில் பல்வேறு வாழ்வாதாரக்கடன்களை வழங்குவதுடன் ஒரு முன் மாதிரியான அமைப்பாகவும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிதியைக் கொண்டு கடந்த 2008ஆம் ஆண்டு வரை பல்வேறு சுழற்சி முறைக்கடன்களை வழங்கி வந்த நிலையில் அப்போது ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக கடன்களை அறவிட முடியாத நிலை ஏற்பட்டது.

2010 ஆம் ஆண்டு இடம் பெற்ற மீளக்குடியமர்வின் பின்னர் மீண்டும் சுழற்சி முறைக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# திருக்கேதீஸ்வரம் ஆலய நிர்வாகத்தில் மன்னார் இந்துக்களுக்கு இடமில்லை

## விசனம் தெரிவிக்கின்றனர் சொந்த ஊர் மக்கள்

மன்னார்,நவ.7

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் போது மன்னாரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று இங்குள்ள இந்து மதத்தைச் சேர்ந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்த ஆலயம் நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவ தலமாகும். மேலும் மன்னாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சிறப்புடன் காணப் படுகின்றது.

ஆனால் இந்த ஆலயத்துக்கு நிர்வாகிகளைத் தெரிவு செய்யும்போது முக்கிய பதவிகளைப் பொறுத்தவரையில் தாம் புறக்கணிக்கப்படுவதாக இங்குள்ள இந்து மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக ஆலயத்தின் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் உள்ளவர்களுக்கு பல கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தற்போது நிர்வாக சபையில் அங்கத்துவம் வகிக்கும் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவர்களே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர் என்றும் அவர்கள் மன்னார் மக்களைப் பொருட்படுத்துவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரில் திருக்கேதீஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள போதிலும் ஆலயம் தொடர்பான கூட்டங்கள் கொழும்பிலேயே இடம்பெறுவதாகவும் தனிமனித ஆதிக்கமும் ஒரே குடும்பத்தவரின் அதிகாரமும் நிலவி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காதவர்கள் ஆலயத்தின் பதவிகளுக்கு அலைமோதுகின்றனர் என்றும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே எதிர்காலத்தில் மன்னார் இந்துக்களுக்கு ஆலய நிர்வாகத்தில் முக்கிய பதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஆலயக் கூட்டங்கள் யாவும் ஆலயத்திலேயே இடம்பெறவேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க-12)



வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய திருமூலர் விழாவில் திருமந்திரக் கருத்தரங்கை ஆரம்பித்து தமிழருவி த.சிவகுமாரன் உரையாற்றினார். நிகழ்வுக்கு வருகை தந்த பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். (க-400)

## இராணுவப் புலனாய்வாளர் எனக்கூறி மக்களை அச்சுறுத்தும் பேர்வழிகள்

### கண்டாவளையில் அடாவடித்தனம்

கிளிநொச்சி,நவ.7

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் இராணுவப் புலனாய்வாளர்களெனத் தெரிவிக்கும் சிலர் விவரங்களைச் சேகரித்து வருவதால் மக்களிடையே பதற்றமானதொரு சூழல் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டாவளை பிரதேசத்திலுள்ள புன்னைநீராவி, விசுவமடு, முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை ஆகிய இடங்களிலுள்ள குறிப்பிட்ட சில வீடுகளுக்கு கடந்த மூன்று நாள்களாகச் சென்று வரும் இராணுவப் புலனாய்வாளர்கள் எனக் கூறிக்கொண்டு சிலர் அந்தப் பகுதிகளிலுள்ள இளம் குடும்பத்தர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் பற்றிய விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

அத்துடன் கடந்த போரின் போது உடல் அவயவங்களை இழந்த சிலரை அச்சுறுத்தி விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்ததாகக் கூறி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை முரசுமோட்டை, ஊரியான் கிராமத்திலுள்ள வீடொன்றுக்குச் சென்றவர்கள் அங்குள்ளவர்களைக் கடுமையாக அச்சுறுத்தியுள்ளதாகவும் வேறு சிலரின் பெயர் விவரங்களைக் கேட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனால் இந்தப் பிரதேசத்தில் பெரும் அச்சநிலை காணப்படுகின்றது.

மேலும் இது தொடர்பாக உரிய தரப்பினரிடமும், மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறையிடப்போவதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## கடற்றொழிலில் ஈடுபடுமாறு அறிவித்தல்

முல்லைத்தீவு,நவ.7

மீனவர்களை கடற்றொழிலில் ஈடுபடுமாறு முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீரான காலநிலை நிலவுவதையடுத்து இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

கடந்த சில நாள்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் வீடுகளில் முடங்கியிருந்தனர். இதனால் இவர்கள் தமது அன்றாடச் செலவுகளைச் சமாளிப்பதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் சமாசத் தலைவரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# மந்துவிலில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்தால் உதவிகள்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் மீள்குடியமர்ந்த 517 குடும்பங்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்தால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் மீள்குடியமர்ந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மந்துவில் கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்ந்த சுமார் 517 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் உணவல்லாத பொருள்கள் என்பன நேற்று முன்தினம் உலக உணவு ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டன.

இந்தப் பொருள்களை வழங்கும் நிகழ்வில் இந்தப் பகுதிக்கான கிராம அலுவலர், மற்றும் மந்துவில் கிராம அமைப்புகள் கலந்து கொண்டு மேற்படி பொருள்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் மின்நிலையம் அருகே குடிதண்ணீர் கிணறுகளில் ஒயில்

## அபாயகரமான நிலைமை ஏற்படும் என ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

**கடந்த பல வருடங்களாக இந்த நிலைமை காணப் படுகின்ற போதிலும் கடந்த சில மாதங்களாக குடி தண்ணீர் கிணறுகளில் கழிவு ஒயில் கலக்கும் அளவு அதிகரித் துள்ளதாகவும் அதனால் பெரும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், நவ.7

சுன்னாகம் பிரதேசத்திலுள்ள கிணறுகளில் கலக்கும் கழிவு ஒயிலினால் எதிர் காலத்தில் மக்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடிய அபாய நிலைமை காணப் படுவதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் எச்சரித் துள்ளனர்.

வலி.தெற்கு உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று திங் கட்கிழமை பிரதேச செய லக மாநாட்டு மண்டபத் தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் மு.சந்திர குமார் தலைமையில் நடை பெற்றது.

மின் நிலையத்திலுள்ள ஜெனரேற்றர்களுக்குப் பயன் படுத்தப்படும் ஒயிலே இவ் வாறு குடி தண்ணீர் கிணறு களில் கலப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரி கள் சுன்னாகம் மின்சார சபைக்கு அருகாமையில் உள்ள கிணறுகளில் நாளுக்கு நாள் ஒயில் கலப்பதாகவும் இந்தக் கிணறுகளில் இருந்து பெறப்படும் குடி தண் ணீரைப் பருகுவதால் பெரும் நோய்த் தாக்கம் ஏற்பட்டு வருவதாகவும், உடனடியாக இல்லாது போயினும் எதிர் காலத்தில் இத்தகைய தாக் கத்துக்கு இந்த மக்கள் முகம் கொடுக்க நேரிடும் எனவும் எச்சரித்துள்ளார்.

கடந்த பல வருடங்க ளாக இந்த நிலைமை காணப் படுகின்ற போதிலும் கடந்த சில மாதங்களாக குடி தண் ணீர்க் கிணறுகளில்கழிவுஒயில் கலக்கும் அளவு அதிகரித் துள்ளதாகவும் அதனால் பெரும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக வும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

நீர் வழங்கல் வடிகால மைப்பு அதிகார சபை இந் தப் பகுதியிலுள்ள கிணறுக ளில் இருந்து பெறப்பட்ட நீர் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டபோது அதில் ஒயில் கலந்துள்ளமை உறுதிப் படுத்துப்பட்டது.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் செலுத்தாவிட்டால் விபரீதமான விளைவுகள் ஏற்படும் எனவும் எச்சரிக்கப் பட்டுள்ளது. (த-86)

# வறுமையான குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சு விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.7

கோப்பாய் பிரதேச செய லர் பிரிவில் வறுமைக் கோட் டின் கீழ் உள்ளவர்களுக்கு கோழிக்குஞ்சுகள் விநி யோகிக்கப்படவுள்ளன.

இந்தப் பகுதியில் 160 குடும்பங்களுக்கு பத்துக் கோழிக்குஞ்சுகள் வீதம் வழங் கப்படவுள்ளன.

எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 42 பயனா ளிகளுக்கு இந்தக் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப் படவுள்ளன.

ஏற்கனவே இந்தப் பகுதி யில் உள்ள 15 குடும்பங் களுக்கு கோழிக்குஞ்சுகளும் அதற்கான கோழி பராமரிப்புக் கூடுகளும் வழங்கப்பட்டன.

மக்களின் வாழ்வாதார தொழிலை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டத் தின் கீழ் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (த-17)

# சங்கானை மக்களின் குறைகளை கேட்டறிந்தார் சரவணபவன் எம்.பி.

சங்கானை, நவ.6

சங்கானை பகுதியில் அமைந்துள்ள நிகரை அம் பாள் சனசமூக நிலையம் மற் றும் மாவடி சனசமூக நிலையங் களுக்கு அண்மையில் பய ணம் மேற்கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் ஈ.சரவணபவன் இவற்றின் தேவைகள், பிரச்சினைக ளைக் கேட்டறிந்து கொண்டார்.

மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை மேற்படி நிலையங்களில் அங்கத்த வர்களோடு கலந்துரையாடி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

அவரின் தேவைகள் சம் பந்தமான விவரங்களை, பிரதேச சபைத் தலைவரி டம் எழுத்துமூலம் தெரிவிக் கும்படியும் அவர் தெரிவித்தார்.

மேற்படி மூன்று நிலை யங்களிலும் பல பொது மக் கள் கலந்து கொண்டு, தத் தமது பிரச்சினைகளை நாடா ளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர். (த-29)

# சுகாதாரப் பரிசோதகர் மீது மிக மோசமான தாக்குதல்

## சந்தேகநபர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ. 7

கடமையில் இருந்த நல் லூர் சுகாதார வைத்திய அதி காரி பணிமனைக்குட்பட்ட பொதுச்சுகாதாரப் பரி சோதகர் கடுமையாகத் தாக் கப்பட்டு, சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அவரைத் தாக்கிய சந்தேக நபரைச் சம்பவ இடத்தில் வைத்து கோப்பாய் பொலி ஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் திரு நெல்வேலி பாரதிபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது. சம்பவத்தில் நல்லூ ரைச் சேர்ந்த க.மதனகுமார் என்பவரே காயமடைந்தார்.

மாதர் சங்கத்தினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் ஒன்றிணைந்து பாரதிபுரத்தில் நேற்றுமுன் தினம் டெங்குக் கட்டுப் பாட்டு நடவடிக்கையில் ஈடு பட்டிருந்தனர். அதன்போது அந்த இடத்துக்கு வந்த அதே இடத்தைச் சேர்ந்த பிரஸ் தாப சந்தேகநபர் பணியில் ஈடுபட்டிருந்த பெண்களு டன் முரண்பட்டுள்ளார். 'வேறு இடங்களில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பணிகளை முன்னெடுக்காது, இங்கு தான் செய்வீர்களோ' என்று கேட்டு அந்தப் பெண்களு டன் முரண்பட்டுள்ளார். இதுதொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மதன குமாருக்குத் தெரிவிக்கப்பட் டது. சம்பவ இடத்துக்கு வந்த மதனகுமார் அந்தச் சந்தேக நபரிடம் அது தொடர்பாக வின வியபோதே அவர் மதனகுமா ரைத் தாக்கியுள்ளார்.

முகத்திலும், நெஞ்சுப் பகுதியிலும் காயமடைந்த அவர் உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். சம் பவ இடத்தில் வைத்து குறித்த சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்தனர். (த-4)



காரைநகர் கோவளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் பனை விதை நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் ஆரம்ப நிகழ்வு காரைநகர் வலந்தலையில் இடம்பெற்றபோது தேசிய சேமிப்பு வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் எஸ்.கங்காதரன் பனை விதை நடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அருகில் இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் இ.சிவகுமாரன், காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் வீ.கண்ணன், கோவளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக்குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-250)

# நீர்வேலி கைதடி வீதியில் 3 ஆயிரம் பனம் விதைகள்

யாழ்ப்பாணம், நவ.7

நீர்வேலி - கைதடி இணைப்பு வீதியின் இரு பக் கங்களிலும் சுமார் 3 ஆயிரம் பனம் விதைகள் கடந்த திங் கட்கிழமை நடப்பட்டதாக வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.உதய குமார் தெரிவித்தார்.

இந்தப் பனம் விதை நடுகைத் திட்டத்துக்கு பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் முழுமையான ஆதரவு வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

ஏற்கனவே கோப்பாய் தரவையில் இருந்து வல்லை வரையான பகுதிகளில் இந்த பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

அதனைவிட வலி.கிழக் கில் பொது இடங்கள், பாட சாலை வளாகங்கள் போன் றவற்றிலும் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள் ளன என்றும் அவர் கூறி னார். (த-17)

# உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் நேற்று சாவகச்சேரியில் கௌரவிப்பு

தென்மராட்சி, நவ .7

சாவகச்சேரி நகரசபை யின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று செவ் வாய்க்கிழமை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் உள்ளூராட்சி சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்த 12 உத்தியோகத் தர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நகரசபை தலைவர் இ.தேவ சகாயம் பிள்ளை தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல் லூரி அதிபர் க. அருந்தவ பாலனும், சிறப்பு விருந்தினர் களாக சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை முகாமையா ளர் யோ. சேதுகாவலர், சாவ கச்சேரி நகரசபை செயலா ளர் க. புத்திசிகாமணி, சாந்தி கம் நிறுவனத் தலைவர் திரு மதி சிறோமினி லெனாட், யாழ். பிராந்திய நல்லொழுக்க சம்மேளனச் செயலாளர் க.குமாரகுலசிங்கம் சாவகச் சேரி, இந்துக்கல்லூரி பிரதி அதிபர் ந. பாலச்சந்திரன் உட் பட பலர் கலந்து கொண்டனர்.

யாழ். கல்வி வலய உள நலப் பிரிவு ஆகிய ஆலோச கர் திருமதி புத்திசிகாமணியி னால் தயாரிக்கப்பட்ட உள நல குறும்படமும் சண்டிலிப் பாய் பிரதேச செயலக உத்தி யோத்தகர்களின் விடிய லைத் தேடி நாடகமும் காண் பிக்கப்பட்டன.

நிகழ்வில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தி பெற்று வலய மட் டத்தில் முதல் மூன்று இடங்க ளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு, சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 பாட சாலைகளிலிருந் தும் தெரிவு செய்யப்பட்ட 41 மாணவர்களுக்கு நல்லொழுக் கத்துக்கான விருது, வழங்கல், உள்ளூராட்சி வாரத்தை யொட்டி நடத்தப்பட்ட போட் டிகளில் வெற்றி பெற்றோருக் கான விருதுகள் வழங்கல், உள்ளூராட்சி சேவையில் 25 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்த 12 உத்தியோகத் தர்களுக்கான கௌரவிப்பு என்பன இடம்பெற்றன. (த-9)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி விழிப்புணர்வு வேகநடைப் பவனி

தென்மராட்சி, நவ.7

சாவகச்சேரி நகரசபை யின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வை யொட்டி விழிப்புணர்வு வேக நடை பவனி நேற்று செவ்வாய்க் கிழமை இடம் பெற்றது.

சாவகச்சேரி ஆதார வைத் தியசாலை முன்பாக நகரசபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கொடியசைத்து பவ னியை ஆரம்பித்து வைத்தார்.

பவனியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, டிறிபேக் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகி யவற்றின் மாணவர்கள் விழிப் புணர்வு பதாகைகளை வேக நடையாக நகரசபை அலுவல கம் வரை சென்றனர்.

உள்ளூராட்சி வாரத்தின் தொனிப்பொருளாகிய செயற் திறனுள்ள உள்ளூராட்சிசேவை யின் மூலம் சுபீட்சமான ஓர் எதிர்காலம் உலக உளநல தின தொனிப்பொருளாகிய 'விரும்பத்தக்க மனிதர்களாக நம்மை நாமே செதுக்கு வோம்'

டெங்கு ஒழிப்பு வாரத் தின் தொனிப் பொருளான ' டெங்குநோயை கட்டுப்படுத்த நாம் ஒன்றிணைவோம்', உலக சுற்றாடல் மாத தொனிப் பொருளாகிய ' சுற்றாடல் எம் மைக்காக்கும் நாம் சுற்றாட லைக் காப்போம்' என்னும் பதாகைகள் தாங்கிய வண் ணம் மாணவர்களுடன் நகர சபை உத்தியோகத் தர்களும் பவனியாகச் சென்றனர். (த-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க.தலைவர் நிதின் கட்காரி மீது மூத்த தலைவர்கள் அதிருப்தி





நிதின் கட்காரி கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ஜ.கவின் தேசிய செயற்குழு உறுப்பினர் பதவியில் இருந்து ராம் ஜெத்ம லானி மகன் மகேஷ் ஜெத்மலானி பதவி விலகினார்.

டில்லி, நவ.7

பாரதீய ஜனதாக்கட்சித் தலைவராக நிதின் கட்காரி தொடர்வதில் கட்சியின் மூத்த தலைவர்கள் அதிருப்தியில் உள்ளதாக அந்தக் கட்சி சார்பில் ராஜ்யசபா நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள ராம்ஜெத்மலானி தெரிவித்தார்.

போபாலில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய தலைவர், நிதின் கட்காரி, எல்லோருக்கும் ஒரே மாதிரியான புத்திக்கூர்மைதான் உள்ளது. விவேகானந்தருக்கும் தாவூத் இப்ராஹிமுக்கும் ஒரே மாதிரியான புத்திக்கூர்மைதான் இருந்தது என்று கூறியதாகத் தகவல்கள் வெளியாகின.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ஜ.கவின் தேசிய செயற்குழு உறுப்பினர் பதவியில் இருந்து ராம் ஜெத்மலானி மகன் மகேஷ் ஜெத்மலானி பதவி விலகினார்.

இந்தநிலையில் நேற்றுக் காலை தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த ராம்ஜெத்மலானி தெரிவித்ததாவது:-

கட்காரி பா.ஜ.க. தலைவராகத் தொடர்வதில் மூத்த தலைவர்கள் அதிருப்தியில் உள்ளனர். அவர் தலைவராக தொடர்வதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். கட்காரி விவகாரம் தொடர்பான எனது கருத்துகளுக்கு எந்த பா.ஜ., தலைவர்களும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. மூன்று தலைவர்கள் என்னுடன் தொடர்பில் உள்ளனர் - என்றார்.

**நிதின்கட்காரி மறுப்பு**

சுவாமி விவேகானந்தரையும், நிழலுலகத் தாதா தாவூத் இப்ராஹிமையும் ஒப்பிட்டு பேசவில்லை என்று நிதின் கட்காரி தெரிவித்துள்ளார். (வ)

## மாயாவதி மீதான ஊழல் வழக்குகள் தள்ளுபடி



தாஜ் காரிடர் வணிக வளாக வழக்கில் உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் மாயாவதிக்கு எதிரான 7 மனுக்களை அலகாபாத் உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்தது

தாஜ் காரிடர் வணிக வளாகத் திட்டம் 2002ஆம் ஆண்டு மாயாவதியால் ஆரம்பிக்கப்பட்டது. அதில் சுமார் 17 கோடி ரூபா அளவுக்கு ஊழல்கள் நடந்ததாக எழுந்த முறைப்பாட்டின் அடிப்படையில் 2003 ஆம் ஆண்டு சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

2007 ஆம் ஆண்டில் மாயாவதி மீது சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. மேற்படி வழக்குத் தொடர்பாக மாயாவதிக்கு எதிராக 7 பொதுநலன் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த மனுக்கள் மீதான விசாரணை அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது மாயாவதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மேற்படி மனுக்கள் அனைத்தும் அரசியல் பழிவாங்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று கூறினார்.

அவரது புகழுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் வாதிட்டார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், மாயாவதிக்கு எதிரான பொது நலன் வழக்குகளை நிராகரிப்புச்செய்து உத்தரவிட்டது.

## நூலிழையில் தப்பினார் மிசோரம் மாநில முதல்வர்

மோசமான வானிலையால் மிசோரம் மாநில முதல்வர் பயணித்த விமாணம் விபத்து ஏற்படாமல் தரையிறக்கப்பட்டதால் அவர் நூலிழையில் உயிர் தப்பினார்.

மிசோரம் முதல்வர் லால் தங்ஹாவாலா, ஏர் இந்தியா விமானம் மூலம் கொல்கத்தாவிலிருந்து தலைநகர் அசிவாலுக்குப் புறப்பட்டார்.

ஆனால் மோசமான வானிலை காரணமாக, மீண்டும் அசிவால் விமான நிலையத்திலேயே விமானம் நள்ளிரவில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

எனினும் மோசமான நிலையில் விமானம் விபத்தில் இருந்து தப்பியது. (வ)




மீனவர்கள் தொடர்பான, பா.ஜ.கவின் தேசிய கொள்கை வெளியீட்டு விழா டில்லியில் நடைபெற்றது. நிகழ்வில் பா.ஜ.க. தலைவர் நிதின் கட்காரி, லோக்சபா எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ், கட்சிக் கொள்கை அடங்கிய நூலை வெளியிட்டனர்.

## மீன்பிடிக்கச் சென்ற குமரி மீனவர் 6 பேரைக் காணவில்லை

குமரி, நவ.7

குமரி அருகே மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 6 பேர் காணமற் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் வாவாதுறையைச் சேர்ந்தவர் ஜேர்மானஸ். அவருடைய விசைப்படகில் அதே பகுதியைச் சேர்ந்த போஸ், ஜூலிட், எட்வின், கெவின், கெஸ்டஸ், சுபின் ஆகிய 6 மீனவர்கள் கடந்த 31 ஆம் திகதி கன்னியாகுமரியிலிருந்து மீன் பிடிக்கச் சென்றனர்.

அவர்கள் சனிக்கிழமை கரை திரும்பியிருக்க வேண்டும். ஆனால் நேற்று முன்தினம் காலை வரை கரை திரும்பவில்லை.

அதையடுத்து அவர்களின் உறவினர்கள் இது குறித்து கன்னியாகுமரி மீன்துறை உதவி இயக்குநருக்கு தகவல் கொடுத்தனர். அவரது உத்தரவின்பேரில் மீனவர்களைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஒரு 'சிம்' அட்டையிலிருந்து நாளொன்றுக்கு 100 எஸ்.எம்.எஸ்.

### புதிய விதி விரைவில் நடைமுறைக்கு

*சலுகைக் கட்டணத்தில் ஒரு நாளைக்கு ஒரு சிம் அட்டையிலிருந்து100 எஸ்.எம். எஸ். மட்டுமே அனுப்ப முடியும் என்ற புதிய கட்டுப்பாடு விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது.*

*சில நிறுவனங்கள் தற்போது வழங்கும் சலுகை எஸ்.எம்.எஸ். திட்டத்தைப் பயன்படுத்தி, தொலைபேசி மூலம் சந்தைப்படுத்தும் பதிவுசெய்யாத நிறுவனங்கள், எல்லோருக்கும் எஸ்.எம்.எஸ்களை அனுப்பி வருகின்றன. புதிய விதியின் மூலம் இதனை நடைமுறைப்படுத்த முடியாது*

*இதுகுறித்து டிராய் முதன்மை ஆலோசகர் என்.பரமேஸ்வரன் கூறுகையில், ஒரு சிம் கார்டிலிருந்து ஒரு நாளைக்கு 100 எஸ்.எம்.எஸ். மட்டுமே சலுகைக் கட்டணத்தில் அனுப்பலாம். கூடுதலாக அனுப்பினால் ஒரு எஸ்.எம்.எஸ் ஸுக்கு குறைந்தபட்சம் 50 சதம் கட்டணம் விதிக் கப்படும். இந்த உத்தரவு இன்னும் 15 தினங்களுக்குள் நடைமுறைக்கு வரும். செல்போன் நிறுவனங்கள் 3 மாதங்களுக்குள் ஒரே எண்ணிலிருந்து ஒரே மாதிரி யான வணிக எஸ்.எம்.எஸ்கள் அனுப்பத் தடை விதிப்பதை உறுதிசெய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.*

## அவதூறு வழக்கில் முன்னிலையாக விஜயகாந்த்துக்கு உத்தரவு



நாமக்கல்,நவ.7

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசிய வழக்கில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் முன்னிலையாக வேண்டும் என்று நாமக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில் முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியதாக விஜயகாந்த் மீது நாமக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அரசு தரப்பு சட்டத்தரணி தனசேகரன் வழக்குத் தொடர்ந்தார். இதனையடுத்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி முன்னிலையாக வேண்டும் என்று நாமக்கல் முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி வேலு உத்தரவிட்டார். (வ)

## நில அபகரிப்பு முறைப்பாடு குறித்து நித்தியின் சீடர்களிடம் விசாரணை

தானமாகக் கொடுத்த நிலத்தை, விலைக்கு வாங்கியதுபோல் நித்தியானந்தாவின் ஆதரவாளர்கள் பத்திரம் பதிவு செய்துள்ளனர்.

சென்னை,நவ.7

நித்தியானந்தாவின் சீடர்களிடம் நில அபகரிப்பு முறைப்பாடு தொடர்பில் விசாரணை இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் சீரகாபாடியைச் சேர்ந்த விவசாயி குணசேகரன், தனது 50 செண்ட் நிலத்தை ஆசிரமம் அமைக்க நித்தியானந்தாவுக்குத் தானமாகக் கொடுத்துள்ளார்.

ஆனால் தானமாகக் கொடுத்தநிலத்தை,விலைக்கு வாங்கியதுபோல் நித்தியானந்தாவின் ஆதரவாளர்கள் பத்திரம் பதிவு செய்துள்ளனர்.

இதை அறிந்த குணசேகரன் கடந்த 3 ஆம் திகதி சேலம் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் நித்தியானந்தா மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நில அபகரிப்பு முறைப்பாடு அளித்துள்ளார்.

மேற்படி முறைப்பாடு தொடர்பாக விவசாயி, நித்தியானந்தாவின் சீடர்கள் சென்னைகிருஷ்ணன், சக்தி உள்பட 4 பேர் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்துக்கு வரவழைக்கப்பட்டனர். பின்னர் அவர்களிடம் மாவட்ட எஸ்.பி. அஸ்வின் கோட்னீஸ் விசாரணை நடத்தினார்.

இதுகுறித்து மாவட்ட எஸ்.பி. அஸ்வின் கோட்னீஸ் கூறுகையில் முறைப்பாடு மனு மீது நில அபகரிப்பு தடுப்புப் பிரிவு டி.எஸ்.பியும் விசாரணை மேற்கொண்டுள்ளார்-என்றார். (வ)

## பெரியார்களின் படங்களை அகற்றிய அ.தி.மு.கவைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




சென்னை, நவ.7

பெரியார், அண்ணா, அம்பேத்கர் படங்களை அகற்றிய அ.தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்களைக் கண்டித்து திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய திராவிட இயக்கத் தமிழர் பேரவைதலைவர்சுப.வீரபாண்டியன் தெரிவித்ததாவது:-

அம்பேத்கர், பெரியார், அண்ணா ஆகியோர் படங்களை சேலம் சங்கர் நகரில் உள்ள ஆதி திராவிடர் நல பெண்கள் விடுதியில் இருந்து அ.தி.மு.கவின் சட்ட மன்ற உறுப்பினர்கள் அகற்றியுள்ளனர். இதுவரை இது தமிழ்நாட்டில் நடந்திராத கொடுமை. பவானி சட்ட மன்ற உறுப்பினர் நாராயணனும், தேனி சட்டமன்ற உறுப்பினர் தங்கதமிழ் செல்வனும் அந்தக் குழுவில் இருந்துள்ளனர். அரசு சார்பில் [illegible] அவர்கள் அரசினால் பாராட்டப்படுகின்ற, என்றைக்கும்மதிப்புக்கொண்ட பெரியார், அண்ணா, அம்பேத்கர் ஆகியோர் படங்களை அகற்றியிருக்கும் அந்தக் கொடுமையைக் கண்டித்தும், அவர்களை உடனடியாக தமிழக முதலமைச்சர் தண்டிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், திருவரங்கத்திலே மறுபடியும் புதிதாக முளைத் திருக்கிற பிராமணாள் கபே என்பதை நீக்க வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்தும் இந்த ஆர்ப்பாட்டம் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் நடத்தப்பட்டது-என்றார். (வ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



லியோவில் நடைபெற இருக்கும் ஏ.எஸ்.இ.எம்., மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற தாய்லாந்தின் பிரதமர் சின்வத்ராவை லியோ ஜனாதிபதி சௌமாலி சாயாசோன் வாழ்த்தி வரவேற்றார்.

## இரு மின் அணு உலைகளுக்கு தென்கொரியாவில் மூடுவிழா

### போலி உதிரிப்பாகங்கள் சிக்கியதால்

தென்கொரியா தனது இரண்டு அணு உலைகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை திடீரென மூடியுள்ளது.

குறித்த அணு உலைகளில் பொருத்தப்பட்ட சில பாகங்களுக்கு போலி தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

அணு உலையின் குறிப்பிட்ட சில உதிரிப்பாகங்கள் இவ்வாறு போலியானதாக இருந்துள்ளன. இதையடுத்து அவற்றை மாற்றம் செய்யும் வரை அணு உலைகள் இயக்கப்படப் போவதில்லை என்று தென்கொரியாவின் வணிகத்துறை அமைச்சர் ஹோங் சூக் வோ தெரிவித்துள்ளதுடன், இதனால் நாட்டின் பல பாகங்களில் அடுத்து சில மாதங்களுக்கு மின்சாரம் தடைப்படக் கூடும் என்றும் தெரிவித்தார்.

தென்கொரியவின் 23 அணு உலைகள் மூலம் நாட்டின் 35 வீத மின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எனினும் கடந்த சில மாதங்களாக மின் அணு உலைகள் பல பழுதடைந்து வந்தன. அதையடுத்தே இந்த சோதனை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. (வ)



## சீனாவின் தந்தையை கிழித்தெறிந்த இளைஞர்கள்

பீஜிங், நவ 7

சீனாவின் கம்யூனிஸ்ட் தந்தையாக கருதப்படும் மா சே துங்கின் படங்களை இளைஞர்கள் கிழித்தெறிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சீன மக்கள் குடியரசை நிறுவிய மா சே துங் அந்த நாட்டில் கம்யூனிஸ்ட் புரட்சியை முன்னின்றும் நடத்தியவர்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டிருந்த மா சே துங்கின் படங்களை இளைஞர்கள் கிழித்து எரிந்ததோடு மட்டுமல்லாமல், அந்தச் செயலை புகைப்படம் எடுத்து இணையத்தளத்திலும் வெளியிட்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் ஆட்சியில் இளைஞர்கள் வெறுப்படைந்துள்ளதையே இந்தச் சம்பவம் காட்டுவதாக பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞர்களில் ஒருவரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்து, விசாரித்து பின் விடுவித்தனர்.

இதற்கிடையே தங்களுக்குக் கொலை மிரட்டல்கள் வருகின்றன என அந்த இளைஞர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

## நியூயோர்க்கை மிரட்டுகிறது மற்றொரு புயல்



நியூயோர்க், நவ.7

அமெரிக்காவில் நியூயோர்க் நகரை மற்றொரு புயல் தாக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. சான்டி புயலைத் தொடர்ந்து தாக்கவுள்ள இந்தப் புயலையும், எதிர்கொள்ள மக்களைத் தயாராக இருக்குமாறு அமெரிக்கா எச்சரித்துள்ளது.

மேற்படி புயலால் மணிக்கு 40 மைல்கள் வேகத்தில் காற்று வீசும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்தப் புயல் இன்று அமெரிக்காவைத்தாக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. சான்டி புயலிலிருந்து மீண்டுள்ள அமெரிக்காவை மற்றொரு புயல் தாக்கும் என வெளியாகியுள்ள அறிவிப்பு அமெரிக்க மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (வ)

# அமெ., இஸ்ரேலை மிரட்டுவதற்கு ஈரானின் நவீன ஆளில்லா விமானம்

## நின்ற இடத்திலிருந்து செங்குத்தாக பறக்கும்- இறங்கும்


தெஹ்ரான், நவ.7

அமெரிக்காவுக்குப் போட்டியாக அதி நவீன ஆளில்லா விமானங்களை ஈரான் தயாரித்துள்ளது.

அமெரிக்க தயாரிப்பில் உருவாகியுள்ள இவ்வகை விமானங்களுக்கு ஓடுதளம் தேவை. ஆனால் ஈரான் தற்போது தயாரித்துள்ள இந்த விமானங்களுக்கு ஓடுதளம் தேவையில்லை என்று கூறப்படுகிறது.

ஈரானின் அப்பாஸ் ஜாம் என்ற விஞ்ஞானி இதை வடிவமைத்து இருக்கிறார். இதுபோன்ற விமானம் உலகில் தயாரிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

இராணுவத்தினர் உயிரிழப்பதைத் தடுக்க ஆளில்லா உளவு விமானம் டிரோன் மூலம் அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.



டிரோன் விமானங்கள் மூலம் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளில் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது என்று அமெரிக்காவும், இஸ்ரேலும் குற்றம் சாட்டி போர் தொடுப்பதாக மிரட்டல் விடுத்தன. அதை பற்றி கவலைப்படாத ஈரான், பதிலடி கொடுப்போம் என்று எச்சரித்தது.

கடந்த ஒக்ரோபர் மாதம் இஸ்ரேலுக்குள் பறந்த டிரோன் விமானத்தை அந்த நாட்டு படையினர் சுட்டு வீழ்த்தினர். அந்த டிரோனை ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் அனுப்பியதாகவும் டிரோன் பாகங்கள் ஈரானில் தயாரிக்கப்பட்டு லெபனானில் இணைத்து டிரோன் உருவாக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டியது.

இந்தநிலையில், அமெரிக்க, இஸ்ரேல் நாடுகளை எச்சரிக்கும் வகையில், செங்குத்தாக ஏறி இறங்கும் அதி நவீன டிரோனை ஈரான் தயாரித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. டிரோனை இயக்க ஓடுதளம் தேவையில்லை. நின்ற இடத்தில் இருந்து அப்படியே செங்குத்தாகப் பறக்கும். செங்குத்தாகத் தரை இறங் கும். இதனால் நினைத்த இடத்தில் திடீரெனத் தாக்குதல் நடத்த முடியும். உலகிலேயே இது போன்ற டிரோன் உருவாக்கப்படுவது இதுவே முதல் முறை என்று டிரோன் திட்ட ஆராய்ச்சியாளர் அப்பாஸ் ஜாம் தெரிவித்தார். (வ)

## சர்ச்சைக்குரிய தீவுகளில் கண்காணிப்பை பலப்படுத்தும் ஈரான்

பாரசீக வளைகுடாவிலுள்ள சர்ச்சைக்குரிய தீவுகளில் தமது கடற்படையினரின் பிரசன்னத்தை ஈரான் பலப்படுத்தவுள்ளது.

குறித்த மூன்று தீவுகளுக்கும் ஐக்கிய அரபு ராஜ்ஜியம் உரிமை கோரி வரும் நிலையில் தெஹ்ரான் இந்த நகர்வை மேற்கொண்டுள்ளது.

பிரதான மசகு எண்ணெய் போக்குவரத்து மார்க்கமான ஹொர்மூஸ் நீரிணைப் பகுதியில் மேற்படி தீவுகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் குறித்த தீவுகளை ஆக்கிரமிப்பது சர்வதேச சட்டத்துக்கு முரணானது என்று ஐக்கிய அரபு இராஜ்ஜியம் தெரிவித்துள்ளது. (வ)

## புலம்பெயர் கொள்கைகளுக்கு எதிராக கனடாவில் மக்கள் திரண்டு போராட்டம்



ரொரண்டோ, நவ.7

கனேடிய அமைச்சரின் புலம்பெயர்வு கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம் நடத்தினர்.


கனடாவின் ரொரண்டோ நகரில் உள்ள ரோயல் யார்க் ஹோட்டலில் குடியுரிமை மற்றும் புலம்பெயர்வுத் துறை அமைச்சர் ஜேசன் கென்னிக்கு இஸ்ரேலின் ஹைஃபா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

அப்போது ஹோட்டலுக்கு வெளியே நின்று கொண்டிருந்த போராட்டக்காரர்கள் அரசின் புலம் பெயர்வுக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், 'கென்னி ஒழிக', 'யாரும் சட்டவிரோதமான நபர்கள் கிடையாது' போன்ற பதாகைகளை ஏந்தியபடியும் போராட்டம் நடத்தினர்.

இந்தநிலையில் கென்னி யூத எதிர்ப்பையும், இனவாதத்தையும், இனப்பகையையும் தொடர்ந்து வன்மையாக எதிர்த்து வருவதால் டாக்டர் பட்டம் வழங்கு வதாக இஸ்ரேல் பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது. (வ)

## பிரிட்டனில் பனிப்படர்வு

### வெள்ள அபாய எச்சரிக்கை



லண்டன், நவ.7

பிரிட்டனின் மேற்கு மற்றும் தென் பகுதியில் பனி அதிகமாக படர்ந்துள்ளதால், வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் சோமர் செட், வில்ட்ஷயர் மற்றும் டோர் செட் பகுதிகளில் நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது.

பனி உருகத் தொடங்கியுள்ளதால் மேற்படி பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இத்துடன் பேத், புரோம், மிட்சோமர், நார்ட்டன் மற்றும் ரேட்ஸ்டோக் பகுதிகளில் அரையடி உயரத்துக்கும் மேலாக பனி படர்ந்துள்ளது.

இதுகுறித்து வெள்ள இடர் மேலாளர் கிரேக் உல்ஹவுஸ் கூறுகையில், ஆண்டில் கோடை காலத்தில் பெருமழை பொழிந்ததால் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது.

இந்தநிலையில் பனிக் காலத்திலும் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும்போதும் பனி உருகி வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் பிரதமர் வளைகுடா நாடுகளுக்கு சுற்றுப்பயணம்



பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரோன் வளைகுடா நாடுகளுக்கான சுற்றுப் பயணமொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளார்.

அரபு வசந்தம் புரட்சியைத் தொடர்ந்து பிரிட்டனின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் மற்றும் பாதுகாப்பு, வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் முகமாகவே அவர் இந்தச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரோன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் பிலிப் ஹம்மொன்ட்டுபாயைச் சென்றடைந்துள்ளனர். இதன்பின்னர் இவர்கள் சவூதி அரேபியாவுக்குச் செல்லவுள்ளனர்.

டேவிட் கமரோன் பிரிட்டன் பிரதமராக ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவூதி அரேபியாவுக்குச் செல்வது இது இரண்டாவது தடவையாகும்.

இந்நாடுகளின் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பில் அண்மையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோதிலும், ரைபூன் விமானங்களை விற்பனை செய்வதற்கு பிரிட்டன் எண்ணி வருகின்றது.

# சிரியாவில் ஆட்சி மாற்ற முயற்சியா? கணக்கு வழக்கின்றி சாவுகள் வரும்

## எச்சரிக்கிறார் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்

சிரியாவில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான பொறுப்பு ஆட்சி மாற்றம்தான் என்றால் அதிகளவு இரத்தக்கறை இன்னமும் ஏற்படும். மாறாக இந்த பொறுப்பு உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவே என்றால் ஐ.நாவின் எந்தவித தீர்மானங்களும் அதற்குத்தேவையில்லை என்று ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் சேர்கேய்லவ்ரோவ் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கெய்ரோவில் ஐ.நா. மற்றும் அரேபிய சமூகத்தின் விசேட தூதர் லக்தர் பிராஹிமியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையால் முன்வைக்கப்பட்ட ஜெனிவா ஒப்பந்தம் எனப்படும் சமாதான உடன்படிக்கை மீது சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்ததால் முன்னெடுக்கப்பட முடியாமல் போனது.

சிரியாவுக்கான ஐ.நாவின் விசேட தூதராக நியமிக்கப்பட்ட கோபி அனானும் பதவி விலகியிருந்தார். இதையடுத்து புதிதாக நியமிக்கப்பட்ட சிரியாவுக்கான தூதர் லக்தர் பிராஹிமி மீண்டும் ஐ.நாவின் தீர்மானம் ஒன்றை சிரியாவில் நிறைவேற்று வதன் மூலம் அங்கு அதி காரப் பரவலாக்கலை ஏற்படுத்தி மக்களை சமாதானம் கொள்ளச் செய்வதற்கு ரஷ்யாவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை நிராகரித்த ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் கருத்துத் தெரிவித்ததாவது:-

சிரியாவில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான பொறுப்பு ஆட்சி மாற்றம்தான் என்றால் அதிகளவு இரத்தக்கறை இன்னமும் ஏற்படும். மாறாக இந்த பொறுப்பு உயிர்களைக் காப் பாற்றுவதற்காகவே என்றால் எந்த வித ஐ.நாவின் தீர்மானங்களும் அதற்குத் தேவையில்லை.

கடந்த வருடம் மார்ச்சில் வெடித்த சிரியப்புரட்சியில் இதுவரை 33 ஆயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன என கிளர்ச்சிப்படை தெரிவித்துள்ளது. அதிலும் அண்மைக்காலமாகத் தினமும் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டுவருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை 234 பொது மக்களும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரு பத்திரிகையாளர்கள் உட்பட 92 பேரும் கொல்லப்பட் டுள்ளனர்.

இந்தநிலையில் உலகின் முக்கிய ஊடகங்களும் செய்திச் சேவைகளும் சுதந் திரமாக இயங்கி போர் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு இயலாதவாறு சிரிய அதிபர் அஷாத் தலைமையிலான அரசு பலத்த தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தம் கலந்த செங்கல் லண்டன் நிபுணர் தயாரிப்பு

## இது இரும்பைப் போன்றது என்கிறார் அவர்

லண்டன், நவ.7

லண்டனைச் சேர்ந்த ஜேக் மன்றோ குருதியில் செங்கல்லைத் தயாரித்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

லண்டனைச் சேர்ந்த கட்டடக்கலை நிபுணரான ஜேக் மன்றோ, அனைத்து வகையான செங்கற்களையும் கொண்டு கட்டடங்களை வடிவமைப்பதில் கைதேர்ந்தவர்.

கட்டுமானத்தில் அதிகமாக புதுமையைப் புகுத்தி வரும் இவர் தற்போது சர்ச்சைக்குரிய செங்கல்லைத் தயாரித்துள்ளார்.

26 வயதான ஜேக் மன்றோ விலங்குகளை வெட்டி இறைச்சி தயாரிக்கும் தொழிற்கூடங்களில் இருந்து குருதி முழுவதுமாக வாங்கியுள்ளார்.

இதனை மணலுடன் கலந்து செங்கல் போன்று தயாரித்து, அவற்றை மின் அடுப்பில் 70 டிகிரி வெப்ப நிலையில் சுமார் ஒரு மணி நேரம் வேக வைத்து பதப்படுத்துகிறார். ஒவ்வொரு



ரத்த செங்கல் தயாரிப்பதற்கும் அவர் 35 லீற்றர் குருதியைப் பயன்படுத்துகிறார்.

இதுகுறித்து ஜேக் கூறுகையில், குறித்த செங்கல் தண்ணீர் புக முடியாத அளவுக்கு மிகவும் பலமாக உள்ளது. இரும்புக் கம்பிக்குப்பதில் இதனைபயன்படுத்த முடியும். மேலும் இந்த செங்கற்களைக் கொண்டு எகிப்தில் முன்மாதிரியான ஒரு கட்டு மானத்தை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கிறேன்.

இருப்பினும் இந்த செங்கற்களைக் கொண்டு வீடு கட்டினால் அதில் மக்கள் வசிக்க விரும்புவார்களா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் -என்றார்.

## ஈரான் அணுசக்தி விவகாரம்

# பிரான்ஸ் ஜனாதிபதி – சவூதி அரசர் சந்திப்பு



சிரியாவின் உள்நாட்டு போர் மற்றும் ஈரானின் அணு சக்தி பிரச்சினை குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே சவூதி அரசரைச் சந்தித்துப் பேசினார்.

பிரன்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே முதன் முறையாக எண்ணெய் வளம் மிக்க சவூதி அரேபியாவுக்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளார்.

அங்கு அரசர் அப்துல்லாவைச் சந்தித்து ஈரானின் அணு சக்தி பிரச்சினை மற்றும் சிரியா உள்நாட்டுப் போர் குறித்துப் பேச்சு நடத்தினார்.

இதற்கிடையே ஈரான் மீது மேற்கத்திய நாடுகள் பல் வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தும், தன்னுடைய அணு சக்தி ஆராய்ச்சியில் சற்றும் பின் வாங்கவில்லை.

எனவே சவூதி அரேபியாவிடம் ஈரான் குறித்து பேச்சு நடத்தி, ஆதரவைப் பெற பிரான்ஸ் முயல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஐ.நா. கறுப்புப் பட்டியலில் ஹக்கானி

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் கறுப்புப் பட்டியலில் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட ஹக்கானி வலையமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. ஹக்கானி வலையமைப்பு ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனிதவெடி குண்டுத் தாக்குதல்கள் பலவற்றைத் திட்டமிட்ட அப்துல் ரவூப் ஷாக்ஹிர் என்ற நபரையும் ஐ.நா. பாதுகாப்புப் பேரவை தடைகளின் பட்டியலில் இணைத்துள்ளது.

### ஹெய்ட்டியை வாட்டிய 'சான்டி' புயல்

சான்டி புயலால் மிக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று உலக நாடுகளுக்கு ஹெய்ட்டி நாட்டின் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கரிபியன் நாடுகளில் ஒன்றான ஹெய்ட்டி நாட்டை அண்மையில் வீசிய சான்டி புயல் மிக கடுமையாகத் தாக்கியுள்ளது.

புயலால் 50 பேர் உயிரிழந்ததுடன், பயிரிடப்பட்ட 70 சதவீத விளைநிலங்களும் தண்ணீரில் மூழ்கி உள்ளன. இதனால் கடுமையான உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் தண்ணீர் நிரம்பியுள்ளதால் கொலரா அப்பாய மும் ஏற்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்க பாதிப்பிலிருந்து. இன்று வரையிலும் மீண்டு வராமல் இருக்கும் ஹெய்ட்டிக்கு, சான்டி புயல் பலத்த அடியாக உள்ளது.

அந்தநாட்டில் இது வரையிலும் கொலரா நோய்க்கு மட்டும் 7 ஆயிரத்து 500 பேர் பலியாகினர்.

இந்தநிலையில் தங்கள் நாட்டின் பேரழிவை சரி செய்ய உலக நாடுகள் உதவ வேண்டும்-என்றார். (வ)

# பஹ்ரைனில் குண்டுகள் வெடிப்பு

## தமிழர் உட்பட இருவர் சாவு

பஹ்ரைனில் இடம்பெற்ற ஐந்து குண்டு வெடிப்புகளில் இந்தியத் தமிழர் உள்ளிட்ட இரண்டு ஆசிய நாட்டவர்கள் உயிரிழந்தனர். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

பஹ்ரைனின் தலைநகர் 'மணாமா'வில் உள்ள இரு பகுதிகளில் நேற்று முன்தினம் மேற்படி குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

பஹ்ரைனில் 'சன்னி' பிரிவைச் சேர்ந்தவர் தலைமையில் மன்னராட்சி நடை பெறுகின்றது. ஆனால் இந்த நாட்டில் பெரும்பாலான மக்கள் 'ஷியா' பிரிவைச் சேர்ந்தவர்கள். துனிசியா, எகிப்து, ஏமன், லிபியா உள்ளிட்ட நாடுகளில், மக்கள் புரட்சி மூலம்



ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

இதேபோல, பஹ்ரைனிலும், ஷியா பிரிவை சேர்ந்த அரசியல்வாதிகள், மன்னராட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர். அரசுக்கு எதிராக, போராட்டம் நடத்த, உள்துறை அமைச்சகம், தடை விதித்துள்ளது. இதைக் கண்டித்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

தலைநகர் மணாமாவில், ஐந்து இடங்களில் நேற்று முன்தினம் குண்டுகள் வெடித்தன. இதில் முருகையா என்ற இந்தியத் தமிழர் உள்ளிட்ட இரண்டு ஆசிய நாட்டவர்கள் கொல்லப்பட்டனர். மற்றொரு இந்தியருக்கு குண்டு வெடிப்பில், உள்ளங்கை துண்டிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷைச் சேர்ந்த ஒருவரும், குண்டு வெடிப்பில் உயிரிழந்தார். பஹ்ரைன் நாட்டுக்கான இந்திய தூதர் மோகன்குமார், முருகையா உயிரிழந்ததை உறுதி செய்துள்ளார். (வ)

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில்

# வாழ்நாளில் முதன்முறையாக வாக்களித்த 99 வயது பாட்டி

*அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தன் வாழ்நாளிலேயே முதன் முறையாக 99 வயது மூதாட்டி வாக்களித்தார்.*



*அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் போர்ட் மியர்ஸ் பகுதியில் வசிப்பவர் ரோசி லெவிஸ் (வயது 99). இவ்வளவு காலமும் வாக்களிக்காமல் இருந்த ரோசி, தற்போது முதன் முறையாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க உள்ளார். இதுவரையிலும் அவருக்குப் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. தற்போது அவருக்கு அடையாள அட்டை தபாலில் அனுப்பப்பட்டுள்ளதால், தனது பேரனுடன் சென்று வாக்களித்தார்.*

*இதுகுறித்து அவர் கூறுகையில், ''என் வாழ்நாளில் இப்போதுதான் வாக்களிக்க வாய்ப்புக் கிடைத்ததற்கு கடவுளுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.* (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(26)

விற்பனையாளர் வேலைக்கு ஒருவன் மனுப்போட்டான். பல நிறுவனங்களிலிருந்து அவனுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புகள் வந்தன. ஒவ்வொரு கம்பனிக்கும் போய் வந்தான். அவன் நேர்முகத் தேர்வுக்கு போய் வந்த நிறுவன களில் இருந்து அவனுக்கு வேலை தருவதாகக் கடிதமும் வந்தது. அவன் ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தான். அந்த நிறுவனம் அவனுக்கு சம்பளத்தைக் கொஞ்சம் குறைவாகவே கொடுக்க முன் வந்திருந்தது. நேரில் போய் வேலையை ஒப்புக் கொண்டான். மனேஜரைப் பார்த்து மற்ற நிறுவனங்களிலிருந்து வந்த கடிதங்களைக் காட்டி, அந்த நிறுவனங்கள் அதிக சம்பளம் தருவதாகக் குறிப்பிட்டிருந்ததையும் விளக்கித் தனக்கு அதிக சம்பளம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான்.

**மனேஜருக்கு வியப்பாக இருந்தது.**

''பல நிறுவனங்கள் உனக்கு வேலை கொடுக்கக் காத்திருக்கின்றன. எங்கள் நிறுவனத்தைவிடப் பெரிய நிறுவனங்கள். அப்படியிருக்க எங்கள் நிறுவனத்தை நீ ஏன் தேர்ந்தெடுத்தாய்?'' என்றார்.

''ஒரே ஒரு காரணம்தான் சேர். மற்ற நிறுவனங்களில் என்னை நேர்முகம் செய்தவர்கள் மிகவும் கடுமையாக இருந்தார்கள். நீங்கள்தான் புன்சிரிப்புடன் என்னை வரவேற்று உட்கார வைத்துக் கேள்விகளைக் கேட்டீர்கள். உங்கள் புன்சிரிப்பு என்னைக் கவர்ந்துவிட்டது. உங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் ஆள்களில் நானும் ஒருவனாக அப்போதே மாறிவிட்டேன். சம்பள விடயத்தைப் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று எண்ணினேன்?''

மனேஜருக்கு அவனை மிகவும் பிடித்துவிட்டது. அவன் கேட்ட சம்பளத்தைக் கொடுக்க முடிவு செய்தார். முதலாளியிடம் சிபாரிசு செய்து பெற்றுத்தரவும் செய்தார்.

டாக்டர் நோயாளிகளைப் பரிசோதிக்கும்போது கூடப் புன்சிரிப்புடன் பேச வேண்டும். விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்களிடம் பேசும்போது புன்சிரிப்புடன் அவர்களிடம் பேச வேண்டும்.

தொலைபேசியில் பேசும்போதுகூட புன்சிரிப்புடன் பேச வேண்டும் என்கிறார் ஒரு மனோதத்துவ நிபுணர். நாம் புன்சிரிப்புடன் பேசுவது மறுமுனையில் இருப்பவர்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்காதீர்கள். முகத்தைப் பார்த்தால் தான் புன்சிரிப்புடன் பேசுகிறார்கள் என்று தெரியும் என்று எண்ணுவது தவறு. புன்சிரிப்புடன் பேசும்போது குரலே அதைக் காட்டிக் கொடுத்துவிடும்.

அமெரிக்க மக்கள் பெரும்பாலும் தொலைபேசியில் பேசும்போது புன்சிரிப்புடன்தான் பேசுகிறார்கள். இதற்குக் காரணம் அமெரிக்காவில் இருக்கும் தொலைபேசி நிறுவனங்கள் பொதுமக்களுக்குப் புன்சிரிப்புடன் பேசுங்கள் என்று கற்றுக் கொடுக்கிறதாம். இதற்காக தொலைபேசியில் பாடங்கள் நடத்துகிறார்கள்.

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போன இந்தியர் ஒருவர் தனக்கு தொலைபேசி வேண்டும் என்று எழுதிப் போட்டார். அவர் கடிதம் கிடைத்ததும் உடனே தொலைபேசி நிறுவனக்காரர்கள் வந்து அவர் வீட்டில் தொலைபேசியை வைத்து, உடனே தொடர்பும் கொடுத்தார்கள். இந்தியருக்கு ஒரே ஆச்சரியம். எனக்கு தொலைபேசி இரண்டு மூன்று நாள்களில் வேண்டும் என்று கேட்டிருந்தேன். இப்போதே கொண்டு வந்துவைத்து விட்டீர்களே'' என்றார்.

தொலைபேசி நிறுவனத்திலிருந்து வந்தவர், ''இரண்டு மூன்று நாள்களுக்குப் பிறகு தொலைபேசி வேண்டுமென்றால் இப்போது ஏன் கடிதம் போட்டீர்கள்? என்றைக்கு தொலைபேசி வேண்டுமோ, அன்றே ஒரு போன் செய்தால் போதுமே? உடனே நாங்கள் தொலைபேசியைக் கொண்டு வந்துவிடுவோம்'' என்றார் சிரித்துக்கொண்டே.

யாருக்காவது தொலைபேசி வேண்டுமென்றால் அன்றே



தொலைபேசியைக் கொடுப்பது அமெரிக்க தொலைபேசி நிறுவனங்களின் பழக்கம். ஒருநாள்கூடத் தள்ளிப் போட மாட்டார்கள். அத்துடன் புன்சிரிப்புடன் அவர்கள் தொலைபேசியைக் கொண்டுவந்து வைப்பதும் தொடர்பு கொடுத்து விடுவதும் ஏதாவது பிரச்சினை இருந்தால் போன் செய்யுங்கள் என்று புன்சிரிப்புடன் சொல்வதும் சர்வ சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி. நாம் மற்றவர்களைப் பார்த்து 'காலை வணக்கம்' என்று சொல்லும்போதும் 'நன்றி' என்று சொல்லும்போதும் புன்சிரிப்புடன் சொல்ல வேண்டும். நமது வெற்றியின் இரகசியம் புன்சிரிப்பில்தான் அடங்கியிருக்கிறது என்பதை உணர வேண்டும்.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# மொழி நடைமுறைகளில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் சிவில் சமூகத்தினர்

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

மொழி நடைமுறை தொடர்பில் சிவில் சமூகத்தினர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்தப் பிரச்சினைகள் குறித்து ஊடகங்கள் ஊடாக உரிய அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூக நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் லயனல்குருகே தெரிவித்தார்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் ''சிறுபான்மையினரின் மொழி உரிமையை வலுப்படுத்தலும், மேம்படுத்தலும்'' எனும் நிகழ்ச்சித்திட்டத்தில் கிராம மட்ட மொழிச் சங்கத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் யாழ்.தியாகி அறக்கொடை நிலையத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே லயனல் குருகே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்துடன் ஒன்றிப்பாக அவர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரக் கூடியவர்கள் ஊடகவியலாளர்கள். இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் கரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்ட போதும் அவை நடைமுறையில் இல்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் மொழி தொடர்பான பரிந்துரைகள் உள்ளன. இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. பொது அமைப்புகள் இதனை இனங்கண்டு உண்மைகளை எடுத்துக் கூற வேண்டிய கட்டாயம் உள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மொழி உரிமைகள் தொடர்பாக 44 செயலமர்வுகளை நடத்தியுள்ளது. கிராம மட்டங்களில் 30 பேரை ஒன்றிணைத்து கலந்துரையாடல்களை நடத்தவும் தீர்மானித்துள்ளது. எல். எஸ். ஆர். சி அறிக்கையில் மொழி உரிமை தொடர்பாக கூறப்பட்டுள்ளதால் இதனை மக்களும் அறிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட வேண்டும். அறிக்கை வெளியிடப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே இதனை நடைமுறைப் படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

ஊடகத்துக்கு இது பெரும் பொறுப்பாக உள்ளது. சிவில் சமூகத்தின் உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். மொழி உரிமை மக்களின் அடிப்படை உரிமை என்பதால் அதற்கான தீர்வு காணப்பட வேண்டியுள்ளது. சிவில் சமூகத்தின் மத்தியில் மீறப்படுகின்ற மொழிப்பிரச்சினைகள் உரிய வகையில் வெளிக்கொணரப்பட்டு அதற்கான தீர்வுகள் காணப்பட வேண்டும் -என்றார். (எ-14)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தால் நடமாடும் நூலக சேவையும் கலை நிகழ்வும் அண்மையில் திருநெல்வேலி கருணா நிலைய மண்டபத்தில் நடைபெற்றன. இந்தக் கலை நிகழ்வில் பங்கு கொண்ட மாணவர்கள். (எ-14)

# சிறுவர் தின போட்டி முடிவுகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, ஒவியம் ஆகிய போட்டிகளின் முடிவுகள் வெளிவந்துள்ளன.

**கட்டுரை, ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம்- செ.தக்சனா (பருத்தித்துறை), இரண்டாம் இடம்- அ. தனுசிகா (மருதங்கேணி), மூன்றாம் இடம் - றா. சரண்யா (கரவெட்டி)

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்- ஞா.பிறின்சிகா (மருதங்கேணி), இரண்டாம் இடம்- வ.ஜெயானி (கரவெட்டி), மூன்றாம் இடம் - த.திவ்யா (சண்டிலிப்பாய்)

**மத்தியபிரிவு**

முதலாம் இடம்- அ. நிரோஜன் (வேலணை),இரண்டாம் இடம்- சுபீட்சனா அன்ரன்ஜீட் (சண்டிலிப்பாய்), மூன்றாம் இடம் - செ.விஸ்ணுகா (யாழ்ப்பாணம்)

**மேற்பிரிவு**

முதலாம் இடம்- இ. அபிசா (யாழ்ப்பாணம்), இரண்டாம் இடம்- ஜெ.ஜெனுசன் ( தெல்லிப்பழை), மூன்றாம் இடம் - சூ.மேகலா (சங்கானை)

**ஒவியம், ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம்- கி. பிறோயன் (பருத்தித்துறை), இரண்டாம் இடம்- ச.நிவாசிகா(கரவெட்டி), மூன்றாம் இடம் - ம. [illegible]ஜன் (கோப்பாய்)

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்- க. வினோஜன் (உடுவில்), இரண்டாம் இடம்- செ. நிவிர்த்திகன் (கோப்பாய்), மூன்றாம் இடம் - கிறிஸ்ரி ராஜ்கிரன் (நெடுந்தீவு)

**மத்தியபிரிவு**

முதலாம் இடம்- தி. தஜிதரன் (கோப்பாய்) , இரண்டாம் இடம்- ஜெ.கிருசாந்தன் (உடுவில்), மூன்றாம் இடம் - பொ. சிவதரன் (கரவெட்டி)

**மேற்பிரிவு**

முதலாம் இடம்- உ.ராம்கி (கோப்பாய்), இரண்டாம் இடம்- ஆனந்த காங்கேயன் (காரைநகர்), மூன்றாம் இடம் - த.கிஷாந்த் (தெல்லிப்பழை)

**கவிதை, ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம்- யோ.மேரி அனுசியா (மருதங்கேணி), இரண்டாம் இடம்- த. கவிதரன் (கோப்பாய்), மூன்றாம் இடம் - ர. சங்கவி (கரவெட்டி)

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்- தமிழினி மதுராஞ்சலி (யாழ்ப்பாணம்), இரண்டாம் இடம்- பி. நிருசிகா (சண்டிலிப்பாய்), மூன்றாம் இடம் - சி. வினித் (மருதங்கேணி)

**மத்தியபிரிவு**

முதலாம் இடம்- ரி. சயந்தினி (சாவகச்சேரி), இரண்டாம் இடம்- றா.றாம்ஜி (மருதங்கேணி), மூன்றாம் இடம் - ம.ஜெபான்சினி (நெடுந்தீவு)

**மேற்பிரிவு**

முதலாம் இடம்- செ. கீர்த்திகா (சங்கானை), இரண்டாம் இடம்- யோ.நிசாந்தினி (சண்டிலிப்பாய்), மூன்றாம் இடம் - அ. பிருந்தா (காரைநகர்) (எ)

# புதிய நிர்வாகிகள்

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றன. புதிய நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர்- மு.நவநீதன், செயலாளர்-வி.வினோத், பொருளாளர்- செ.அசோக்குமார், உபதலைவர்- சி.ஜெனுதரன், உபசெயலாளர் - க.தவயோகநாதன். (எ-253)

# தேசிய ரீதியில் மூன்றாமிடம்



சர்வதேச அஞ்சல் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவி செல்வி நடராசா சுகன்யா தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். இந்த மாணவிக்கான பரிசில் வழங்கும் வைபவம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. மேற்படி மாணவியைப் பாராட்டி சுன்னாகம் அஞ்சல் நிலையத்தினர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021228 0065
தொலைநகல்: 021228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பிறவிக்குணம் மாறுவதில்லை

அந்த நாட்டு அரசருக்கு வாரிசுகள் இல்லை. அதனால், அவருடைய செல்லப்பிராணியான பூனைக்கே முடிசூட்டப் போவதாக அறிவித்தி ருந்தார். அந்தப் பூனையும் ஏனைய பூனைகளை விட வித்தியாசமாகவே இருந்தது. கழிவு உணவுகளை உண்பதில்லை. தரையில் உறங்குவதில்லை. தங்கக் கிண்ணத்தில் வைக்கப்படும் பாலை மட்டுமே பருகும். இலவம் பஞ்சணை இல்லாவிட்டால் இரவு முழுதும் அதற்குத் தூக்கமே வராது. மன்னர் அரசவைக்கு வரும் போது, மெல்ல அடி வைத்து வரும் பூனை, அரசரின் ஆசனத்துக் பக்கத்திலுள்ள இன்னொரு சிறிய தங்க ஆசனத்தில் அமர்ந்தபடி அரசவை நிகழ்வை வேடிக்கை பார்க்கும்.

அரசரின் மறைவுக்குப் பின்னர், பூனையே தங்களை அரசாளப் போவதை எண்ணி நாட்டு மக்கள் மனதுக்குள் புழுங்கினர். அப்படிப் புழுங்கியவர்களில் மந்திரியும் ஒருவர். அவர், மன்னருக்கு மக்களின் ஆதங்கத்தை எடுத்துக்கூறி, ''எப்போதும் பூனை பூனைதான். அதன் பிறவிக் குணத்தை மாற்றமுடியாது. அது ஆட்சி செய்வதை மக்கள் எப்படி விரும்புவார்கள்?'' என்று உள்ளதை சொன்னார்.

அதற்கு ''எனது பூனை அரச பூனை. அதற்கு ஏனைய பூனைகளின் ஏதாவது இயல்பு இருப்ப தாக நீர் நிரூபித்தால், பூனைக்கு முடிசூடும் திட்டத்தை கைவிடுகிறேன். ஆனால் அவ்வாறு நீர் நிரூபிக்கத் தவறினால், உமது தலை துண் டிக்கப்பட்டுவிடும். நாளை காலை வரைதான் உமக்கு அவகாசம்'' என்று சொல்லிவிட்டு மன் னன் போய்விட்டான்.

அன்றிரவு முழுவதும், மந்திரிக்கு தூக்கமே வரவில்லை. ''மக்களுக்காக வாதாடப்போய், தலையை இழக்கப் போகிறேனே'' என்று புலம் பிக்கொண்டே இருந்தார். கணவரின் தவிப்புக்கு என்ன காரணம்என்று அவரின் மனைவி வின வினார். நடந்ததைச் சொன்னார் மந்திரி. அதைக் கேட்டதும், ''அட இதுதானா? நீங்கள் நிம்மதி யாகத் தூங்குங்கள்.என்னிடம் ஒரு திட்டம் இருக் கிறது'' என்று தனது யோசனையை சொன்னாள் மனைவி.

விடிந்தது. மந்திரி ஒரு மூடப்பட்ட ஒரு கூடையுடன் அரண்மனைக்குச் சென்றார். வழமைபோல மன்னன் அரசவையில் வந்தமர, பூனையும் பக்கத்தே இருந்த ஆசனத்தில் அமர்ந்து தங்கக் கிண்ணத்திலிருந்த பாலைப் பருகத் தொடங்கிற்று. ''மந்திரியாரே! பூனையின் பிறவிக் குணத்தை மாற்றமுடியாது என்பதை இப்போது, நிரூபிக்கத் தயாரா?'' என்று கேலியோடு கேட் டான் மன்னன். மந்திரி எதுவும் பேசாமல், தான் கொண்டுவந்திருந்த கூடையைத் திறந்தார். அதிலிருந்து பாய்ந்தோடியது ஒரு எலி. அவ் வளவு தான். தங்கக் கிண்ணமாவது, பாலாவது. பஞ் சணையை விட்டு, பாய்ந்த பூனை எலியை வாயில் கௌவியபடி எங்கோ ஓடிற்று. மன்னன் தலை குனிந்தான். ''பிறவிக் குணத்தை மாற்ற முடியாதுதான்.'' என்று ஒத்துக் கொண்ட மன் னன், மந்திரியையே தனக்குப் பின்னர் அரசா ளும்படி வேண்டிக்கொண்டான்.

உயிரிகளுக்கு மட்டுமல்லாமல் நாடுகளின் பிறவிக் குணங்களையும் மாற்றமுடியாதுதான். தமிழர்களை நம்பவைத்து கழுத்தறுத்தல், சிங் களப் பேரின வாதத்துக்கு எப்போதும் கைகொடுத்தல் என்ற பிறவிக் குணம் இந்தியாவுடன் ஒட்டிப் பிறந்தது. ஜெனிவாவில் கடந்தமுறை இலங்கைக்கு எதிராக வாக்களித்தமைக்காக அது தமிழர் நலனில் மீண்டும் அக்கறை கொள்ளத் தொடங்கிவிட்டதாக அநேகர் கனவில் மிதந்தனர். ஆனால், மிக முக்கியமான தரு ணத்தில் இலங்கைக்கு எதிரான நாடுபோல காட்டிக் கொண்டு, திடீரென குத்துக்கரணம் அடித்து, ஜெனி வாவில் எழுந்த பூகோள கால மீளாய்வுப் புயலில் மஹிந்த அரசு கரைசேர பழக்க தோஷத்தில் கைகொடுத் திருக்கிறது இந்திய அரசு.

தமிழர்களின் படுகொலைக்கு இந்தியாவாவது நியாயம் கேட்கும் என்று அண்மைக்காலமாக எழுந்தி ருந்த கனவை, எலியைப் பிடித்த அரச பூனையைப்போல, ஒரே கணத்தில் தன்னுடைய பிறவிக் குணத்தைக்காட்டி கலைக்கச் செய்து விட்டது இந்தியா. நம்பியது எங்கள் குற்றமே தவிர, இந்தியாவின் குற்றமல்லவே.

# கந்தக நெடி காகிதப்

■ **செந்தூரி**

'கலாசாரச் சிதைவு'- உறுநீர்க்குளத்து அணையிட்ட, சிறுதுளை ஒப்பது! மரபுகளையும், கலைவடிவங்களையும் சிதைத்து விடுவது இனமொன்றின் வேகமான அழிவுக்கு வழிகோலும் என்பதைப் போலவே, 'கலாசாரச் சிதைவு' என்கின்ற எழுத்துக்களுக்குள் பின்னப்பட்டுள்ள அபாயம், அதி பயங்கரமானது. வழக்கமாகவே ஒன்றைப் பத்தாக்கி-ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்குகின்ற யாழ்ப்பாண இணையத்தளமொன்றின் பக்கம், சொல்கின்ற செய்தி அலற வைக்கின்றது. ''பொய்யாகி விடக்கூடாதோ, பெருமாளே!'' என்று நல்லூருறை நல்ல தமிழ் நாதனை நோக்கி அறியாமலே எம் எண்ணச் சுவாலைகளை எழுப்புகின்ற கொடூரம் உரைக்கின்ற சுருக்கம் அது! ''அனுராதபுரத்தை அண்மித்த தடுப்பு முகாமொன்றில், இராணுவ உயர் அதிகாரிகளாலும், அரசியல் வாதிகளாலும் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருத்தியின் கண்ணீர்த் துளிகளின் உப்பு'', கடும் விஷமாய் கொல்கின்றது. தன்னிரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கிவிட வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு தன் வாழ்வை யாழ்ப்பாணம் தீபகற்பத்துக்கு உட்பட்ட கிராமம் ஒன்றில் பணத்துக்காக உடலை விற்கும் உலகின் ஆதி முதற் தொழிலுக்கு தன்னை ஒப்புக் கொடுத்து விட்டதாக, ஒப்புக்கொண்டுள்ள சோகம்,எம் பண்பாட்டு முகமூடிகளில் அமிலத் துளிகளாய் தெறித்து விழுந்து கிழிக்கின்றது.

தமிழன் என்றொரு இனத்தின், இருப்பினை எடுப்புடன் இயம்பிய பெருமையைத் தன்னகத்தே என்றென்றைக்கும் இணைத்துச் சுமக்கின்ற ஈழவர்களின், எந்தவொரு வருட அத்தியாயமும், தனித்துவத்தை இழந்துவிடாத பெருமையை இன்றளவு வரைக்கும் கட்டிக்காத்தபடியே வருகின்றது என்பது ஒரு மேலோட்டமான பார்வை. ஆனால், சமூகக் கிடங்குகளின் பண்பாட்டு இருள் மண்டிக்கிடக்கின்ற இடுக்குகளில், ஈழத் தமிழ் வாழ்வொழுக்கங்களுக்கு பிறழ்வான நடை முறைகள் வெளித்தெரிந்து விடாத குறைவெண்ணிக் கைகளில் அவ்வப்போது தலைகாட்டியே வந்திருந்தன என்பது, கொஞ்சம் கசக்கின்ற உண்மை. தமிழீழ நீதிமன்றங்கள், காவல்துறை பணிமனைகளில் விசாரிக்கப்பட வேண்டிய அவகாசங்கூட கொடுக்கப்படாமல், 'தீர்க்கப்பட்ட' களைகளின் பிடுங்கல்களைக் கண்டும் கேட்ட அனுபவங்கள் அத்துணை சுலபத்தில் மறந்துவிட முடியாதவை.

நினைவேந்தலுக்குரிய வரலாற்றுப் பெருமை செறிந்த கார்த்திகை மாதத்தில், எம்மினக் காவல் தெய்வங்களை கண்களுக்குள் சுடர் வடிவில் தொழுது துதிக்கின்ற நாள்களின் நெருக்கத்தில், எதிரிக்கு நெருக்கமானவர்களால் ஏவிவிடப்படுகின்ற வழக்கமான காகித அம்புகளினுள் ஒன்றாக,மேற்படி பெண் போராளியின் மேல் சுமத்தப்பட்டுள்ள கறை, முறிந்தழிந்து மறைந்துவிட வேண்டுமென்பதே சகல தமிழ் உணர்வுகளினதும் பிரார்த்தனைகளாக இருக்க முடியும்.

சமூகத்தின் அங்கங்களாக மீள இணைக்கப்பட்ட பின்னரும் கூட, குத்தல் பார்வைகளும், கேலிப் பேச்சுக்களும், அநாவசிய சீண்டல்களும், அதிகார ஒடுக்கல்களும், ஆத்திரமூட்டும் கண்காணிப்புக்களும் விடாது துரத்துகின்ற இன்றைய வெற்று-மனுஷிகளின் நேற்றைய அவதாரங்களை ஏன் அவ்வளவு சுலபமாக மறந்து போனோம் நண்பர்களே?

வீட்டில் வளர்கின்ற பெண்களை விட, இறுக்கமான நூற்றுவீத ஒழுக்கக் கட்டுப்பாடு மிக்க பாசறைகளில் நாற்றாகி, ஆடை, ஆபரண, அலங்காரம் எனும் பெண்மைக்குரிய புறத்தியல்புகளில் கூட கண்ணியமான மரபுத் தரவேற்றங்களுடனான மாற்றங்களை உள்வாங்கிய, செடிகளாகி, வீரங் கலந்த காதல் வயப்பட்டு, வரம்பு முறைகளுக்குட்பட்ட திருமண பந்தத்தினுள் இணைந்த குடும்பத் தருவாகி, அச்சொட்டான 'தேசியக் குழந்தைகளை' உற்பவிக்கின்ற புனித இல்லற வேள்வியின் அவிப் பொருள்களாக தன்னுடல், தன்னுழைப்பு, தன்விருப்பு யாவையும் சொரிகின்ற இனங்காக்கும் விருட்சங்களாகி, வாழ்க்கைச் சக்கரத்தின் ஒவ்வொரு உபபடிகளிலும் வரையறுக்கப்பட்ட விருப்பு வெறுப்புக்களுடனேயே கடந்து வந்தவர்களின் மீதான இன்றைய எமது சமூகப் பார்வைக்கான 'அகண்ட காரணம்' சரியானது தானா? சாணத் தரைகளில் 'பின் தூங்கி, முன் எழுகின்ற' சாதாரணவொரு குடும்பத் தலைவி தன்னை சிறந்ததொரு இல்லாளாக கொள்வதற்காக இயற்றுகின்ற கொடும் பாரக் கடமைகளை, சற்றுங்குறைவின்றி இவர்களும் ஆற்றியிருந்தார்கள். வெறுமனே தம்முடலின் அரைப் பாகத்தினால் மட்டும் மறுவரைப் பாகம் மாய்ந்துழைத்தது. தீராத தமிழனின் தாயகக் கனவுக்கன்றோ!!

உடல், உள ஒழுக்கம் மிகுந்த பண்பாளர்களாக போராளிகளை வளர்த்த பெருமை தமிழீழ விடுதலைப் புலிகளினது [illegible] மது [illegible] நிறுத்தி விட்டதோடு, இயக்கத் தம்பிகளையும் நிறுத்தச் சொல்லி கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளதாக சொல்கின்றார் நாம் தமிழர்- சீமான். 'ஓர் இரவு முழுவதும் இருபதுக்கு மேற்பட்ட ஆண் போராளிகளுடன் பாசறை ஒன்றில் தனித்திருந்த போதும், தன்னால் பாதுகாப்பின்மையை சிறிதும் உணர முடிந்திருக்கவில்லை' என்று சொல்லி மெய்சிலிர்த்தவர்-பத்திரிகையாளர் அனிதா பிரதாப். பெரும் புரட்சிக்காரன் 'சே-குவேரா'வினால் கூட தன்னுடன் இருந்த தோழர்களினது, எதிர்பாலுறவுகள் விடயத்தில் கட்டுப்படுத்தவோ, கடிவாளப்படுத்தவோ முடியாதிருந்த நிலையில், முழுமையான இராணுவ கட்டமைப்புக்களுடன் இயங்கும் தன்மைக்குள் இருந்த போதிலும், 'பொடியளையும், பொடிச்சிகளையும்' கவனமாகவே பேணியதில் தலைவனும், தளபதிகளும் பரிபூரண வெற்றியே கண்டிருந்தனர்.

'மனம்' என்பதும் கூட தசைப்பிண்டமே என வாதிடும், 'ஓஷோ' போன்ற புறச் சிந்தனையாளர்களின் கூற்றுக்களின் படி, உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம் என்று விரிகின்ற மனிதனுக்கான புறத்தேவைகளுக்கு எதிர்வரிசையில் பரிணாமம் அடைந்துள்ள விலங்கு என்கின்ற விதிவிலக்குக்குட்பட முடியாமல் மனிதனுடைய அகத் தேவைகளில் முதன்மையானது 'பாலினத் தூண்டல்' தான். வெகு சிலரினால் ஆக்கத்தின் வழியிலும் மிகப் பல பேரினால் அழிவுத் திசையிலும் தூண்டப்படுகின்ற 'பால்கவர்ச்சி'யே மானுட உந்து சக்திகளில் முதன்மையானது என்கின்றனர் உடலியல் ஆராய்ச்சியாளர்கள்.

நித்தியானந்தா, பிரேமானந்தா 'உருந்தூர்ப்பேட்டை' உலகானந்தா போன்ற 'கோர்ப்பரேட்' சாமியார்கள் செம 'ஸ்கோர்' பண்ண காரணமாயிருந்தது இதுதான் என்பதை உடனே ஊகிக்க முடிந்திருந்தால், நீங்களும் 'ஓஷோ'வை நெருங்கி விட்டீர்கள் என்பதாக அர்த்தம். சாதாரண தரப் பரீட்சையில் தட்டுத்தடுமாறி உயர்தரத்துக்குள் 'தவறி' விழுந்து விட்ட வெகு 'அம்மாஞ்சிப் பையன்' ஒருவன், மூன்றாம் வருடத்து முடிவில், மூக்கில் விரல் வைக்கும்படியாக மாவட்ட நிலைக்குள் நிற்க முடியுமாயின், 'எல்லாப் புகழும், யாரோவொரு தேவதைக்கே' என்று அவனால் ஒப்புக்கொள்ளவும் முடியுமாயின், இதுவும் சாத்தியமானது. அந்த வகைத் தூண்டலினாலேயே.

மண்டோதரியே வந்து சாட்சி சொன்னாலும் கூட, அரக்கர் குலத்தில் பிறந்தவனாயினும், ஈழவேந்தன் இராவணன் 'ஏகபத்தினி விரதன்' என்பதை ஒப்புக் கொள்ள முடியாதளவுக்கு கம்ப இராமாயணத்தின் 'கலிகால அடிமைகள்' ஆக்கப்பட்டிருக்கின்ற ஈழத் தமிழ்ச்சாதி எண்ணற்ற மனைவிகளுடன் சுகபோக ஏகத்தில் திளைத்துக்கிடந்த தசரதனின் மகனை, 'மனையொடுக்கம் நிரம்பப்பெற்றவன்' என்று அநியாயத்துக்கு நம்பத் தயாராக இருப்பது, தரம் ஒன்று முதல் பல்கலைக்கழகம் வரை 'தமிழ்ப்பாடத் திட்டத்தினுள்' அமர காவியமாக, 'ஆரியர் காவியத்தை' சேர்த்து வைத்த பின், நீத்தாருக்கே கிடைக்க வேண்டிய விருதுகளில் ஒன்று. வீர சைவத்தின் சமயசார ஒழுக்கங்கள் பிரமச்சரியத்தினால் கூட இட்டு நிரப்பப்பட முடியாத பற்பல புண்ணிய காரியங்களை தூய இல்லறத்தினால் விளைவிக்க முடியும் எனப் போதிக்கின்றன.

ஆனால் சைவத்தையும் உள்ளடக்குகின்ற இந்துத் தத்துவத்தின் இன்னொரு வகுதியான வைணவமும் அதன் சார்புகளும் ஆண்டவனுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டவர்கள் எனும் பெயரில் 'தேவதாசிகள்' என்றொரு கண்ணீர்க் கணிகையர் குலத்தை நடைமுறையிலும், நீண்ட பெருமிதத்துடன் (?) காப்பியங்களிலும் எச்சங்களாக விட்டுச் சென்றிருப்பது, நாம் சார்ந்துள்ள மதங்களின் அடிப்படையிலும் கூட மறுதலித்துத் தப்பிவிட முடியாத பெரும் பொறி.

யாதும் அறிந்த பெருமான் ஐயன் திருவள்ளுவன் கூட, தனியதிகாரம் கொடுத்து தட்டிக் கேட்கும் அளவுக்கு பாக்கியராஜின்-'முருங்கைக்காய் சமாச்சாரத்தில்' படு அட்டகாசம் விட்டுப் போயிருக்கின்றான் பழந்தமிழன் என்பது கொஞ்சமல்ல, நிறையவே வெட்கக்கேடான விடயம் தானே. மேலும், தன்னையும் தான் சார்ந்துள்ள சமூகத்தையும் தீவிரமான பௌதிக, கலாசார வழிகளில் களங்கப்படுத்துகின்ற 'கூடாவொழுக்கத்தினுள்' ஊறித் திளைக்கின்ற யாவருமே, தம்மிறுதிக்குள் அருணகிரி நாதரைப் போல, அண்ணாமலையார் கோபுரத்திலேறி உயிர்விடத் தீர்மானிக்கின்ற, கவரி மான்கள் இல்லை என்பதும், முள்ளிவாய்க்காலில் பாதி இனமே பறிபோய்த் துடித்த போது வந்துவிடாத தமிழ்க் கடவுள், பகல் கொள்ளை போய்க்கொண்டிருக்கின்ற 'ஈழத் தமிழ்ப் பண்பாட்டினை' தடுத்துக் காக்க மட்டும் நேரில் வந்து அடியெடுத்துக் கொடுத்து விடப் போவதில்லை என்பதும், ஆன்மிக மூலாமிடப்பட்டுள்ள அவரவர் பகுத்தறிவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ் பூக்கள்

தெளிவுகள்.

நகரப் பகுதியில் குவியலாக பிடிபட்டவர்கள் விடயத்தில், 'வாலை விட்டு தும்பைப் பிடித்துக்' கொண்டு அட்டகாசம் விட்டு, பத்திரிகைச் செய்திகளிலும், பரபரப்பு இணையங்களில், 'காணொலி இணைக்கப்பட்டுள்ளது', 'படங்கள் இணைக்கப்பட்டுள்ளன', 'எக்ஸ்குளூசிவ் றிப்போர்ட்' என்று சூடேற்ற மட்டும் பயன்படுத்திக் கொண்ட பின் வாளாவிருந்தவர்கள் தானே எல்லோரும். விருப்பத்தின் பேரிலோ, விருப்பமில்லாத போதிலோ உடலால் இம்சைப்படுத்தப்படுகின்ற சிறுவர்கள் அல்லது சிறுமிகள் சம்பந்தப்பட்டவை, தெளிவான குற்றங்கள் என்று சட்டவரையறைகளை கொண்டுள்ள போதிலும், யாழ்ப்பாண விடுதிகளில் பாடசாலை மாணவிகள் கூட பயன்படுத்தப்பட்டனர் என்ற செய்திகளின் தீவிரத்தன்மை எத்தனை எத்தனை வயதுப் பிள்ளைகளை பெற்றவர்கள் வயிற்றில் நெருப்பள்ளிக்கட்ட வைத்தது?

இன்றைக்கு முச்சக்கரவண்டிச் சாரதிகளாக புது அவதாரம் எடுத்து தன் குடும்பத்தைக் காப்பாற்றும் பொருண்மியப் புரட்சி முடிவுக்குள் தம்மைத் தாமே நெட்டித் தள்ளிக்கொண்டுள்ள பெண்களைக் கண்டு, பெருமிதத்தில் உயர்ந்த தோள்களின் விறைப்பு மாறிட முன்னரே, மறுபக்கமாக பெண்ணினத்தை தீராக்களங்கத்தினுள் தள்ளும் செய்திகள் அணிவகுக்கின்றன. முள்ளிவாய்க்காலிலிருந்து அள்ளிவரப்பட்ட எம் மக்களை, கால் நடைகளிலும் கேவலமாக நெருக்கி அடைத்து அடிமை வாழ்வின் இழி கொடூரத்தை இயக்கிய அரச அகதி முகாம்களில் கைக் குழந்தைகளின் பசி போக்குவதற்கான 'பால்மா'வை பெற்றுக் கொடுத்ததற்கு பிரதியுபகாரமாக அங்கே காவலுக்கு நின்றிருந்த 'பிணம் புணரிப் பேய்கள்' ஆயுத முனையில் தமிழ் இளந்தாய்மாரின் கற்பினை சாவுகேட்டன என்கின்ற செய்திகளும், ஆறேழு நாள் பசியில் அழுகின்ற குழந்தையின் துடிப்பும், தம் ஆற்றாமையும் இணைந்த புள்ளியில் 'கலாசாரத் தாய்' தன் கண்களை இறுக மூடினாள் ஓரிருவர் நிலைமைகளில் என்கின்ற செவிவழித் தகவல்களும், 'விழுப்பம் தராத ஒழுக்கத்தின்' ஒழுகிய, இயலாமையின் மரணவாய் மீட்சியாகவே பார்க்கப்பட்டன.

ஆனால் 'காணுமிடமெங்கும் சக்தியடா' என்று பாடிப் பொங்கிய பாரதியின் கண்மணிகளூடாக, 'திரும்பிய திசையெங்கும் பெண்மையின் பெருவடிவத் தையும், பொல்லாப் பெரு வலியையும்' போற்றிப் பூசிக்கின்ற தமிழ்க் குலத்துக்கு இன்றைக்கு நேர்ந்துள்ள அவப்பெயர், அறிந்தே எம் மூக்கை அரிந்து கொள்வதற்கு ஒப்பானதில்லையா?

மண்ணுக்கு வந்திட்ட இழுக்கை, தன் கண்ணுக்கே வந்திட்ட அம்பெனக் கருதி, புழுதி பறக்கும் களங்களில் காற்றுக்கு நிகராயும், சேறு வழியும் சகதிகளில் நீருக்கு நிகராயும், மனவலிமையில் ஆகாயம் வரை நிரப்பிய பெருவெளிகளாய் போர்க்கலையில் சேர்ந்தவரைக் கொல்லும் செந்தீயின் மறுபெயராயும், பொறுமையில் பூமிக்கு மாற்றாயும் நின்ற பஞ்சபூதத்துத் தமிழிச்சிகளின் வாழ்வின், ஒரு பகல்-பசி போக்கும் அடுப்பின் நெருப்பை ஏற்றுவதற்கு விலையாக, அவள் இரவின் 'விளக்கு நெருப்பு' அணைந்தேயாக வேண்டும் என்கின்ற அவலத்தை முளையிலேயே கிள்ளி எறிய தவறுவோமாயின் வரலாற்றின் வாசல்களில் எமக்கு மன்னிப்புண்டோ?

'உதவிகள் கொண்டு சேர்த்திட முடியாத கண்காணிப்பு வலயம்', 'இலகுவில் கூட்டிணைத்து உதவிட முடியாத, அமைப்பு ரீதியான சிக்கல்கள்', 'எல்லாவித தொழில் வாய்ப்புக்களையும் பரிசீலிக்க முடியாத மென்மை உடற்பண்புகள்', 'தூர தேசங்கள், தூரவிடங்கள் சென்று தங்கிப் பணியாற்ற முடியாத குடும்பப் பொறுப்புகள்', 'புலம்பெயர் ஈழவர்களிடமிருந்தான உதவிகளை நேரடியாகச் செலுத்துவிக்க இயலாத சந்தேகப் பொறிகள்' என்று நீள்கின்ற தடங்கல்களுக்கு மத்தியில், அதி விரைவுடன் தீர்க்கமான பொறிமுறையொன்றினால் தீர்வு காணப்பட வேண்டிய தேவையாக, யாழ்ப்பாணத்திலே எல்லாத் தொழில் வழங்குநர்களிடமும் இருந்து கையேந்தி நிற்கின்றாள் தமிழ்த் தேசியத் தாய். தனது முன்மாதிரிப் பிள்ளைகளின் மீளுயிர்ப்புக்காய்?

படித்து முடித்த நண்பர்களோ, முடிந்தால் பகிருங்கள் பக்கத்திலுள்ளவர்களுடன், தயவுடன் பரிந்துரை செய்யுங்கள் தங்களால் இயன்றளவு செல்வாக்குடன். வெறும் பத்தாயிரம் மாதாந்திர ஊதியத்துடனான பணியொன்றுக்கான மெத்தத் தகைமையுண்டு யாவர் அவர்களிடமும் 'இரங்குகின்ற இதயங்களிலும் மேலானவை, விழிநீர் துடைக்கின்ற விரல்களே' என்கின்ற வாசகத்தை ஆத்மார்த்தமாக நம்புகின்ற, நான் - நீங்கள் - நாங்கள் யாவரும் தோழர்களே!

# விரிவடையும் பிரபஞ்சம் மீண்டும் சுருங்குமா?

ஜெயச்சந்திரன்



**1300 கோடி ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகக் கூறப்படும் மாவெடிப்பின் மூலமாக பிர பஞ்சம் முதன் முதலாகத் தோன்ற வில்லை. முன்னரே இருந்த பிரபஞ்சம் சுருங்கி விரி வடைந்ததினால் தான் அது பௌதிக விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றது**

எந்த ஒரு வெடிப்பு நிகழ்ந்தாலும், வெடித்துச் சிதறும் பொருள்கள் வேகமாக நாலாபக்கமும் பரவலாக சென்று விழுவதைக் கண்டுள்ளோம். அவ்வாறு விழுவதற்குக் காரணம் பூமியின் ஈர்ப்புவிசை. ஈர்ப்புவிசை இல்லாத வெளியில் இந்த வெடிப்பு நிகழுமேயானால் என்னவாகும்? வெடித்துச் சிதறும் பொருள்கள் வெடிப்பின் வேகத்தில் தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கும்; கீழே விழாது. வேறு ஏதாவது ஒரு சக்தி தடுத்து நிறுத்தாவிட்டால் வேகமாய் செல்லும் பொருள் அதன் வேகத்தில் தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கும்.

வெளியில் நாம் ஒரு கிரிக்கெட் பந்தை மட்டையால் அடித்தால் அந்த பந்து சென்று கொண்டே இருக்கும்; விழவே விழாது. சிக்சர் எல்லாம் தாண்டிச் சென்றுவிடும். வேறு யாராவது அடித்த வேறு ஒரு பந்து, நாம் அடித்த பந்தின் அருகில் வந்தால் இரண்டு பந்தும் ஒன்றை ஒன்று இழுத்துக்கொண்டு இணைந்துவிடும். ஏனென்றால் பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அதனதன் நிறைப்படி ஈர்ப்புவிசை இருக்கின்றது.

சூரியன் உருவாகியவுடன் ஏற்பட்ட அதி பயங்கர வெடிப்புடன் உண்டான புகையும், தூசும் இப்படித்தான் தூக்கி எறியப்பட்டு சூரிய னைச் சுற்ற, அவை ஈர்ப்பு விசையால் இணைந்துதான் இந்தப் பூமியும் மற்ற கோள்களும் உருவாகின.

மா வெடிப்புக்குப் பிறகு விரிவடைந்த பிரபஞ்சம் அதன் வெடிப்பு வேகம் குறையும்போது பிரபஞ்சத்தில் இருக்கும் நட்சத்திரங்கள், பால்வெளி மண்டலம் போல உள்ள எண்ணற்ற மண்டலங்களின் ஈர்ப்பு விசையினால் மீண்டும் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டு சுருங்கி, தொடங்கிய நிலைக்கே வந்துவிடும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்த்தனர். அதனை மா சுருக்கம் என்று அழைத்தனர். மாவெடிப்பு ஏற்பட்டு 1300 கோடி ஆண்டுகள் கடந்ததனால் விரிவாக்க வேகம் குறைந்து ஈர்ப்பு விசையினால் இந்த சுருக்கம் ஆரம்பித்திருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதினர்.

ஆனால் அதிநவீன தொலைநோக்கியில் பிரபஞ்சத்தின் விரிவு வேகம் குறையவில்லை என்றும், மாறாக பிரபஞ்சம் வேகமாய் விரிவடைவதை கண்டறிந்தபோது விஞ்ஞானிகள் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார்கள் . இந்த வேகத்தில் விலகிச் சென்றுகொண்டிருந்தால் ஈர்ப்பு விசை வலுவிழந்துவிடும். அதன் விளைவு மிகவும் வித்தியாசமாக இருக்கும்.

அதாவது நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் எல்லாம் பூமியிலிருந்து மேலே எழுந்து முதலில் மிதக்க ஆரம்பிக்கும். எல்லாப் பொருள்களும் அணு அணுவாகப் பிரிந்து வெளியில் விலகிச் சென்றுவிடும். மனிதர்களும், விலங்குகளும் விதிவிலக்கல்ல.

ஏனென்றால் ஈர்ப்புவிசை தான் இவையனைத்தையும் இழுத்து இணைத்து வைத்திருக்கின்றன. முன்னர் கூறியதுபோன்று சூரிய குடும்பதிலுள்ள எல்லாக் கிரகங்களும் சூரியனை விட்டுப் பிரிந்து சென்றுவிடும். விரிவாக்க வேகம் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தால் பிரபஞ்சம் அழியும் என்ற கோட்பாட்டை பல விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆனால் கனடா நாட்டில் இயற்பியல் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பரம் சிங் என்ற மதிப்புக்குரிய இந்திய விஞ்ஞானி, இந்த விரிவாக்கம் தொடர்ந்து நடக்காது, பிரபஞ்சம் ஈர்ப்புவிசையால் மீண்டும் சுருங்கும் என்கிறார். அவர் ஒரு புதிய கணக்கை வெற்றிகரமாக வடித்துள்ளார். அந்த கணக்கு கூறுவது என்னவென்றால் ஈர்ப்பு விசையினால் சுருங்கும் பிரபஞ்சம் மிக மிகச் சிறியதாக சுருங்கிவிட்டால் ஈர்ப்புவிசை எதிர்விளைவுகளை ஏற்படுத்தி பிரபஞ்சத்தை விரிவாக்கும் என்பதுதான். நாம் வாழும் இந்தப் பிரபஞ்சம் அப்படிதான் உருவாயிருக்கின்றது என்று தெளிவுபடக் கூறுகின்றார்.

விரிவடைதலும் சுருங்குதலும் என்ற திரும்பத் திரும்ப நடைபெறும் நிகழ்ச்சியால் தான் நாம் இப்போது வாழும் இந்தப் பிரபஞ்சம் இந்த நிலையில் இருக்கின்றது.

1300 கோடி ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகக் கூறப்படும் மாவெடிப்பின் மூலமாக பிரபஞ்சம் முதன் முதலாகத் தோன்றவில்லை. முன்னரே இருந்த பிரபஞ்சம் சுருங்கி விரிவடைந்ததினால் தான் அது பௌதிக விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றது என்று கூறுகிறார். ஒன்றுமே இல்லாத நிலையிலிருந்து பிரபஞ்சம் உருவாகவில்லை என்று அவர் உறுதிபட கூறுகின்றார். மிகச் சிறிதாக சுருங்கிய பிரபஞ்சத்தை 'ஒன்றுமில்லாத நிலை' என்று கூறமுடியாது என்கிறார்.

ஆனால் எப்பொழுது பிரபஞ்சம் முதன் முதலில் தோன்றியது என்ற கேள்விதான் ஆராயப்பட வேண்டியது என்கிறார். அவரது கோட்பாடும் பலரது பாராட்டைப் பெற்றிருக்கின்றது

முன்னர் ஒரு பிரபஞ்சத்தின் பல கருத்துளை மூலமாக புதிய பல பிரபஞ்சங்கள் தோன்றியிருக்கின்றது என்று சில விஞ்ஞா னிகள் கூறும் கோட்பாட்டைப் பற்றி பார்த்தோம். மற்றொரு கோட்பாடு பிரபஞ்சம் தோன்றி விரிவடைதல், பின்னர் சுருங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளினால் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது என்று கூறுகின்றது.

இவை இரண்டும் இணைந்தே இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கலாம் அல்லவா?

பிரபஞ்சம் கருத்துளைகள் மூலமாக பல புதிய பிரபஞ்சங்களை உண்டாக்குவது, ஒரு மரம் முளைத்து அது பல விதைகளை உண்டு பண்ணி பெருகுதலை ஒத்தும், விரிவடைந்து சுருங்கும் பிரபஞ்சம் ஒரு வாழை மரம் வளர்ந்து பெரிதாகி, பின்னர் அழிந்து மீண்டும் பூமியின் அடியிலுள்ள கிழங்கிலிருந்து முளைப் பது போலவும் உள்ளதல்லவா? பூமியில் உயிரினங்கள் எப்படி பெருகுகின்றனவோ அதே போல பிரபஞ்சங்களும் பெருகுகின்றன என்றும் சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பிரபஞ்சத்தின் தோற்றம், வளர்ச்சி, அழிவு பற்றி ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகள் பல தடைக்கற்களைக் கடந்து அனைத்து உண்மைகளையும், மனித குலத்துக்கு வெற்றிகரமாக வழங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி கற்றவர் யார்...?

தயாநிதியும், வேணுவும் பேச ஆரம்பித்தால் அந்த இடம் ஒரு பட்டி மன்றம் போல் ஆகிவிடும்... அந்த அளவுக்கு வெளிப்படையாக மனம் விட்டுப் பேசிக் கொள்வது அவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. அன்றைய தினம் வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்களைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது தயாநிதி கூறினான்: ''இன்றைக்கு உனக்கு நான் ஒரு போட்டி வைக்கப்போகிறேன்.. அதில் நீ வெற்றி பெறப் போகிறாயா...'' இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும்...'' என்றான். அதைக் கேட்ட வேணு, ''அது என்ன போட்டி....?'' என்று வியப்புடன் கேட்டான்.

''அவசரப்படாதே... என்னோடு வா..'' என்று கூறியபடி அந்த ஊரில் இருந்த பேராசிரியர் சுந்தரம் என்பவர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றான்.

அங்கே அவர் படுத்த படுக்கையாக இருந்தார். மது அருந்தும் பழக்க முடைய அவர், அதன் காரணமாக உடல் நலம் கெட்டு படுத்த படுக்கையாகி விட்டார். தன்னைத் தயாநிதி இந்த இடத்துக்கு ஏன் அழைத்து வந்திருக் கிறான் என்பது வேணுவுக்கு விளங்கவில்லை. பேராசிரியர் சுந்தரத்திடம் உடல்நலம் விசாரித்துவிட்டு தயாநிதி அங்கிருந்து வேணுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அதற்கு அடுத்த தெருவில் பேராசிரியர் தங்கமணி வீடு. இருந்தது. ''மரியாதை நிமித்தமாக உங்களைப் பார்க்க வந்தோம்...'' என்று சொல்லிவிட்டு, அவரிடம் சிறிது நேரம் உரையாடி விட்டுத் தயாநிதி புறப்பட்டுப் போனான். வேணுவும் அவனைப் பின் தொடர்ந்தான். ''ஏதோ போட்டி வைக்கப் போறேன்னு சொன்னாய்... இரண்டு பேராசிரியர்களின் வீட்டுக்குப் போனதோடு சரியா? என்று வேணு கேட்டான்.

''இப்போதான் போட்டி ஆரம்பமாகப் போகிறது... நான் சொல்வதைக் கவனமாகக் கேள். இப்போது நாம் பார்த்த பேராசிரியர் சுந்தரம் திருக்குறளில் 'கள்ளுண்ணாமை' என்னும் அதிகாரத்தில் முதல் ஐந்து பாடல்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். அடுத்து நாம் சந்தித்த தங்கமணி, அதே 'கள்ளுண்ணாமை' அதிகாரத்தில் அடுத்த ஐந்து பாடல்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம்பெற்றவர்

''ஒவ்வொருவரும் ஐந்து பாடல்களைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்திருக்கிறார்கள். இவர்கள் செய்த ஆய்வுகளில் பல்வேறு கருத்துக்கள் மிக நன்றாக ஆராயப்பட்டுள்ளன. பேராசிரியர் தங்கமணியை விட, ஒருபடி தாண்டி மிக நன்றாக கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் பேராசிரியர் சுந்தரம்.

''பேராசிரியர் சுந்தரத்தின் ஆய்வுகள் ஒருபடி மேலே இருந்தும் கூட, பேராசிரியர் தங்கமணியின் நூல்கள் தான் அதிகமாக விற்பனையாகியுள் ளன. இதற்கு என்ன காரணம்? இதற்குச் சரியான பதில் சொல்ல வேண் டும். இதுதான் போட்டி...'' என்று தயாநிதி கூறினான். அப்படிக்கூறி விட்டு, ''ஒரே ஒரு குறிப்பு மட்டும் சொல்லப் போகிறேன்... அதை மனதில் வைத்துக் கொண்டு, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லலாம்'' என்று கூறிய தயாநிதி, ''பேராசிரியர் சுந்தரம் மதுப்பழக்கத்தால் உடல் கெட்டு நோய் வாய்ப்பட்டிருக்கிறார். பேராசிரியர் தங்கமணி மதுப்பழக்கம் இல்லாதவர். இதுதான் குறிப்பு. எங்கே பதில் சொல் பார்க்கலாம்...'' என்றான் தயாநிதி.

''இது என்ன ரொம்ப வித்தியாசமான போட்டியா இருக்குதே...'' என்று கூறிய வேணு யோசிக்கத் தொடங்கினான். அவனுக்கு ஒரு பதில் கிடைத்தது. ''பேராசிரியர் சுந்தரம் நோய்வாய்ப்பட்டிருப்பதால் அவருடைய நூல்களை உரிய முறையில் விநியோகம் செய்யமுடியவில்லை. அதனால் அவருடைய புத்தகம் அதிக அளவுக்கு விற்பனையாகவில்லை. பேராசிரியர் தங்கமணி உடல் நலத்துடன் இருக்கிறார். அதனால், அவரால் சரியான முறையில் நூல்களை விநியோகம் செய்ய முடிகிறது. நான் சொல்வது சரிதானே...? என்று வேணு கேட்டான்.

''இந்தப் பதில் சரியில்லை. ஆனா, நீ பதில் கூறியதால் இன்னொரு குறிப்பையும் கொடுக்கிறேன். இரண்டு பேருமே நூல் விநியோகம் செய்யும் பணியைச் செய்யவில்லை. ஒரே பதிப்பகம் தான் இந்த இரு நூல்களையும் வெளியிட்டு விற்பனை செய்தது. நூல்களை சமமாக அவர்கள் எல்லா இடங்களுக்கும் அனுப்பி வைத்தார்கள். அப்படி இருந்தும் கூட பேராசிரியர் தங்கமணி யின் நூல்கள்தான் மிக அதிகமாக விற்பனையாகியுள்ளன. இந்தக் குறிப்பையும் மனதில் வைத்துக் கொண்டு இப்போது நீ பதில் சொல்லலாம்...'' என்றான் தயாநிதி. வேணு வெகுநேரம் ஆலோசனை செய்தான். அவனுக்கு வேறு எந்தப் பதிலும் பிடிபடவில்லை. ''இந்தப் போட்டி சிந்தனையைத் தூண்டுகிற விதத்திலே நல்லா இருக்கிறது. ஆனா... பதில்தான் எனக்குப் பிடிபடவில்லை. நீயே சொல் பார்க்கலாம்..'' என்றான் வேணு.

தயாநிதி அதற்குப் பதில் சொல்லத் தொடங்கினான். ''பேராசிரியர் சுந்தரமும், பேராசிரியர் தங்கமணியும் 'கள்ளுண்ணாமை' அதிகாரத்திலிருந்த பாடல்களை ஆய்வு செய்திருக்கிறார்கள். பேராசிரியர் சுந்தரம் ஒரு படி தாண்டி அருமையான விளக்கங்களை அந்த ஆய்வில் தந்திருக்கிறார். அப்படி இருந்தும் கூட, அந்த நூல்கள் அதிகமாக விற்பனையாகவில்லை. இதற்கு மூலகாரணம் 'கள்ளுண்ணாமை' அதிகாரத்தை அவர் மிக நன்றாக ஆய்வு செய்தாரே அன்றி, அந்தப் பாடல்களின்படி நடைமுறையில் நடந்து கொள்ளவில்லை.

''கள்ளுண்ணாமை அதிகாரம் என்பது மது அருந்தக் கூடாது என்பதை வலியுறுத்துவது. அதை ஆய்வு செய்த பேராசிரியர் சுந்தரம் மதுப்பழக்கத் துக்கு அடிமையாகி, உடல் நலம் கெடும் அளவுக்குத் தன் உடலைக் கெடுத் துக் கொண்டார். ''பேராசிரியர் தங்கமணி அவ்வாறு மதுப்பழக்கத்துக்கு ஆளாக வில்லை. எந்த ஒரு விஷயத்தைப் போதிக்கும் போதும் அந்தக் குறை பாட்டை போதிப்பவர் செய்யாதிருக்கும் போதுதான் அந்த உபதேசத்துக்கு மிகுந்த வலிமை கிடைக்கிறது. மக்கள் மனதில் ஆழமாகப் பதியக்கூடியதாகவும் இருக்கும். ''பேராசிரியர் தங்கமணி மதுப்பழக்கம் இல்லாதவர் என்பதால், அவர் வலியுறுத்திய கருத்துக்கள் மிகுந்த வலிமை பெற்றவையாக இருந் தன. அதுவே அவருடைய நூல்கள் அதிகம் விற்பனையாவதற்குக் காரண மாக அமைந்தது. இதுதான் பதில்... புரிந்ததா....? என்றான் தயாநிதி.

இந்தப் பதிலைக் கேட்டு மிகவும் வியப்படைந்த வேணு, ''மிகச் சரியான விளக்கம்...'' என்று சொல்லி தயாநிதியைப் பாராட்டினான். இந்த நண்பர் களின் உரையாடற் கதை இத்தோடு முடிந்தது.

எந்த உபதேசமாக இருந்தாலும் அதைச் செய்பவர் அந்தக் குற்றத்திலிருந்து நீங்கியிருந்தால் தான் அது உத்வேகத்தைப் பெறும் என்பதைப் புரிந்து கொள்ள வேண் டும். ஆன்மிகக் கருத்துக்களை இந்த வைய கத்தில் எவ்வளவோ பேர் பிரசங்கம் செய்கிறார் கள். ஆனால் சில அவதார புருஷர்களின் கருத்துக்கள் மட்டும் மிக வேகமாக உலக மெங்கும் பரவுகின்றன. இதற்கு மூலகாரணம், அந்த ஆன்மிகக் கருத்துக்களைச் செயலள வில் அவர்கள் கடைப்பிடித்தவர்கள். அத னால் தான் மிகவும் வலிமையுடன் அந்தக் கருத்துகள் நிலைபெறுகின்றன. இதுவே இரகசியம்..



**பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்**

# அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்



(கடந்த வாரத் தொடர்ச்சி..)

**கர்ணன்**

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் முழு அமைப் பிலான அங்கத்துவ முறையை நடைமுறைப்படுத்திய அதே ஆண்டில் குழு அமைப்பிலான அங்கத்து வர்களுக்கும் பொருளாதாரக் கடன்களை வழங்கத் தொடங்கியது.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் கரண வாய் மேற்கு குழு அமைப்பைச் சேர்ந்த 2 பயனா ளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கு 60 ஆயிரம் ரூபாவும், மற்றொரு பயனாளிக்கு விவசாயச் செய்கைக்கென 50 ஆயிரம் ரூபாவும், உடுப்பிட்டி குழு அமைப்பைச் சேர்ந்த 9 பயனாளிகளுக்கு கால் நடை வளர்ப்புக்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் மற்றும் இரு பயனாளிகளுக்கு வியாபார நடவடிக் கைக்கு ஒரு இலட்சம் ரூபாவும் கடனாக வழங்கப் பட்டன.

அதேபோல பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பொலிகண்டி மேற்கு குழு அமைப்பைச் சேர்ந்த 17 பயனாளிகளுக்கு கடல் தொழில் விருத்திக்கென 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், மற்றொரு பயனாளிக்கு வியாபாரத்துக்கென 50 ஆயிரம் ரூபாவும், தும்பளை குழு அமைப்பைச் சேர்ந்த 6 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கென 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கற்கோவளம் குழு அமைப்பைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கென ஒரு இலட்சம் ரூபாவும், புலோலி வடக்கு குழு அமைப்பைச் சேர்ந்த 8 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கென ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், புலோலி வட கிழக்கு குழு அமைப்பைச் சேர்ந்த 3 பயனாளிகளுக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், புலோலி மேற்கு குழு அமைப்பைச் சேர்ந்த 2 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும், 3 பயனாளிகளுக்கு விவசாயச் செய்கைக்கென 60 ஆயிரம் ரூபாவும், மற்றொரு பயனாளிக்கு வியாபாரத் துக்கென 30 ஆயிரம் ரூபாவும், புலோலி வட மேற்கு குழு அமைப்பைச் சேர்ந்த உப பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கு 35 ஆயிரம் ரூபா வும், புலோலி தெற்கு குழு அமைப்பைச் சேர்ந்த 17 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கு 7 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், 12 பயனாளிக ளுக்கு சிறு வியாபாரத்துக்கென 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் கடன்களாக வழங்கப்பட்டன.

> **2010 ஆம் ஆண்டு பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் மூன்று கிராமிய அமைப்புக்களைச் சேர்ந்த 22 பயனாளிகளுக்கு மொத்தமாக 11இலட்சத்து 71 ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கடனாக வழங்கப்பட்டது. பயனாளிகளிடமிருந்து மீளளிப்பாக 33 இலட்சத்து 61 ஆயிரத்து 555 ரூபா பெறப்பட்டது.**

2010 ஆம் ஆண்டு பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக ளில் மூன்று கிராமிய அமைப்புக்களைச் சேர்ந்த 22 பயனாளிகளுக்கு மொத்தமாக 11 இலட்சத்து 71 ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கடனாக வழங்கப்பட்டது. பயனாளிகளிடமிருந்து மீளளிப்பாக 33 இலட்சத்து 61 ஆயிரத்து 555 ரூபா பெறப்பட்டது. வாழ்வாதார மொத்தக் கடன் மீதியாக 64 இலட்சத்து 73 ஆயிரத்து 660 ரூபாவாக இருந்தது.

கடந்த 2011 ஆண்டில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நான்கு கிராமிய அமைப்புக்களைச் சேர்ந்த 26 பயனாளிகளுக்கு மாத்திரம் 16 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கடனாக வழங்கப் பட்டது. இதேகாலப்பகுதியில் கிராமிய அமைப்புக்கள் ஊடாக வழங்கப்பட்டிருந்த கடன்தொகையில் இருந்து 18 இலட்சத்து [illegible] ரூபா மீளப்பெறப் பட்டதுடன் 62 இலட்சத்து 62 ஆயிரத்து 245 ரூபா கடன் மிகுதியாக இருந்தது. அத்துடன் அதே ஆண்டில் குழு அமைப்புகளைச் சேர்ந்த 91 பயனாளிகளுக்கு 32 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கடனாக முதன் முதலாக வழங்கப்பட்டிருந்தது. இந்தக் குழுக்களிடமிருந்து 6 இலட்சத்து 20 ஆயிரத்து 910 ரூபா மீளளிப்புப் பெறப்பட்டதுடன், 26 இலட்சத்து 39 ஆயிரத்து 90 ரூபா கடன் மிகுதியாக இருந்தது.

முதன்முதலாக 2011 ஆம் ஆண்டில் குழு அமைப்புக்களாக அங்கத்துவம்பெற்றோரில் , பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 24 குழுக்களைச் சேர்ந்த 124 அங்கத்துவப் பயனாளிகள் 7 இலட்சத்து 23 ஆயிரத்து 118 ரூபா 16 சதத்தையும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 14 குழுக்களைச் சேர்ந்த 70 அங்கத்துவப் பயனாளிகள் 2 இலட்சத்து 92 ஆயிரத்து 920 ரூபா 68 சதத்தையும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தில் சேம நிதியாக வைப்புச் செய்திருந்தனர்.

இதேவேளை கிராமிய அமைப்புக்களைச் சேர்ந்த அங்கத்துவப் பயனாளிகளின் சேமநிதியாக 71 இலட்சத்து 61 ஆயிரத்து 159 ரூபா 39 சதமாக இருந்தது. கிராமிய மக்களின் வறுமை நிலையை நீக்கி சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவித்து அவர்களை வாழ்வாதாரத்தில் உயர்வடைய பெரிதும் உதவி வரும் வடமராட்சி நவ்லொழுக்க நிறுவனம் தனது நோக்கத்தை அடைவதற்கு மிகவும் தடையாக உள்ள புகைப்பிடித்தல், போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்காக வருடந்தோறும் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வரும் திட்டத்தில் இந்த ஆண்டும் (2011) நட்வடிக்கைகளை மேற்கொண்டது.

நல்லொழுக்க தினத்தை முன் னிட்டு நடத்தப்பட்ட கொடி வாரத்தின் மூலம் 94 ஆயிரத்து 18 ரூபா நிதி சேக ரிக்கப்பட்டது. இந்த நிதி சேகரிப்பில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர் களின் பங்கு முக்கியமானதாகும். அத்துடன் ''மதுப்பாவனை, புகைப்பிடித் தல் போதையற்ற சமுதாயத்தை உரு வாக்க முன் வருவோம்'' என்ற தலைப் பில் நெல்லியடி மத்திய மகாவித்தி யாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, கட்டை வேலி ஞானாசாரியார் கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்ப ராக் கல்லூரி, பருத்தித்துறை வேலாயு தம் மகாவித்தியாலயம் ஆகிய 5 பாடசாலைகளிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு அந்தக் கருத்தரங்குகளில் வல்வெட்டித்துறை சிவகுருவித்தி யாலய அதிபர் ஆ.சிவநாதன், யாழ். மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் நா.சோதிநாதன் ஆகியோர் கருத்து ரைகளை வழங்கினார்கள். இந்தக் கருத்தரங்குகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக இதேகாலப்பகுதியில் புதிதாக இணைந்துகொண்ட 10 அங்கத்தவர்களுக்கு ஒரு தேசி, 11 மாமரம், 9 ஈரப்பலா, 5 தோடை, 5 மாதுளை, 5 பலா, 3 ஜம்பு, 7 கொய்யாமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்த மரங்களை வளர்ப்பதன் மூலம் பயனாளி கள் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என நல்லொழுக்க நிறுவனம் எதிர்பார்த்துள்ளது. நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அந்திம காலத்திட்டத்தில் நிறுவன அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு வருகின்றனர். இத் திட்டம் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் பயனுள்ள திட்டமாக இருப்பதுடன் இலாபகரமான திட்டமும் ஆகும். இந்தத் திட்டத்தில் இதுவரை 339 அங்கத்தவர் கள் இணைந்துள்ளனர். எனினும் 200 அங்கத்தவர்கள் மாத்திரமே தொடர்ந்து சந்தா செலுத்தி வருகின் றார்கள். இதுவரை 6 அங்கத்தவர்கள் இந்த திட்ட நிதியைப் பெற்றுள்ளார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் அக்கிரமங்கள் நிலைக்காது அரசாட்சி

## விரைவில் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்கிறார் துரைரெட்ணசிங்கம்

திருகோணமலை,நவ.7

ஏழை மக்களின் வயிற்றிலடிக்கும் 'திவிநெகும' சட்ட வரைவு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து சிக்கலில் மாட்டிக்கொண்ட மஹிந்த அரசு, பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளது. அதேவேளை, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் நோக்கில் 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க அரசு முயற்சி செய்கின்றது. இவ்வாறு நாட்டில் அக்கிரமங்களைப் புரிந்துவரும் மஹிந்த அரசின் ஆட்சி நிலைக்கமாட்டாது. மிக விரைவில் மக்களுக்கு, நாட்டுக்கு நீதி கிடைக்கும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவருமான க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

**13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லா தொழிக்கும் மஹிந்த அரசின் முயற்சிக்கு சிரேஷ்ட அமைச்சர்களே கடும் எதிர்ப்பைக் காட்டத் தொடங்கிவிட்டனர்.**



பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை, 13ஆவது அரசமைப்புத் திருத்தம் ஆகிய விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிட்டோம், நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளோம் என்று மார்தட்டி வீரவசனம் பேசி வந்த மஹிந்த அரசின் கபடநாடகத்தை சிங்கள மக்களும் தற்போது புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

தனக்குச் சார்பாக நடப்பவர்களைப் பதவியில் இருத்துவதும், நீதியின் பிரகாரம் நடப்பவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களைத் தூக்கி யெறிவதும் மஹிந்த அரசின் வழமையான பணியாகிவிட்டது என்பதை சிங் கள மக்களும், அரசியல்வாதிகளும் தெரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

இதனால்தான் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்கும் மஹிந்த அரசின் முயற்சிக்கு சிரேஷ்ட அமைச்சர்களே கடும் எதிர்ப்பைக் காட்டத் தொடங்கிவிட்டனர். அத்துடன், பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசில் அங்கம் வகிப்போரே கையொப்பமிட மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் தற்போது மஹிந்த அரசால் அரங்கேற்றப்படும் அக்கிரமங்கள் தொடர்பில் சர்வதேசம் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. இதனால் சிக்கலுக்குள் மாட்டப் போகின்றது அரசு. எனவே, நாட்டுக்கு நீதி கிடைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. மிக விரைவில் மஹிந்த அரசின் அக்கிரமத்திலிருந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கும் - என்றார். (ச)

# நுளம்புப் பெருக்கம்; அறுவருக்கு வழக்கு



எருவில்,நவ.7

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் நுளம்பு பெருக்கத்துக்கு காரணமாக இருந்த ஆறு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸின் சூழல் பாதுகாப்புப் பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிமனை மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை ஆகியன இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.

இதன்போது மட்டக்களப்பு மாநகரத்துக்குட்பட்ட வீடுகள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், வங்கிகள் உட்பட சுமார் 150 நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸின் சூழல்பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஜே.என்.ஜயசுந்தர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக டெங்கு பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ள நிலையிலும், அவற்றை உரிய முறையில் சிலர் கடைப்பிடிப்பதில்லை என்று அவர் கூறினார்.

எனவே நுளம்பு பெருக்கம் ஏற்படுவதற்கு ஏதுவாகவுள்ள இடங்கள் அடையாளம் காணப்படுமிடத்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச-31)

# திடீர், திடீரென விழுந்து இறந்தன 6 பசுக்கள்

## கல்முனையில் சம்பவம்



எருவில்,நவ.7

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட நற்பிட்டிமுனைக் கிராமத்தின் அஷ்ரப் பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகில் மேய்ந்து கொண்டிருந்த பல பசுக்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை திடீரென மயங்கி வீழ்ந்து இறந்துள்ளன.

நற்பிட்டிமுனைக் கிராமத்தைச் சேர்ந்த மாட்டு பண்ணை வைத்திருக்கும் உரிமையாளர்கள் வழமை போன்று தமது பசுக்களை மேய்ச்சலுக்கென விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தநிலையில் மேய்ந்து கொண்டிருந்த ஆறுக்கும் மேற்பட்ட பசுமாடுகள் திடீரெனஅந்தஇடத்திலேயே வாயால் நுரைகக்கிய வண்ணம் துடிதுடித்து இறந்துள்ளன.

இதனையறிந்த பசுக்களின் உரிமையாளர்களும், பொது மக்களும்அந்த இடத்தில் ஒன்று கூடினர். சம்பவம் தொடர்பாக கல்முனை கால் நடை வைத்திய அதிகாரிக்கும் தகவல்கள் அனுப்பப்பட்டன. சம்பவ இடத்துக்கு வருகை தந்த கால்நடை வைத்திய அதிகாரிகளும் பசுக்களை சோதித்து எஞ்சி இருக்கும் பசுக்களுக்கு சிகிச்சையளித்தனர். இறந்த பசுக்களின் பெறுமதி 5 இலட்சம் ரூபாவுக்கு மேல் என்று உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச-31)

# புற்றுநோய் கொடிவாரம்

எருவில்,நவ.7

மட்டக்களப்பு புற்றுநோய் சங்கம் ஏற்பாடு செய்திருந்த புற்றுநோய் கொடிவாரம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு புற்றுநோய் சங்கத்தின் தலைவர் கே.சயனொளிபவான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். முதலாவது கொடி மாவட்ட அரச அதிபருக்கு அணிவிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எம்.முருகானந்தம், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்திய கலாநிதி கே.கருணாகரம், வைத்திய அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். புற்றுநோய் கொடிவாரம் எதிர்வரும் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-31)



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூரை திருகோணமலை பொது வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாகாண அமைச்சில் சந்தித்துள்ளனர். திருகோணமலை பொது வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்திகள் குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டன.

# பெண் தொழிலாளர்களை பதம் பார்த்தன குளவிகள்

## 30 பேருக்கு நேற்று சிகிச்சை

பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெலிவத்தை தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 30 பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

கெலிவத்தை தோட்டத்தின் இரண்டாம் இலக்க தேயிலைமலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொழுந்து பறித்துக்கொண்டிருந்த இந்தப் பெண் தொழிலாளர்களை குளவிகள் சூழ்ந்துகொட்டி யுள்ளன.

குளவிகளின் கொட்டுக்கு இலக்கானவர்களில் 20 பேர் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனைய 10 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# தொல்பொருள்கள் திருடியவருக்கு ரூ. 75 ஆயிரம் அபராதம்

கண்டி,நவ.7

தொல்பொருள்கள் சிலவற்றை திருடி தம்வசம் வைத்திருந்ததுடன் அவற்றை சேதப்படுத்திய குற்றச்சாட்டுக்களின் பேரில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு கண்டி மேலதிக நீதிவான் தனுஜா ஜயதுங்க 75,000 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

தவுலகல பொலிஸார் சந்தேகநபருக்கு எதிராக கண்டி நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தனர். வழக்கு விசாரணையின்போது இந்த நபர் குற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து, 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (ச)

# தெப்பக்குளம் உடைப்பு; பயிர்ச் செய்கை பாதிப்பு

லிந்துலை,நவ.7

லிந்துலை, கவுலினா தோட்டத்திலுள்ள தெப்பக்குளம் உடைப்பெடுத்து நீர் வெளியேறியதால், பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளது என்று வீட்டுத்தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தெப்பக்குளத்துக்கு அருகிலுள்ள கொழுந்து மடுவத்தில் வைக்கப்பட்டிருந்த தேயிலைக் கொழுந்து சேகரிக்கும் பிளாஸ்ரிக் கூடைகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டன என்று தோட்ட மக்கள் கூறினர். தெப்பக் குளத்தின் உடைப்புப் பகுதியைச் சீர்செய்வதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. (ச)



# 'திவிநெகும' தொடர்பில் விளக்கம்

கல்முனைப் பிரதேசத்தின் சமுர்த்தி வலையமைப்பிலுள்ள அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கு 'திவிநெகும' திட்டம் தொடர்பாக அறிவூட்டும் கருத்தரங்கு கல்முனை கிறிஸ்டா இல்ல மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாக சமுர்த்தி அதிகார சபையின் வாழ்வாதார நிகழ்சித் திட்டத்துக்கான பணிப்பாளர் எம்.நடேசராஜா, சமுர்த்தி மாவட்ட இணைப்பாளர் ஐ.அலியார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மனதில் சிறுகுழப்பம் ஏற்படலாம். குடும்பப் பெரியவர்களின் நல் ஆலோசனைப்படி நடப்பதால் செயல்களில் வளர்ச்சி மாற்றம் ஏற்படும். தொழில், வியாபார இலக்கு நிறைவேற அனுகூல காரணி பலம் பெறும். நீண்டநாள் காணாமல் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**இடபம்:** உங்கள் வாழ்வில் கூடுதல் வளம்பெற புதிய வாய்ப்பு உருவாகும். நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சராசரி பணவரவுடன் உபரி பணவருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்து பேசுவர். தன்னம்பிக்கையுடன் செயற்படுவதால் மட்டுமே இலட்சியத்தை நிறைவேற்ற இயலும். தொழில், வியாபாரம் செழிக்க அதிக பணிபுரிவீர்கள். பணவரவு திருப்திகரமாக கிடைக்கும். முக்கிய ஆவணத்தை பிறர் பொறுப்பில் விடவேண்டாம்.

**கடகம்:** நீங்கள் கடந்தகாலத்தில் செய்த உதவிக்கு நற்பலன் தேடிவரும். தொழில், வியாபாரத்தில் தேவையான மூலதனத்துடன் அபிவிருத்திப் பணி செய்வீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** உங்கள் செயல்களில் சுயதேவையைப் பூர்த்தி செய்கிற ஆர்வம் நிறைந்திருக்கும். அடுத்தவர் விடயத்தில் கருத்துச் சொல்வதால், மனக்கிலேசம் வரலாம். கவனம் தேவை. தொழில், வியாபாரம் சார்ந்த இடம் சரிசெய்வதால் எதிர்பார்த்த வளர்ச்சி உருவாகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** உங்கள் செயலை நிறைவேற்றுவதில் உள்ள தடைகளைச் சரிசெய்கிற யுக்திகளை அறிவீர்கள். குழப்பமாக இருந்த சூழ்நிலை சரியாகும். இயன்றளவில் அறப்பணி செய்து, மனதிருப்தி கொள்வீர்கள். அதிகாரிகளுக்கு நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**நாளை**

ஐப்பசி -23 வியாழக்கிழமை 08.11.2012
திதி: நவமி பி.ப. 01.51 வரை
நட்சத்திரம்: மகம் மு.இ. 07.49 வரை
சுபநேரம்: 07.35 - 09.05 வரை
ராகுகாலம்: 01.35 - 03.05 வரை

**துலாம்:** உங்கள் குடும்பத்தின் நீண்டகால அத்தியாவசியத் தேவையை நிறைவேற்றுவீர்கள். மனதில் பெருமிதமும் நிம்மதியும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி நிலைகண்டுபலரும் வியப்படைவர்.

**விருச்சிகம்:** உங்கள் உறவினரின் அதிகமான பேச்சு தொந்தரவு தருவது போல உணருவீர்கள். இருப்பினும், பெருந்தன்மை குணத்துடன் அவர்களின் பேச்சைப் பொறுத்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்திப் பணிகளில் தாமதம் ஏற்படும்.

**தனுசு:** நீங்கள் எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. செயல்களில் நிதான நடைமுறை பின்பற்றுவதால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். இயந்திரத் தொழிற்சாலை பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**மகரம்:** உங்கள் பணிகளிலுள்ள சிறப்பைக் குறைக்கிற செயல்களில் ஈடுபடுபவரை அடையாளம் காண்பீர்கள். மாற்றம் பின்பற்ற புதியதிட்டம் உருவாக்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**கும்பம்:** உங்களுக்கு எதிர்மறையாகச் செயற்படுபவரின் நடவடிக்கையை சமயோசிதமாக முறியடிப்பீர்கள். சமூகப்பணியிலும் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் உற்பத்தி, விற்பனையில் வளர்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** உங்கள் மனதில் இனம்புரியாத சஞ்சலம் ஏற்படலாம். உங்கள் நலம் விரும்புவரின் நல்ல ஆலோசனை கிடைத்து நேர்வழியில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை நடைமுறை சராசரி அளவில் இருக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 7 | | 4 | | 5 | 2 | |
| | | 2 | | 8 | 1 | | 3 | 9 |
| | | | | | | 4 | | 7 |
| 9 | | 3 | | 7 | 6 | | | |
| 6 | | | 9 | | 8 | | | 3 |
| | | | 1 | 5 | | 9 | | 6 |
| 2 | | 1 | | | | | | |
| 5 | 7 | | 3 | 1 | | 8 | | |
| | 6 | 4 | | 9 | | 1 | | 5 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 6 | 5 | 7 | 8 | 4 | 3 | 1 |
| 8 | 7 | 5 | 3 | 4 | 1 | 6 | 2 | 9 |
| 3 | 1 | 4 | 9 | 2 | 6 | 8 | 7 | 5 |
| 4 | 6 | 2 | 1 | 5 | 7 | 3 | 9 | 8 |
| 5 | 3 | 1 | 8 | 9 | 4 | 7 | 6 | 2 |
| 7 | 8 | 9 | 6 | 3 | 2 | 5 | 1 | 4 |
| 6 | 9 | 7 | 2 | 8 | 5 | 1 | 4 | 3 |
| 1 | 5 | 3 | 4 | 6 | 9 | 2 | 8 | 7 |
| 2 | 4 | 8 | 7 | 1 | 3 | 9 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு பதினேழாம் ஆண்டு



அமரர் கதிரவேலு ஆறுமுகம் திருமதி ஆறுமுகம் பாக்கியம்

தோற்றம்:- 13.04.1924 தோற்றம்:- 01.08.1932
மறைவு :- 19.10.2011 மறைவு :- 20.12.1995
திதி: 07.11.2012 திதி: 10.01.2013

அன்பும் பண்பும் அமைதியும் புன்சிரிப்பும்
ஒருங்கேயமைந்த எம் ஒப்பற்ற தெய்வங்களே!
ஆண்டொன்றோ பலவோ ஆனாலும் ஆறுமோ எம் துயரம்
ஆற்று கரம் போற்று மொழி ஆரளிப்பார் உம் போல

இருகரம் தாங்கியெமை இதயத்தோடணைத்தெடுத்து
பெருகிடு பாசத்தாலே அன்பினுள் பூட்டி வைத்து
குருவோடு தெய்வமாகி குன்றின் மேல் திகழ வைத்தீர்
நிஜ உருவம் நிழற்படமாய் மாறிய மாயமென்ன

கனிவான மொழி பேசி கண்டவுடன் முறுவலித்து
இனியவராய் எளியவராய் எமையெல்லாம் ஆதரித்தீர்
கனிவான மொழி காணோம் களி நடஞ்செய் முகங்காணோம்
உயிரிற் கலந்த உம்நினைவு ஆறாத வலியாய் என்றென்றும்.....

பிரிவால் துயருறும்:
மூளாய் தெற்கு, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சுழிபுரம். Dr.ஆ.காந்தநேசன்.

(25080)(6-7)



# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரம்மா செல்லையா



காரைநகரைப் பிறப்பிடமாகவும், 44, மாட்டீன் லேன், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம்மா செல்லையா நேற்று முன் தினம் (05.11.2012) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் பாசமிகு மனைவியும், இராஜலட்சுமி (ஓய்வுபெற்ற மருந்தாளர், யாழ். போதனாவைத்தியசாலை), விஜயலட்சுமி, காலஞ்சென்ற கிருஷ்புராசா மற்றும் ஆனந்தராசா (Pan Asia Bank) பற்குணராசா (ஆஸ்திரேலியா), இராஜசுலோசனா (கனடா), மதிவதனா, வைத்திய கலாநிதி அனுஷியா (கொழும்பு தெற்கு, போதனா வைத்தியசாலை), நளாயினி (ஆசிரியை - ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வநாயகம் (ஓய்வுபெற்ற விலை மதிப்பீட்டாளர்), காலஞ் சென்ற சண்முகம் மற்றும் திலகவதி, ராஜாம்பாள், அமிர்தகல்யாணி (ஆஸ்திரேலியா), செல்வராசா (கனடா), ஸ்ரீதரன் (வர்த்தகர்- திருநெல்வேலி), யோகேஸ்வரன் (வீதி அபிவிருத்தி அமைச்சு) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிராமி, ஜனகன் (மருத்துவபீட மாணவன்), மதியழகன்- பேழ்ரஞ்சினி, விஜேந்திரன் - தனுஜா, பார்த்தீபன்- டினோஜி, வைதேகி - டினேஸ்ஜெயகுமாரன், உமாப்பிரியன் (HNB - திருநெல்வேலி), ஆதிரையான், அம்ருதா (ஆஸ்திரேலியா), அருணன், ஆரணியா (கனடா), ஆரூரன், வைஷ்ணவன், கேமாங்கதன், மதுசூதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கெத்சியா, கிறேஸியா ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2012) முற்பகல் 10 மணிக்கு மாட்டீன் லேன், 44, இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

44, மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்-
021 2225 639,
077 7577 766.

(25034)(6.7.45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றப் பிரேரணையை எதிர்த்து...



ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கோட்டை ரயில் நிலைத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் மக்கள்.

## கொச்சிக்கடை தும்பு தொழிற்சாலையில் தீ

கொழும்பு,நவ.7

நீர்கொழும்பு, கொச்சிக்கடை, மடப் பல்ல பிரதேசத்தில் உள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட இந்த தீ விபத்து காரணமாக தொழிற்சாலை தீக்கிரையாகியுள்ளது.

நீர்கொழும்பு தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளனர்.

தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்தச்சம்பவம் தொடர்பில் கொச்சிக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தேவையான இடத்துக்கு மழை; சீனாவுடன் பேசுகிறது இலங்கை

### இடர் முகாமைத்துவ அமைச்சர் சொல்கிறார்



கொழும்பு,நவ.7

நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி தேவையான இடங்களுக்கு மாத்திரம் மழையைப் பெற்றுக் கொடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து சீனாவுடன் தற்போது பேச்சு நடத்தி வருகிறோம் என்றார் அவர்.

இதேவேளை, இடர்களினால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை கொள்ளையடிக்கும் அரச உத்தியோகத்தர்கள் குறித்து ஆராய விசேட பிரிவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## போலி துப்பாக்கியைக் காட்டி பெண்ணிடம் சங்கிலி பறிப்பு

### மாட்டினார் சந்தேகநபர் பொலிஸாரிடம்

போலித் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பெண்ணொருவரின் சங்கிலியை பறித்துச் சென்ற சந்தேகநபரொருவர் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை பெண்ணின் கழுத்தை நெரித்து சங்கிலியைப் பறித்துச் சென்றுள்ளார்.

சந்தேகநபரை மடக்கிப்பிடிக்க சிலர் முயன்ற வேளையில் தப்பிச்சென்றுவிட்டார் ஆசாமி. எனினும் சைக்கிளில் தப்பிச் சென்ற குறித்த சந்தேகநபரை வெள்ளவத்தை பொலிஸார் மடக்கினர். சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார். (ச)

# அனுமதியின்றி வெளிநாடுகளுக்கா? அமைச்சர்களின் பதவி பறிபோகும்!

### ஆளும் கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில் மஹிந்த எச்சரிக்கை

கொழும்பு,நவ.7

அனுமதியின்றி வெளிநாடு சென்றால் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகள் இரத்து செய்யப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

அனுமதியின்றி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் அல்லது வரவு - செலவுத் திட்ட விவாதங்களில் பங்கேற்காத ஆளும் கட்சி உறுப்பினர்கள் பணியிலிருந்து நீக்கியவர்களாக கருதப்படுவர்.

அரசின் முக்கிய தீர்மானங்களின்போதும், நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போதும் சில அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரையில் 18 ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

சிலர் அறிவிக்காமல் வெளிநாடு செல்கின்றனர். சிலர் ஓரிரு நாள்கள் அனுமதியைப் பெற்றுக் கொண்டு மாதக் கணக்கில் வெளி நாடுகளில் தங்கியிருக்கின்றனர்.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறு அறிவிக்காமல் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டால் பதவி விலகியதாகக் கருத நேரிடும்.- என்றார். இந்தக் கூட்டத்தில் அமைச்சர் மேர்வின் சில்வாவும் தற்போது வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் ஒரே விதமான சட்டங்களே நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறினார். (ச)



## தூக்குத் தண்டனை ; ஆராய்வதற்கு குழு



கொழும்பு,நவ.7

இலங்கையில் தூக்குத் தண்டனையை நடைமுறைப் படுத்தல் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவை நியமிக்க உத்தரவிட்டுள்ளேன் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதர் பேர்னார்ட் சவேஜ் மற்றும் அமைச்சர் ஹக்கீம் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது. இந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையிலான இந்தக்குழுவில் சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் மற்றும் உளவியல் நிபுணர் ஒருவரும் இடம் பெறுவார் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் குழு கூடி ஆராய்ந்து விதந்துரைக்கும் விடயங்களைப் பொறுத்து தூக்குத் தண்டனையை சிறை தண்டனையாக மாற்றுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தூக்குத் தண்டனை இறுதியாக 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

2002ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி வரையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தவர்களுக்கு ஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கப்பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

**இலங்கையில் தூக்குத் தண்டனை இறுதியாக 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி நிறைவேற்றப் பட்டது.**

## தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்களே இறக்குமதி

### சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு,நவ.7

தேவைப்படும் சத்திர சிகிச்சை உபகரணங்களை மாத்திரம் இனிமேல் இறக்குமதி செய்வ தற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய விசேட நிபுணர்களின் ஊடாக தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்களின் பட்டியல் மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் கமல் ஜயசிங்க தெரிவித்தார்.

14 ஆயிரத்து 447ஆகக் காணப்பட்ட சத்திர சிகிச்சை உபகரணங்கள் ஐயாயிரம் வரை குறைக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதாரத்துறையின் ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது என்று அவர் கூறினார்.

விசேட நிபுணர்களின் ஊடாக தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்களின் பட்டியலில் புதிதாக சில உபகரணங்களும் சேர்க்கப் பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மாணவர்களுக்கிடையில் கைகலப்பு; 15 பேர் காயம்

குருநாகல், இப்பாகமுவ பகுதியிலுள்ள இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் 15 பேர் காயமடைந்துள்ளனர் என்று இப்பாகமுவ பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டது என்று பொலிஸார் கூறினர். காயமடைந்த மாணவர்கள் குருநாகல் மற்றும் பொல்கஹாவல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ச)

## கொழும்பு - சியோல் நேரடி விமானச் சேவை

### அடுத்தமாதம் ஆரம்பமாகும் என்கிறார் இலங்கைக்கான தென் கொரியத் தூதர்

கொழும்பு,நவ.7

இலங்கைக்கும் தென் கொரியாவின் தலைநகருக்கும் இடையிலான விமானச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இலங்கைக்கான தென் கொரிய தூதர் ஜோங்மூன் சோய் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து தென் கொரியாவின் தலைநகரான சியோல் வரையிலான நேரடி விமான சேவை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பமாகும் என்று அவர் கூறினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற தென் கொரியாவின் தேசியதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல வருடங்களுக்கு முன்னர் கொழும்புக்கும் சியோலுக்கும் இடையிலான நேரடி விமானச் சேவை இடம்பெற்றது. எனினும் சில காரணங்களினால் 1984ஆம் ஆண்டு இந்த சேவை இடைநிறுத்தப்பட்டது.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியிலான உறவு சிறந்த முறையில் காணப்படுவதால், அடுத்த மாதத்திலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமானச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்வி, தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு போன்ற பல துறைகளுக்கு தென் கொரியா தொடர்ந்து இலங்கைக்கு உதவும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கி
## வட மாகாண அலுவலகம்

## தடை செய்யப்பட்ட திட்டங்களிலிருந்து விலகியிருங்கள் ! பங்கேற்றால் நீங்கள் உங்களது பணத்தை இழப்பதுடன் சிறை செல்லவும் நேரும்

"திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின்படி,"

**பெறப்படும் நன்மைகள் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பில்**

**அல்லது**

**இத்திட்டத்தில் பங்கேற்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பின் அதிகரிப்பில்**

தங்கியிருக்கின்ற திட்டங்களில் பணத்தை அல்லது நாணயப் பெறுமதியை பங்களிப்புச் செய்வது சட்ட விரோதமாகும்.

**இத்திட்டங்களில் பங்கேற்பவர்கள் கூடிய நன்மைகளைச் சம்பாதிப்பதற்காக புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்படுவதுடன் இணையத்தளங்கள் ஊடாக இத்திட்டங்களை பரப்பும் போக்கும் காணப்படுகிறது.**

அவதானமாக இருங்கள் !

- இத்திட்டத்தில் பங்கேற்கும் எந்த நபரும் குற்றவாளியாகக்காணப்பட்டால் மூன்று ஆண்டுகளை விஞ்சாத சிறைத் தண்டனைக்கும் அல்லது ரூபா ஒரு மில்லியனை விஞ்சாத தண்டப் பணத்திற்கும் அல்லது சிறைத் தண்டனை மற்றும் தண்டப் பணம் இரண்டுக்கும் உள்ளாவர்
- எந்தவொரு ஏனைய நபருக்கு சேதம் அல்லது தீங்கை ஏற்படுத்துவதற்கு வேண்டுமென்றோ அல்லது தெரிந்து கொண்டோ செய்யப்பட்ட குற்றங்களைப் பொறுத்தமட்டில் தண்டனை மிகவும் கடுமையாக இருக்கும்

**எனவே,**

- தடை செய்யப்பட்ட திட்டங்களுக்கு இல்லை; என்று கூறுவதன் மூலம் கஷ்டப்பட்டு உழைத்த உங்களது பணத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்
- இத்திட்டங்களில் பங்கேற்பதனூடாக இலகுவாகப் பணத்தைச் சம்பாதித்தல் இயலாதென்பதை விளங்கிக் கொள்ளுங்கள்

**பிரமிட் அமைப்புக்கள் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்களில் பங்கேற்பது சட்ட விரோதமானதாகும்!**

எனவே, அத்தகைய வஞ்சகமான மற்றும் மோசடியான திட்டங்களிலிருந்து விலகியிருங்கள் !!

(C/4561) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பொதுமக்களின் நன்மை கருதி இலங்கை மத்திய வங்கியால் விடுக்கப்படும் செய்தி




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# ஆளும்கட்சிக்கு தாவினர் மு.கா. உறுப்பினர் இருவர்

### வட மேல் மாகாண சபையில் திருப்பம்

கொழும்பு,நவ.7

வடமேல் மாகாண சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவரில் இருவர் நேற்று செவ்வாய்க்கிழமை ஆளும் கட்சிக்குத் தாவியுள்ளனர்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு தெரிவித்து ஏற்கனவே நாடாளுமன்றத்திலும் ஏனைய மாகாண சபைகளிலும் ஆளும் கட்சி பக்கம் தாவிய நிலையில் வடமேல் மாகாண சபை உறுப்பினர்கள் இது வரை காலமும் எதிர்க்கட்சி பக்கமே இருந்து வந்தனர்.

இந்தநிலையில் நேற்று வடமேல் மாகாண சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுக்களின் தலைவர் எஸ்.ஏ.எஹ்யா, குருநாகல் மாவட்ட உறுப்பினர் ரிஸ்வியும் அரசுக்கு ஆதரவு வழங்கி ஆளும் தரப்பு பக்கம் சென்றுள்ளனர்.

மற்றொரு உறுப்பினரானதஸ்லீம் முடிவு எதுவுமின்றி எதிர்க்கட்சி வரிசையில் தொடர்ந்தும் இருக்கின்றார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுக்களின் தலைவர் எஸ்.ஏ.எஹ்யா கூறினார்.

இதேவேளை, கூடங்குளம் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கும், புத்தளம் கற்பிட்டிக்கும் 160 - 200 கிலோ மீற்றர் தூரமே உள்ளது. அதனால் கற்பிட்டியின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர் வடமேல் மாகாண சபையில் தெரிவித்திருந்தார்.

இந்தவிடயம் குறித்து இந்தியத் தூதருடன் கலந்துரையாடி நல்லதொரு முடிவை அறிவிக்கும்படி அவர் வடமேல் மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)




2011ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டங்களை சிறப்பாக செயற்படுத்தி ஆவணப்படுத்திய சிறந்த நூலகங்களுக்கான விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டன. ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொதுநூலகத்துக்கான விருதை அனலைதீவு பொதுநூலகர் சந்திரசேகரம் தர்மிளா, ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## மின் இணைப்பாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் தொழிற்சாலை மின் இணைப்பாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 16 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவராகவும் க.பொ.த. சாதாரணதரம் கற்றவராகவும் இருக்க வேண்டும். (3)

## மொழி விருத்தி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.7

தேசிய கல்வி நிறுவகத்தின் மேலதிக மொழி விருத்திக் கற்கை நெறியாக சிங்களப் பாட நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வார இறுதி நாள்களிலும், விடுமுறை நாள்களிலும் நடைபெறும் இந்தக் கற்கை நெறி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். (3)

## ஓமானில் 'சீமான்' சித்திரவதை பறிபோனது செவிப்புலன்

### இலங்கைப் பணிப் பெண்ணுக்கு நேர்ந்த கதி

ஓமான்தலைநகர்மஸ்கட்டில் பணிபுரிந்து வரும் இலங்கை பெண்ணொருவர் வீட்டு உரிமையாளரின் சித்திரவதையால் ஒருபக்க செவிப்புலனை இழந்துள்ளார். பணிபுரிந்தமைக்கான சம்பளத்தை கேட்டதால் இலங்கைப் பணிப் பெண் இந்தவிதம் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது குறித்து தகவல் அறிந்த மஸ்கட்டிலுள்ள இலங்கை தொழில் ஆலோசகர் அலுவலக அதிகாரிகள் உடன் விரைந்து இலங்கைப் பணிப்பெண்ணை தனியார் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் பின்னர் அவர் அரச வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் இலங்கை ஆலோசகர் எம்.எம்.தேசப்பிரிய தெரிவித்தார்.

45 வயதுடைய முலிய நோனா என்ற இலங்கை பணிப்பெண்ணே இவ்வாறு பாதிக்கப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது. ஒக்டோபர்18ஆம் திகதி 2011 தொடக்கம் முலிய நோனா மஸ்கட்டில் பணிபுரிந்து வரும் நிலையில் அவர் தனது வீட்டு உரிமையாளரால் மிருகத்தை போன்று நடத்தப்பட்டதாகவும் பணிக்குச் சேர்ந்தது முதல் துன்புறுத்தி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கைப் பெண் நண்பி ஒருவரிடம் தனக்கு ஏற்பட்ட காயங்களைக் காட்டியதாகவும் அவரது கைகளில் வீக்கம் காணப்பட்டதாகவும் நண்பி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து வீட்டு உரிமையாளரை அழைத்து இலங்கை ஆலோசகர் கேட்டபோது பெண்ணின் அனைத்து மருத்துவ செலவுகளையும் ஏற்றுக் கொள்வதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார். உரிமையாளின் தாக்குதலுக்கு இலக்கான முலிய நோனா வலது காது செவிப்புலனை இழந்துள்ளார். (3)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

வரணி,நவ.7

வரணி கரம்பைக்குறிச்சி விவசாய சம்மேளனம் தமது பிரதேசத்தில் கால் நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

மீசாலை கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தரின் அறிவித்தலின்படியும், தமது சம்மேளன தீர்மானத்தின் படியும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிடிக்கப்படும் மாடு ஒன்றுக்கு 500 ரூபாவும், ஆடு ஒன்றுக்கு 300 ரூபாவும், புல் வரியாக 100 ரூபாவும், தண்டப்பணமாக 100 ரூபாவும் அறவிடப்படும் எனவும் 3 நாள்களுள் அவை உரிமை கோரப்படாத பட்சத்தில் ஏலத்தில் விடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-122)

**கடை வாடகைக்கு**

மானிப்பாய் சந்தைக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0770055300
(25026)(2.6.7)

**புங்குடுதீவில் பாலஸ்தாபனம்**

புங்குடுதீவு, மடத்துவெளியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய தேவஸ்தானத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பாலஸ்தாபன அபிஷேகங்கள் நடைபெற முருகன் திருவருள் பாலித்துள்ளார். 08.11.2012 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு பாலஸ்தாபன பூஜைகள் ஆரம்பமாகி 09.11.2012 காலை வரை தொடர்ந்து நடைபெறும். வெள்ளி அதிகாலை 6.00 மணிமுதல் 6.35 வரையான சுபவேளையில் அபிஷேகம் இடம்பெறும்.

கிரியைகள் நயினைக்குருமணி சிவஸ்ரீ.ப.முத்துக்குமாரசாமிக் குருக்கள், மு.பாலகுமார் குருக்கள், தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ அருணோதயக் குருக்கள் சகிதம் மேற்கொள்ளப் படும். அடியார்கள் அனைவரையும் பாலஸ்தாபன அபிஷேக நிகழ்வுகளில் பங்கேற்று முருகன் திருவருள் பெற்றேகுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

- முருகன் அடியார்கள்.
(25091) (2.7)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு, திருவோண நட்சத்திரம் கிரகபாவம் 68, உதயத்துச் செவ்வாய் உள்ள அரச தொழில் புரியும் BA பட்டதாரி மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் எதிர் பார்க்கப்படுகிறார்.
தொடர்பு: 0777 286050

**காணி விற்பனைக்கு**

புலோலி தெற்கு, குரும்பசிட்டியில் கிணற்றடி வைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள கல்வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு 0778449747, 0776158917
(25023)(2.6.7)

**ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர் பிலோந்திரன் ஜேம்ஸ்
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை)



தோற்றம் 18.10.1936
மறைவு 07.11.2005

அன்புள்ள அப்பாவே!
உங்கள் உதிரத்தை எமக்காக சொரிந்தீரே
நாங்கள் தலை நிமிர்ந்து நடக்க.
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

A.V. றோட்,
1 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

அன்பு உள்ளங்கள்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(23686) (45.6.7)



**மணிவிழா வாழ்த்து**

யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய உப அதிபர்

சோ . கெங்காதரன்
B.A. SLTS - I,

அவர்கள் இன்று (07.11.2012) அகவை அறுபதில் ஓய்வு பெறுவதையிட்டு அவரை சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.
மாணவர்களின் தேவைகள் பல அறிந்து கல்விச்சாலையில் நிறைவான சேவையை ஆற்றி இன்று ஓய்வு பெறும் இந்நாளில் அவரையும் அவர்தம் குடும்பத்தவரையும் சீரும் சிறப்புடன் வாழ நயந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.
(25024)(6.7.8)

**கண்ணீர் அஞ்சலி**

இல.16, கண்டி வீதி, வவுனியா சின்பொன்னில் பணிபுரியும் விக்னேஸ்வரனின் அன்புத் தாயும் திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், சாந்தசோலையை வசிப்பிடமாகவும் கொண்ட



சுப்பிரமணியம் கல்யாணி

அவர்கள் இறைபதம் எய்திய செய்தியை அறிந்து மிக்கத் துயருறுவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உரிமையாளர்
'வைஸ்ரோன் - சின்பொன்'
சக ஊழியர்கள்.

இல.16 கண்டி வீதி,
வவுனியா.
(24502) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு
சாவகச்சேரியில் வீடு வாடகைக்குத்
தேவை.

தொடர்பு :
077 6072957

(25039)(6-7-8)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பிரதேச செயலக முகாமைத்துவ
உதவியாளர்
திருமதி உமையாள் அவர்களின்
பாசமிகு தாயார்
**திருமதி கௌரி கருணாகரன்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து
மிகுந்த வேதனை அடைவதுடன்,
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

எஸ். மணிவர்ணன் குடும்பத்தினர்
கல்வியங்காடு வடக்கு,
நல்லூர்.

வாணி ரெக்ஸ்,
யாழ்ப்பாணம்.

(சி/4572)(5-6-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சுப்பிரமணியம்**
**பரமேஸ்வரி**

மலர்வு
26.05.1930

உதிர்வு
08.10.2012

அன்பைப் பொழிந்திர் - அனைவர்க்கும்
ஆதரவு காட்டினீர் - இன்று
இன்முகத்துடனேயே
ஈசனடி சென்றுவிட்டீர்
உம் அன்பு ஆன்மா
அடைக என்றும் சாந்தி

'சிவதர்சனம்'
கே.கே.எஸ். வீதி,
இணுவில் மேற்கு.

குடும்பத்தினர்.

(25021)(45.6.7)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14.10.1988

மறைவு
05.11.2010

**செல்வன் அருளீஸ்வரன் நர்சுதன்**

(முன்னாள் மாணவன் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர
பல்கலைக்கழக 3 ஆம் வருட
முகாமைத்துவ பீடம், சென். ஜோன்ஸ் கல்லூரி -
வர்த்தகப் பிரிவு - A/L, 2007)

ஆண்டுகள் இரண்டானாலும் உன் நினைவலைகள், நீ
அருகில் இருக்கும் உணர்வோடு அவனியில் வாழ்கின்றோம்.
ஆயிரம் தீபங்களாய் ஒளிகாட்டி சென்றுவிட்டாய் அன்பான
உன் வார்த்தைகளை அல்லும் பகலும் அசைபோட்டுக்
கொள்கின்றோம். ஆறாத உன் நினைவுகளை
நெஞ்சத்துக்குள் சுமந்த படி உன் நண்பர்கள்.

யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி
A/L 2007 மாணவர்கள்.

(25030)(45.6.7)

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை
## சந்தைகள் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2013

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் காணும் சந்தைகள் என்பவற்றை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :** 07.11.2012 - 21.11.2012

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :** 22.11.2012 - பி.ப. 02.00 மணிவரை

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :** 23.11.2012 - பி.ப. 02.00 மணிக்கு

நிபந்தனைகள்

01. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதுக்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம் கிளிநொச்சி என்ற முகவரிக்கு 22.11.2012 ஆம் திகதி பி.ப 02 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தமது தே.அ.அ/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம் ஏதாவது ஒன்றுடன் கோரிக்கைக் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.
04. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தல்களுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
05. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
06. கேள்விப்பத்திரங்களைக் கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி, பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் மேற்குறித்த காலத்துக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்
07. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 30.11.2012 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொள்ளல் வேண்டும்.

மேலதிக விவரங்களினை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

### குத்தகைக் கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | புலோப்பளை உப அலுவலகம் (பளைச் சந்தை) | | | |
| 01. | ஆட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 1.500.00 | 500.00 |
| 02. | மாட்டிறைச்சிக்கடை | 8,00,000.00 | 3.000.00 | 500.00 |
| 03. | கோழியிறைச்சிக்கடை | 1,20,000.00 | 1.500.00 | 500.00 |
| 04. | பொதுச்சந்தை (மரக்கறிச்சந்தை,மீன்சந்தை, து.ச.வ.பாதுகாப்பு நிலையம், சந்தை உட்புறம் அமைந்துள்ள கடைகள் உட்பட) | 6,00,000.00 | | |
| | முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | |
| | ஆட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1.500.00 | 500.00 |
| | மாட்டிறைச்சிக்கடை | 1,50,000.00 | 2.000.00 | 500.00 |
| | பொதுச்சந்தை (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, து.ச.வ.பாதுகாப்பு நிலையம் உட்பட) | 80,000.00 | 1.500.00 | 500.00 |

**ப.டெ.அன்ரன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(C/2816)(2-6-7)


நல்லூர் சரவணா ரெக்ஸ்
Nallur SARAVANA TEX
Saravana Tex
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்
தித்திக்கும் தீபாவளியை சரவணாவின் ஆடைகளால் அலங்கரியுங்கள்
சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்குமான ஆடைகளைப் பெற்றுக்கொள்ள
தீபாவளியை முன்னிட்டு 01.11.2012 முதல் 12.11.2012 வரை அதிக விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்
எமது எந்தக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
தீபாவளிக்கு இன்னும் இருப்பது 07 நாள்கள் மட்டுமே
குறிப்பு:- தீபாவளியை முன்னிட்டு விடுமுறை நாள்களில் எமது எல்லாக் கிளைகளும் திறந்திருக்கும்
(C/4573)(2-6-7
நல்லூரில்: இல. 526, 529 பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி, சிவன் கோயில் அருகில்), யாழ்ப்பாணம். T.P : 021 222 1723
யாழ்ப்பாணத்தில்: இல. 770, 772, கே.கே.எஸ் வீதி, (தட்டாதெரு சந்தி), யாழ்ப்பாணம். T.P : 021 222 0421
வடமராட்சியில்: இல. 171, பிரதான வீதி, நெல்லியடி. (சம்பத் வங்கி அருகில்) T.P : 021 226 2992
சங்கானையில்: 219, பிரதான வீதி, சங்கானை (HNB வங்கி முன்பாக) T.P : 021 2250909


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜெனிவாவில் திடீர் திருப்பம்

# இலங்கையைக் காப்பாற்றி இந்தியா குத்துக்கரணம்

## சர்வதேசம் கடும் விசனத்தில்

ஜெனிவா, நவம்பர் 6

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பூகோள காலகிரம மீளாய்வுக் கூட்டத்தொடரின் கடைசி நாளான நேற்று முன்தினம் இலங்கைக்குப் பாதிப்பு எதுவும்ஏற்படாதவகையில் செயற்பட்ட இந்தியா, அபாயப் பொறியிலிருந்து கொழும்பைக் காப்பாற்றி இறுதிநொடியில் அந்தர்பல்டி அடித்தது.

அதேசமயம் இலங்கை தொடர்பில் முன்னுக்குப் பின் முரணாக நடந்துகொள்ளும் நாடுகள் குறித்து அமெரிக்கா, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் கடும் விசனத்தை வெளியிட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மீளாய்வுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடந்தபோது அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டிருந்த இந்தியா இலங்கையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம், வடக்கு, கிழக்கின் இராணுவ முகாம்கள் அகற்றல் மற்றும் படைக்குறைப்பு, வடக்குத் தேர்தல் என்பன பற்றி காரசாரமாகக் கருத்து வெளியிட்டிருந்தது.

இலங்கை நிலைவரம் குறித்து ஆராய நியமிக்க ஐ.நாவால் நியமிக்கப்பட்டிருந்த குழுவில் ஸ்பெயின், பெனின் ஆகிய நாடுகளுடன் இந்தியாவும் அங்கம் வகித்திருந்ததால் இந்தியாவின் அன்றைய கருத்து சர்வதேச மட்டத்திலும், மனித உரிமைகள் ஆர்வலர்கள் மத்தியிலும் பெரிதும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

ஆனால்,நேற்று முன்தினம் இலங்கை தொடர்பில் நடைபெற்ற இறுதிக்கூட்டத்தில், இலங்கை தொடர்பில் ஏற்கனவே முன்வைத்த விமர்சனங்களை நீக்கியிருந்த இந்தியா அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல் திடீர் குத்துக்கரணம் அடித்தது.இது நேற்று முன்தினம் கூட்டத்தில் கலந்து கொண்ட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது . ஜெனிவாவில் கடந்த ஒரு வாரமாக முகாமிட்டுள்ள இலங்கை தூதுக்குழுவினர் இந்தியப் பிரதிநிதிகளைச் சந்தித்து நடத்திய இரகசியப் பேச்சுகளை அடுத்தே இந்தியா தனது நிலைப்பாட்டை கடைசி நேரத்தில் மாற்றிக் கொண்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் நேற்று முன்தினம் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமெரிக்கா, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் , மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் சில நாடுகள் முன்னுக்குப் பின் முரணாக நடந்துகொள்ளும் நாடுகள் குறித்து கடும் விசனம் வெளியிட்டன.

இதேவேளை, நேற்று முன்தினம் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க, இலங்கைக்கு ஆதரவளித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்ததுடன் சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் தெரிவித்த கருத்துக்களுக்கு சாதகமான பிரதிபலிப்பை இலங்கை அரசு இன்னும் இரு வாரத்துக்குள் அறிவிக்குமென்று குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் மார்ச் மாத அமர்வுக்குள் இலங்கை அரசு மனித உரிமைகள் விடயத்தில் பொறுப்புக் கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியது அவசியம் என்று ஜெனிவாவிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், நேற்று முன்தினம் நடைபெற்ற பூகோள கால மீளாய்வு அமர்வில் இந்தியா, பெனின், ஸ்பெயின் ஆகிய நாடுகள் இணைந்து தயாரித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள 210 பரிந்துரைகளில்100 பரிந்துரைகளை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

முதலாம் நாள் நடைபெற்ற விவாதத்தின்போது 99 நாடுகளும் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையில், இந்த மூன்று நாடுகளும் இணைந்து இந்த 210 பரிந்துரைகள் அடங்கிய தீர்மான அறிக்கைய நேற்று முன்தினம் சமர்ப்பித்திருந்தன.இந்த அறிக்கையை ஐ.நாவுக்கான ஸ்பெயின் தூதுவர் சமர்ப்பித்தார்.

அதேவேளை, பூகோள கால மீளாய்வுக் கூட்டம் குறிப்பிட்டதொரு நாட்டை இலக்கு வைத்து செயற்படுவதாகவும், இந்த நடைமுறைகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பிளவை ஏற்படுத்த முனைவதாகவும் கியூபா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

இந்தத் தீர்மானத்துக்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் செயலகத்துக்கு இலங்கை இரண்டு வாரங்களுக்குள் தனது உறுதிமொழிகளை அனுப்பும் என்று தெரிவித்துள்ளார். (ங-சி)

## கரூர் ஈழத்தமிழர் முகாமில் கத்திக் குத்தில் ஒருவர் சாவு

### வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்தது

கரூர் ஈழத் தமிழர் முகாமில் இடம்பெற்ற வாய்த் தகராறு கத்திக்குத்தில் முடிவடைந்தது.ஒருவர் உயிரிழந்தார்.

கரூர் அருகேயுள்ள ஈழத் தமிழர் முகாமில், இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதலில், முகாமைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கத்திக் குத்துக்கு இலக்காகினர். இதில் அண்ணன் உயிரிழந்தார். கரூர் அருகே ராயனூரில் இலங்கைத் தமிழர் முகாம் உள்ளது. இதில், நூற்றுக்கும் மேற்பட்டோர் குடும்பத்துடன் வசிக்கின்றனர்.

அங்கு வசிப்போர், கரூரில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களில் கூலித்தொழிலாளர்களாக உள்ளனர். முகாமில் வசிக்கும் சுதாகர், ஜெயபிரகாஷ் ஆகிய சகோதரர்கள் இருவரும், இருசக்கர வாகனத்தில் சென்று மோதிக்கொண்டனர். அப்போது இருவருக்கும் இடையே வாய்த் தகராறு ஏற்பட்டுள்ளது. ஜெயபிரகாஷ், தன் தம்பி தமிழ்ச்செல்வனிடம், பிரச்சினை குறித்து கூறியுள்ளார். அதேபோல் சுதாகரும், தன் அண்ணன் செல்வம் நிலாதரனிடம், மோதல் குறித்துக் கூறியுள்ளார்.

இருதரப்புக்கும் இடையே நேற்று முன்தினம் மாலை, 6 மணிக்குமேல், முகாம் வாயிலில்தர்க்கம் ஏற்பட்டது. பேச்சு முற்றி, கைகலப்பாக மாறி, ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். இதில், செல்வம் தன்னிடமிருந்த கத்தியால், ஜெயபிரகாஷைக் குத்தியுள்ளார். அதைத் தடுக்கச் சென்ற ஜெயபிரகாஷின் தம்பி தமிழ்ச்செல்வனுக்கும் கத்திக்குத்து விழுந்தது.

கத்திக்குத்துக்குள்ளான ஜெயபிரகாஷ், கரூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் இறந்தார். தமிழ்ச்செல்வன், மேல்சிகிச்சைக்காக திருச்சி அரச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். கத்திக்குத்து சம்பவம் குறித்து, பசுபதிபாளையம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, தலைமறைவான செல்வத்தை தேடி வருகின்றனர். (வ)

## செம்மணி கடல் நீரேரியில் தூண்டில் போட்டு மீன்பிடிப்பு



கடந்த வாரத்தில் பெய்த மழையை அடுத்து அரியாலை செம்மணி கடல்நீரேரியில் கடலுணவுகளின் வருகை அதிகரித்துள்ளதால் சிலர் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதிலும் ஆர்வம்காட்டிவருகின்றனர். அதனை விட மீனவர்கள் சிலர் வலைகளை வீசியும் மீன் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒட்டி, முரல், கெழுறு, திரளி போன்ற மீன்கள் குறித்த ஏரியில் அதிகளவில் காணப்படுகின்றன.

பிடிக்கப்படும் கடலுணவுகளை வீதியால் செல்லும் மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச்செல்கின்றனர்.

(வ-17)

### அமெ. ஜனாதிபதித் தேர்தல்

## முதல் வாக்குப்பதிவு முடிவு ஒபாவுக்கு 28; ரோம்னிக்கு 14

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான முதல் வாக்குப் பதிவு இரு கிராமங்களில் ஆரம்பமாகியது. வாக்குப்பதிவு முடிவடைந்ததுமே அவை எண்ணப்பட்டன.

இதில் முதலாவது கிராமத்தில் ஒபாமாவுக்கு 5 வாக்குகளும், ராம்னிக்கு 5 வாக்குகளும் கிடைத்தன.

இன்னொரு கிராமத்தில் ஒபாமாவுக்கு 23 வாக்குகளும், ரோம்னிக்கு 9 வாக்குகளும், லிபர்ட்டி கட்சி வேட்பாளருக்கு ஒரு வாக்கும் கிடைத்தன.

முதலாவது வாக்குப் பதிவு நடைபெற்ற கிராமம் டிக்ஸ்பில்லே நாட்ச் வடக்கு நியூ ஹாம்ப்ஷையரில் உள்ளது. கடந்த 50 ஆண்டுகளாக, இங்குதான் முதல் வாக்குப் பதிவு ஆரம்பமாகிறது. வாக்குப் பதிவு முடிந்த சில நிமிடங்களில் வாக்குகள் எண்ணப்பட்டுவிடும். ஜனாதிபதித் தேர்தல் முடிவின் முன்னோட்டமாகவே இது அமையும்.

முதலாவது வாக்குப் பதிவு நடந்த இன்னொரு கிராமம் ஹார்ட்ஸ் லொகோஷன். இங்கு மொத்தம் 33 வாக்குகள்தான். 6 நிமிடங்களில் வாக்குப்பதிவு முடிவடைந்து விட்டது. எண்ணிப் பார்த்தபோது, 23 வாக்குகளை ஒபாமா பெற்றிருந்தார். ரோம்னிக்கு 9 வாக்குகள் தான் அளிக்கப்பட்டன. சுதந் திரக் கட்சியின் கேரி ஜான்சன் ஒரு வாக்கைப் பெற்றிருந் தார்.

1948 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி இரு கிராமங்களில்தான் முதலாவது வாக்குப் பதிவு இடம்பெற்று வருகிறது.

(வ)

## சங்காபிஷேகமும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வித்தக விநாயகப் பெருமானுக்கு சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலையில் நடைபெறவிருக்கின்றது.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் கல்லூரியின் கலையரங்கில் 'வித்தகர்' மகா கும்பாபிஷேக மலர் வெளியீடு நடைபெற இருக்கின்றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் கலாநிதி செ.திருநாவுக்கரசு மலர் ஆய்வுரையையும் ஏற்புரையை மலர் ஆசிரியர் முருகேசு கௌரிகாந்தனும் நிகழ்த்துவர். முதற் பிரதியை மருத்துவர் வை.தியாகராஜா பெற்றுக்கொள்வார்.

(ப)

### மரக்கறி விதைகள் திவிநெகும திட்டத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.7

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 22 ஆயிரம் மரக்கறி விதைப் பொதிகள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதில் பதினோராயிரம் விதைப் பொதிகள் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அதைவிட ஆயிரத்து 500 இந்தியன் முருங்கைக் கன்றுகளும் இந்தப் பிரதேசத்தில் 'திவிநெகும' திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த மரக்கறி விதை பொதிகளில் சில இன வகைகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-17)

## மதுரை முகாம்களில் கவனிப்பாரற்று வாழ்ந்து வரும் இலங்கை அகதிகள்

### 'ஹிந்து' பத்திரிகை தகவல்

தமிழ்நாட்டின் மதுரை அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் கவனிப்பாரற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்று 'ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, குறித்த பத்திரிகை வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தைத் தொடர்ந்து அதிகளவான இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துக்குச் சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் பலர் தமிழகத்தின் பல்வேறு அகதி முகாம்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மாநில அரசு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மாறாக அகதி முகாம்களில் வாழ்வோருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாகவும், உதாசீனமான போக்கைப் பின்பற்றி வருகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1983 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சில முகாம்களில் மக்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளதுடன் மழை காலங்களில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்- என்றுமுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கோட்ட உதைபந்து சென்.பற்றிக்ஸ் சம்பியன்

## போராடி வீழ்ந்தது சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை


சென்.பற்றிக்ஸ் கல்லூரி


சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்.கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் சம்பியனானது சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

இந்த இறுதியாட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை சென்.ஜேன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி களமிறங்கியது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் சமராடின. முன்னேறித்தாக்கும் முயற்சிகளில் இரு அணி வீரர்களும் தொடர்ந்து ஈடுபட்டனர். ஆனால் இரு அணிகளதும் பின்கள வீரர்களின் வியூகங்களும், அபாரமான தடுத்தாடலும் அந்த முயற்சிகளை தவிடுபொடியாக்கின. இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் கோல் அடிக்க இரு அணிகளாலும் முடியவில்லை. இரண்டாம் பாதியாட்டத்தில் கோலடித்து, சம்பியன் கிண்ணத்தை வெல்லவேண்டுமென்ற வெறியோடு இரு அணிகளும் களத்தில் மோதியபோது பயனேதுமில்லை.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே வெற்றி தோல்வி சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

சமநிலை தவிர்ப்புக்காக வழங்கப்பட்ட முதல் ஐந்து உதைகளில் இரண்டு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்றனர். இதனால் மீண்டும் சமநிலை ஏற்பட்டது.

எனவே இரு அணிகளுக்கும் மேலதிகமாக இன்னொரு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. அதனையும் இரு அணியினரும் சரியான முறையில் கோலாக்கியதால் ஆட்டத்தில் சமநிலையே தொடர்ந்தது. இவ்வாறு தொடர்ந்து சமநிலை தவிர்ப்பு வாய்ப்புகளிலும் இரு அணிகளும் விட்டுக் கொடுக்காமல் போராடின.

இறுதியாக வழங்கப்பட்ட 9 ஆவது சந்தர்ப்பத்தை மிகச்சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கோல் ஒன்றை அடித்தது. ஆனால், குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி இந்த சமநிலை தவிர்ப்பு வாய்ப்பை கோட்டை விட்டது.

இறுதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 7:6 என்ற கோல்கணக்கில் குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியை வெற்றிகொண்டு 16 வயதுப் பிரிவில் யாழ்.கோட்டமட்ட சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தி கொண்டு 3ஆவது இடத்தைத் தனதாக்கிக்கொண்டது.

(ங-23)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம்,நவ.7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

பி.ப. 3 மணி

இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.

* * *

நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை காலை 8 மணியளவில் கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ங-23)

## தேசிய உதைபந்து அணிக்கான வீரர் தெரிவு வடமாகாணப் போட்டிகள் சனியும், ஞாயிறும்

யாழ்ப்பாணம்,நவ.7

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களை தெரிவு செய்வதற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து நடத்தி வருகின்றன.

அதன் அடிப்படையில் வடமாகாணத்துக்கு உட்பட்ட மாவட்ட தெரிவு அணிகளுக்கு இடையிலானபோட்டிகள் எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது போட்டியில் யாழ்.மாவட்டத் தெரிவு அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்டத் தெரிவு அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணியுடன் மோதும். இதில் வென்ற அணி ஞாயிறு மாலை நடைபெறும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகும்.

சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் வவுனியா மாவட்டத் தெரிவு அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட தெரிவு அணி மோதவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணி ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறும் இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

ஆரம்ப நாள், இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார்.

(ங-23)

## சென்.அன்ரனிஸ் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டமொன்றில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

நேற்றுச் செவ்வாய்க் கிழமை ஆதிசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தத்தமது அணிக்காக கோல் பெறும் நோக்கோடு கடுமையாக மோதிக்கொண்டனர்.

முதல்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணி 3:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் சென். அன்ரனிஸ் அணியின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இரண்டாம் பாதியிலும் சென்.அன்ரனிஸ் அணி அடுத்தடுத்து 4 கோல்களைப் பெற்றது. இதனால் ஆட்ட நேர முடிவில் சென்.அன்ரனிஸ் அணி 7:0 என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்றது. (ங-23)

## வலைப்பந்துப் போட்டி



யாழ்ப்பாணம்,நவ.7

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவை மேரி. எவன்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக சங்கானை கல்வி கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளையும், நாளை மறுதினமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (23)

## யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் சிநேகபூர்வப் போட்டி இன்று



யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே தெரிவு செய்யப்பட்ட 8 கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்நச் சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை மாலை 3 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம், மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம், உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம், அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகம் ஆகிய 8 கழகங்களுமே பங்குகொள்ளவுள்ளன.

இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஊரேழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பி.ப 4 மணிக்குஇடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணி களமிறங்கவுள்ளன. (ங-23)

## வடக்கு-கிழக்கு மாகாண மேசைப்பந்து

யாழ்ப்பாணம்,நவ.7

இலங்கை மேசைப் பந்தாட்ட சம்மேளனம், வவுனியாப் பிரதேச செயலகம் என்பன இணைந்து நடத்தும் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான 9 வயதுப் பிரிவு தொடக்கம் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இந்த மாதம் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் வவுனிய நகர சபை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

10ஆம் திகதி மாவட்டங்களுக்கு இடையிலான போட்டியும், 11 ஆம் திகதி மாகாணங்களுக்கு இடையிலானபோட்டிகளும் இடம்பெறவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23)


ஜேர்மனி அரசு, சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் என்பவற்றின் நிதிப் பங்களிப்புடன் அரியாலைப் பகுதியில் யாழ்.உதைபந்தாட்ட லீக்குக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தின் கட்டுமானப் பணிகளை இலங்கைக்கான ஜேர்மன் துணைத்தூதர் மரிஜா என்னிங் மற்றும் தூதரக அதிகாரிகள் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டனர். இதன் போது ஒரு தொகுதி உதைபந்துகளை யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளையிடம் ஜேர்மனியக் குழுவினர் கையளித்தனர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய விதிகள் பிடிக்கவில்லை



சர்வதேசக் கிரிக்கெட் சபையால் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களானது துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக சாதகத்தன்மையையும், பந்துவீச்சாளர்களுக்கு எதிரானவையுமாகக் காணப்படுவதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் புதிய மாற்றங்களின்படி ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பவர் பிளே அல்லாத பந்துப் பரிமாற்றங்களில் 30 யார் வட்டத்திற்கு வெளியே 4 வீரர்களை மாத்திரம் களத்தடுப்பில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இது 5 களத்தடுப்பாளர்களாகக் காணப்பட்டது.

இந்த மாற்றம் துடுப்பாட்ட வீரர்களுக்குப் பெரிதும் சாதகமாகக் காணப்படுவதாக மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். தான் ஒரு துடுப்பாட்ட வீரர் என்ற போதிலும், இந்த மாற்றம் கிரிக்கெட்டிற்கு எதிரானது எனவும், சுழற்பந்து வீச்சாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையால் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2 ஆவது ஒருநாள் சர்வதேச ஆட்டத்திலேயே முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது என்பதோடு, அந்த ஆட்டத்தில் இலங்கை அணி டக்வோர்த் லூயிஸ் முறையில் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

# விளையாடாதவர்களே விமர்சிக்கின்றனர்



இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பிடித்துள்ள ஹர்பஜன் சிங் தன் மீதான விமர்சனங்களை எதிர்த்துள்ளதோடு, கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியே இருக்காதவர்கள் விமர்சனங்களை செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலிரண்டு டெஸ்ட் போட்டிக்கான அணிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அணியில் ஹர்பஜன் சிங் சேர்க்கப்பட்டுள்ளார். ரஞ்சிக் கிண்ணத் தொடரின் பஞ்சாப் அணி சார்பான முதலாவது இன்னிங்சில் அவர் 21 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி ஒரு இலக்கையும் கைப்பற்றியிருக்காத நிலையில் அவரது தெரிவு இடம்பெற்றிருந்தது.

இதன் காரணமாக ஹர்பஜன் சிங்கின் தெரிவு தொடர்பாக விமர்சனங்கள் எழுப்பப்பட்டதுடன், அவரது தெரிவு சரியாதல்ல எனவும் ஒருசாராரால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் கருத்துத் தெரிவித்துள்ள ஹர்பஜன் சிங், பந்துவீச்சாளரொருவரின் பந்துவீச்சுத் திறமை அவர் கைப்பற்றும் இலக்குகளால் மாத்திரம் கணிக்கப்படக்கூடாது எனவும், அவர் அந்த ஆட்டத்தில் பந்துவீசிய விதத்தைக் கொண்டே கணிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சுழற்பந்து வீச்சாளரொருவரின் பணி ஆடுகளத்திற்கேற்றவாறு மாறுபடுகிறது எனத் தெரிவித்த ஹர்பஜன் சிங், கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியேயிருக்காத சிலர் தன் மீதான விமர்சனங்களை முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# ஜொகோவிச் முதலிடம்



ரென்னிஸ் அரங்கில் சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கான புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சபை வெளியிட்டுள்ளது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜொகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இங்கிலாந்தின் அன்டி முர்ரே, ஸ்பெயினின் ரபெல் நடால், டேவிட் பெரடர் ஆகியோர் முதல் ஐந்து இடங்களில் நீடிக்கின்றனர்.

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் 5 ஆவது இடத்தில் இருந்து 4 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சமீபத்தில் பிரான்ஸ் தலைநகர் பரிசில் நடந்த பரிபாஸ் மாஸ்டர்ஸ் பகிரங்க ரென்னிஸ் இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் மகேஷ் பூபதி 5 இடங்கள் முன்னேறி 11 ஆவது இடம் பிடித்தார். இவரது ஜோடியான ரோகன் போபண்ணா 12 ஆவது இடத்தை தக்க வைத்துக் கொண்டார்.

மகளிருக்கான ஒற்றையர் தரவரிசையில் பெலாரசின் விக்டோரியா அசரென்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவா, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் ஆகியோர் முதல் மூன்று இடங்களில் நீடிக்கின்றனர்.

இந்தியாவின் சானியா மிர்சா ஒற்றையரில் 275 ஆவது இடத்தில் இருந்து 280 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். ஆனால் இவர் இரட்டையர் பிரிவில் 12 ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார். (5)

# உண்ணவும் முடியவில்லை...



இந்திய டெஸ்ட் அணியில் யுவராஜ் சிங் அணியில் சேர்க்கப்படுவதற்காக சுரேஷ் ரெய்னா அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

அணியில் 6 ஆவது வரிசையில் விளையாடி வந்த ரெய்னாவின் ஆட்டம் நியூசிலாந்துக்கெதிராக சுமாராக இருந்தது.

மேலும் பயிற்சி ஆட்டத்திலும் அவர் சாதிக்கவில்லை. இதனால் யுவராஜ் சிங்கை மீண்டும் தெரிவு செய்து ரெய்னாவை புதிய தெரிவு குழு நீக்கியது.

டெஸ்ட் அணியில் இருந்து நீக்கப்பட்டதால் ரெய்னா சோகம் அடைந்தார்.

நியுசிலாந்துக்கெதிரான டெஸ்டில் விளையாடியதால் தனக்கு இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரிலும் வாய்ப்பு கிடைக்கும் என்று அவர் நம்பிக்கையுடன் இருந்தார்.

ஆனால் அணியில் இருந்து நீக்கப்பட்டதால் மிகுந்த ஏமாற்றம் அடைந்து மதிய உணவை சாப்பிடவில்லை.

டெல்லி அணிக்கு எதிரான ரஞ்சி தொடரில் உத்தர பிரதேச அணி அணித்தலைவராக ரெய்னா விளையாடி வந்தார். இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட தகவல் பிற்பகலில் அவருக்கு தெரியவந்தது.

இதனால் சக வீரர்களிடம் தான் சாப்பிடும் மனநிலையில் இல்லை என்று கூறி சாப்பிட மறுத்துவிட்டார். மாலையில் நடந்த பரிசளிப்பு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கவில்லை. (5)



# சிறந்த வீரர் பிலாண்டர்

தென்னாபிரிக்காவில் விளையாட்டு துறையில் சிறப்பாக திகழ்பவர்களுக்கு ஆண்டு தோறும் சிறந்த நட்சத்திரம், சிறந்த வீரர், மற்றும் வீராங்கனைகளுக்கான விருது வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான பட்டியலில் சேட் லீ கிளாஸ் (நீச்சல்), அம்லா (கிரிக்கெட்), நடாலி டு டாய்ட் (நீச்சல்), சியாபாங்கோ (உதைபந்து), பிலாண்டர்(கிரிக்கெட்), ஒஸ்கார் பிஸ்டோரியஸ் (தடகளம்), கேஸ்டர் செமன்யா(தடகளம்) ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டனர்.

லண்டன் ஒலிம்பிக் ஆடவர் 200 மீற்றர் 'பட்டர்பிளை' பிரிவு நீச்சல் போட்டியில், அமெரிக்க ஜாம்பவான் பெல்ப்ஸை வீழ்த்தி, தங்கப் பதக்கம் வென்ற சேட் லீ கிளாஸ், சிறந்த விளையாட்டு நட்சத்திரம் விருதை தட்டிச் சென்றார்.

சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை, டெஸ்ட் போட்டியில் அசத்திய பிலாண்டர் கைப்பற்றினார். இவர், டெஸ்ட் போட்டியில் அறிமுகமான ஓர் ஆண்டில் 50 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.

சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான விருதை, ஒலிம்பிக் 800 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற கேஸ்டர் செமன்யா பெற்றார்.

சிறந்த மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரருக்கான வீரர் விருதை, ஒஸ்கார் பிஸ்டோரியஸ் வென்றார். இதேபோல் சிறந்த மாற்றுத்திறனாளி விளையாட்டு வீராங்கனைக்கான விருதை நடாலி டு டாய்ட் கைப்பற்றினார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அதிரடியாட்டம் வீழ்ந்தது நியூசிலாந்து

டில்ஷானின் அதிரடி வேட்டையில் இலங்கை அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணியை வீழ்த்தி தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

மூன்றுவது ஒரு நாள் சர்வதேச ஆட்டம் பல்லேகல விளையாட்டரங்கில் நேற்று பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபடுவதாக அறிவித்தது.

அதனடிப்படையில் நிக்கொல், வொட்லிங் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்ய ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பமாகியது. 14 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் மழை மீண்டும் குறுக்கீடு செய்தது. இதனால் 2 மணி நேரத்துக்கும் மேலாக ஆட்டம் தடைப்பட்டிருந்தது.

பின்னர் 33 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டு ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்திலேயே நியூஸிலாந்து அணியின் இரண்டு இலக்குகள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டது.

197 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாட தரங்க, டில்ஷான் ஜோடி களமிறங்கியது.

31.1 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டில்ஷான் ஆட்டமிழக்காமல் 95 பந்துகளில் 102 ஓட்டங்களையும், மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில் 54 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக டில்ஷான் தெரிவானார். (5)


## பாடநெறிகள்

வீட்டுமின் இணைப்பு
Wiring
உடனடியாக ஆரம்பம்

## IELTS 6.5

உத்தரவாதம்
HS EEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்
021 222 4728, 077 7444225
(24566)(.8.6)

## எடிசன் கல்லூரி

கிளிநொச்சி
(வலயக்கல்வி முன்பாக
Spoken with Grammar
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
By : Britto
யாழ். பிரபல ஆசிரியர்
★ [illegible]
எடிசன் கல்லூரி வலயக்கல்வி முன்பாக, கிளிநொச்சி
(24236)(6-7-8)

## விசேட வகுப்புக்கள்

[illegible]
தொடர்பு:075 416 4564
[illegible]

## போட்டிப்பரீட்சை விசேட வகுப்புக்கள்

கிராமசேவகர், முகாமைத்துவ உதவியாளர், பதிவாளர் பரீட்சைகளுக்குரியது.

**சித்தன்கேணியில்**
Subra கல்வி நிலையத்தில் வியாழன் 5.00 மணி

**சாவகச்சேரியில்**
ஞானோதயா அக்கடமியில் வெள்ளி 3.00 மணி

**மன்னாரில்**
N.L.H. கல்வி நிலையத்தில் ஞாயிறு (11/11) மு.ப. 10.30 தொடக்கம் 3.30 மணி வரை

**கிளிநொச்சியில்**
எடிசன் கல்லூரியில் ஞாயிறு 1.30 மணி

**நெல்லியடியில்**
வழிகாட்டி கல்வி நிலையம் திங்கள் 3.00 மணி

**யாழ். நகரில்**
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் சனி 12.30 - 4.30 வரை

தொடர்புகளுக்கு: 075 4164564

## அன்பொளி கல்வியகம்

யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012
சித்தியடைந்த மாணவர்களுக்கான

## பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 10.11.2012 சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் ( ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
- இயக்குநர்.
(சி/4580)(6.7.8)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)**
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English (2 Months)**
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 05-11-2012 Batch II - 07-11-2012 Batch III - 10-11-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## யாழ்ப்பாண முந்திரிகைப்பழம் (Grapes) உற்பத்தியாளர்களே!

உங்களுடைய முந்திரிகைப் பழத்துக்கு எங்களிடமிருந்து கூடுதல் விலை வழங்கப்படும்.(பணம் அன்றே வழங்கப்படும்)
தொடர்பு- அஜித் என்ரபிரைசஸ்,
இல. 45, 5ஆம் குறுக்குத்தெரு கொழும்பு 11
0112423464, 0115739486,0779612110
(24721)(6.8)

## German Language Academy

ஜேர்மன், டொச் மொழிகள் இலகுவழியில் ஜேர்மனியில் கற்று வந்த ஆசிரியரால் மிகச்சிறந்த முறையில் பல வருடங்களாக யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பல மாணவர்களை சித்தியடையச் செய்த ஆசிரியர் ஆவார். கடந்த 27.09.2012 நடைபெற்ற பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.
★ ஜேர்மன் A1 பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் இந்த நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.
French மொழிகளும் இங்கு கற்பிக்கப்படுகிறது.

German Language Academy
No.7, Palaly Road, Jaffna.
0779707322

Sun British College
Station Road,
Vavuniya.
(24566)(3.6)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772)(15-14)

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062

## நெல்லியடி SINGER PLUS ல்

இனிய தீபத்திருநாளை முன்னிட்டு

மற்றும் பரிசுப்பொருட்கள்.



உடன் விரையுங்கள்............

சிங்கர் ப்ளஸ்,
இல.34 பருத்தித்துறை வீதி,நெல்லியடி.
0212264937, 0756354832


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

திட்டமிடுவோர்
இன்னொருவராக
இருந்தால் காரியம்
நடக்காது.
-வினோபாஜி-


# புதன் பொய்கை A

உதயன் 07 நவம்பர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# முள்ளிவாய்க்காலும் ருவாண்டாவும்

■ துன்னாலைச் செல்வம்

1960 களில், ஆபிரிக்காவில் அரசியல் நிலையின்மை நிலவியது. அடிக்கடி இராணுவப் புரட்சிகள் வெடித்தன. இந்தச் சூழலில் தான், ருவாண்டாவில் ஹுட்டு இன மக்கள் வெற்றி பெற்றிருந்தார்கள். இந்தக் காரணங்கள்தான், புருண்டியில் இருந்த ஹுட்டுக்களுக்கு, ஆட்சி அதிகாரத்தை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற தைரியத்தைக் கொடுத்தன.





ருவாண்டாவில் நடைபெற்ற இனப்படுகொலையின் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் காட்டிய அக்கறையை ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் காட்டாது ஏன் மெத்தனமாகச் செயற்படுகிறது என்று இன்னர் சிட்டி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது. இலங்கையில் போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்த பின்னரும், அங்கு நடைபெற்ற இனப்படுகொலை சம்பந்தமாக எவரும் தண்டிக்கப்படவில்லை. இந்தப் பாராமுகம் ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ளது.

ருவாண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் போல் முள்ளிவாய்க்காலிலும் இடம்பெற்றுள்ளன. ஒரே நாட்டுக்குள் இரு இனங்களுக்கு இடையிலான போராட்டம் தான் இரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும்பான்மையினம் சிறுபான்மையினத்தை போரினால் அடக்கி ஒடுக்கியுள்ளது. போர்க் குற்றங்கள் சம்பந்தமானவர்கள் ருவாண்டாவில் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் முள்ளிவாய்க்காலில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை. லட்சக்கணக்கில் உயிர்களைக் காவு கொண்டது ருவாண்டா, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை. சேர்ந்து வாழ முடியாவிட்டாலும், சகித்துக்கொண்டு போகலாம். அந்த மனப்பான்மை இல்லாததாலேயே, அடுத்த இனத்தையே தீர்த்துக் கட்ட முயன்றவர்கள், இரு நாட்டிலும் இருந்திருக்கின்றனர்.

ருவாண்டாவில் டூட்சிகளும், ஹுட்டுக்களும் மத்திய ஆபிரிக்கப் பகுதியில் வாழும் இரு இனக் குழுக்கள். பல நூறு ஆண்டுகளாக பெரும் ஏரிகள் பகுதியில்தான் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆபிரிக்காவின் புற இனக்குழுக்களைப் போலவே அவர்களுக்குள் சிறு சிறு மோதல்கள் அவ்வப்போது நிகழ்ந்து வந்திருக்கின்றன.

இரு குழுக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை ஊதிப் பெரிதாக்கிய பெருமை காலணியாதிக்கத்தையே சாரும். 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு ஆபிரிக்காவில் காலணிகளை உருவாக்கின. இந்த காலனியாதிக்கத்துக்கு பல காரணங்கள் உள்ளன.

அந்தக்கண்டத்தின் இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதிலிருந்து, பக்கத்து நாட்டுக்காரனைவிடப் பெரிய நிலப்பரப்பை கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பு வரை. இதையே வரலாற்றாளர்கள் ஆபிரிக்காவுக்கான அடிதடி என்று அழைக்கின்றனர்.

ஆபிரிக்காவின் யதார்த்த நிலையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ஐரோப்பாவில் உட்கார்ந்துகொண்டு ஆபிரிக்க வரைபடத்தில் கோடு கிழித்தார்கள், ஐரோப்பிய அரசியல்வாதிகள். அதன் காரணமாக, எந்தச் சம்பந்தமும் இல்லாமல் ஆபிரிக்காவில் பல நாடுகள் உருவாகின. பல நூற்றாண்டுகளாக ஒன்றாக வாழ்ந்த இனக் குழுக்கள், ஐரோப்பியர் வரைந்த எல்லைகளால் பிளவுபட்டன. அதே போல, பல நூற்றாண்டுகளாக சண்டையிட்டுக் கொண்டிருந்த இனக்குழுக்கள், ஒரே நாட்டில் அருகருகே வாழும்படியான சூழ்நிலையும் உருவானது. இந்தக் குழப்பத்தில் உருவானவைதான் ருவாண்டா, புருண்டி நாடுகள்.

டூட்சிக்கள்தான் மரபணு அடிப்படையில் உயர்ந்த இனம் என்ற எண்ணம் கொண்டிருந்த ஜேர்மனியர்களின் கொள்கைகள், அதுவரை சிறிய அளவில் புகைந்துகொண்டிருந்த இன வெறுப்பை ஊதிப் பெரிதாக்கின. எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், இரண்டாம்தரக் குடிமக்கள் போலவே ஹுட் டுக்கள் வாழ நேரிட்டது. இதனால், அவர்களுக்கு டூட்சிக்களின் மேலிருந்த கோபம், வெறுப்பாக மாறியது.

முதலாம் உலகப் போரில் ஜேர்மனி தோற்றதால், ருவாண்டாவும் புரூண்டியும் பெல்ஜியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. பெல்ஜியம், ஜேர்மனியின் இனவாதக் கொள்கைகளை மேலும் விரிவுபடுத்தியது. டூட்சிக்களுக்குச் சாதகமாக நடந்துகொண்டது. இந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, இன அடிப்படையில் அடையாள அட்டைகள் வழங்கப்படும் அளவுக்கு காலணிய ஆட்சியாளர்கள் இனவாதக் கொள்கைகளைப் பின்பற்றினார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால், ஆபிரிக்கா மீதான ஐரோப்பாவின் பிடி தளர்ந்தது. ஆபிரிக்கா முழுவதும் தேசிய வாதம் தலைத்தோங்கி, எல்லா நாடுகளிலும் விடுதலை இயக்கங்கள் தோன்றின. ருவாண்டாவிலும் புரூண்டியிலும், ஹுட்டு இன மக்கள், விடுதலை இயக்கங்களில் பெரும் பங்காற்றினார்கள். நாடு விடுதலை அடைந்துவிட்டால், இதுவரை கிடைக்காத அரசியல் அதிகாரம் தங்கள் கைக்கு வரும் என்பது அவர்களது கணக்கு.

1960 களில், ஆபிரிக்காவில் அரசியல் நிலையின்மை நிலவியது. அடிக்கடி இராணுவப் புரட்சிகள் வெடித்தன. இந்தச் சூழலில் தான், ருவாண்டாவில் ஹுட்டு இன மக்கள் வெற்றி பெற்றிருந்தார்கள். இந்தக் காரணங்கள்தான், புரூண்டியில் இருந்த ஹுட்டுக்களுக்கு, ஆட்சி அதிகாரத்தை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றிக்கொள்ளலாம் என்ற தைரியத்தைக் கொடுத்தன.

அதுவரை உலக சரித்திரத்தில், இரு இனங்களிடையே சிறு சிறு மோதல்கள் நடைபெற்று வந்தாலும், ஓர் இனம் கவனமாகத் திட்டமிட்டு அடுத்த இனத்தை பூண்டோடு அழிக்க முயன்ற முதல் நிகழ்வு அதுதான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகசாதனை படைத்த பூந்தோட்டம்






இத்தாலியின் ரோஸான்னோ நகரில் அமைந்துள்ள சொப்பங் சென்டர் ஒன்றில் வினோதமான முறையில் அமைக்கப் பட்டுள்ள பூந்தோட்டமானது உலக சாதனையைப் படைத்துள்ளது.

வழமைக்கு மாறாக அங்குள்ள சுவர்களுக்கு செங்குத்தாக இந்தப் பூந்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது தரைக்கு சமாந்தரமாக காணப்படும் இந்தப் பூந்தோட்டமானது 1,263 சதுர மீற்றரில் அமைக்கப்பட்டுள்ளதுடன், சுமார் 44,000 வகையான பூ மரங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.


## ஒலி அலைகளைப் பயன்படுத்தி ஓவியம்

ஜேர்மனைச் சேர்ந்த 47 வயதான ரெயினர் டாட்ஹான் எனும் கலைஞர் ஒலி அலைகளைப் பயன்படுத்தி வித்தியாசமான முறையில் ஓவியங்களை உருவாக்கியுள்ளார்.

பலவகையான பரிசோதனைகளுக்கு பின்னர் சொனிக் ஆரட் எனும் முறையில் இந்த ஓவியங்களை உருவாக்கிய அவர், இதற்காக கணினி மற்றும் விசேட மென்பொருள்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




## கண்ணாடியிலும் கலைநயம்



அமெரிக்காவில் உள்ள ஓரிக்கன் மாநிலத்தில் போர்ட்லாந்தைச் சேர்ந்த ஓவியக் கலைஞராகத் திகழும் ஆன்டி பைகோ என்பவரால் கண்ணாடிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பல் வேறு கலைநயம் கொண்ட உருவங்களைக் காணலாம்.

## கையில் எத்தனை 'கிளாஸ்'?

பிரிட்டன் வாசியான பிலிப் ஓஸ்ரன் என்பவர் தனது ஒரு கையில் 51 கிளாஸ்களை தாங்கி வைத்திருந்து உலகசாதனை படைத்துள்ளார். இதற்கு முன்னர் ஒரு கையில் 39 கிளாஸ்களைத் தாங்கி வைத்திருந்தமையே உலக சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பொன் மொழிகள்

★ மரணம் என்னை என்ன செய்து விட முடியும் என்று சொல். பாம்பின் விஷம் கூட உன்னைக்கொல்லாது.

★ உழைப்பைப் பயன்படுத்தினால் அதிகாரம், பதவி தானாகவே தேடிவரும்.

★ எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றி வராது.

★ எந்த வேலையை செய்கின்றோம் என்பதை விட எப்படிச் செய்கிறோம் என்பதை வைத்தே எதையும் மதிப்பிட முடியும்.

★ ஒருவன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுகின்ற போதெல்லாம் எழுந்தான் என்பது தான் பெருமை.

*சா.ஜிந்துஜா*
*கோண்டாவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிமஞ்சாரோ பின்னணி பற்றிய சில பதிவுகள்

■ வலையவன்



எந்திரன் படத்தில் கிளிமஞ்சாரோ பாடலின் மூலமாகப் பிரபலமாகியிருக்கும் பல விஷயங்களில்நான் சொல்லப்போகிற விஷயமும் இருக்கிறது. இது குறித்து எனது கவிதைச்சாலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பதிவு போட்டிருந்தேன். அப்போது கவனிக்கப்படாமல் இருந்த அந்தப் பதிவுக்கு இப்போது பெரும் வரவேற்பு. எனவே இங்கே மீள் பதிவு செய்கிறேன்

பெரு நாட்டில் இயற்கையின் தாராள அழகின் நடுவே அமைந்திருக்கும் இந்த கிளிமஞ்சாரோ தற்போதைய உலக அதிசயங்களில் ஒன்று எனும் பெருமையைப் பெற்றுள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 7875 அடி உயரத்தில் அமைந்திருக்கும் இந்த நகர் இன்கா நாகரிக மக்களின் கட்டடக் கலைக்குச் சான்றாகவும், அவர்களுடைய இரசனையின் உச்சத்துக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்குகிறது.

உருபாமா பள்ளத்தாக்கின் அருகே அடர் காட்டில், அருவிகளின் ஆரவாரத்தில் கற்பனை செய்ய முடியாத அழகின் உச்சத்தில் இந்த நகர் அமைந்துள்ளது. கஸ்கோ நகரிலிருந்து சுமார் 70 கிலோமீற்றர் தொலைவில் இது அமைந்துள்ளது.

பளபளப்பாக்கப்பட்ட உலர் கற்களைக் கொண்டு இத்தனை ஆண்டு கால இயற்கைச் சீற்றங்களைத் தாங்கி இது இன்னும் கம்பீரமாய் இருப்பதே தற்கால மனிதர்களின் ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இத்தனை ஆயிரக்கணக்கான கற்களை எப்படி இந்த உச்சிக்கு கொண்டு வந்தார்கள் என்பது வியப்பின் எல்லைக்கு நம்மை கொண்டு செல்கிறது.

இங்கே இண்டிகுவாட்டாணா எனும் ஒரு கல் இருந்தது. இதில் நிறைய ஆவிகள் இருந்ததாகவும், இதில் நெற்றியை வைத்துத் தேய்த்தால் ஆவி உலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் கதைகள் உலாவின. கடந்த 2000 ஆண்டில் இதன் மீது ஒரு படப்பிடிப்புக் குழுவினரின் கிரேன் விழுந்ததால் உடைந்து நாசமானது.

இந்த நகர் இன்கா மன்னனின் கோட்டையாக இருந்திருக்கலாம் எனவும், சுமார் ஆயிரம் பேர் இந்த அரண்மனை நகரில் வாழ்ந்திருக்கலாம் எனவும் கருதுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

இந்த நகரின் வரலாற்றுக் கதை சிலிர்ப்பும், வியப்பும், அதிர்ச்சியும், சோகமும் கலந்து கானகத்தைப் போலவே அடர்த்தியாய்க் கிடக்கிறது.

பெரு நாட்டின் மீது ஸ்பானிஷ் படைகள் தாக்குதல் நடத்தியதால் தப்பி ஓடிய பெரு நாட்டு இன்கா மக்கள் கஸ்கா நகரை விட்டு அடர் காடுகள், பள்ளத்தாக்குகளில் தஞ்சம் புகுந்தனர். கஸ்கா ஸ்பானியர்களின் ஆக்கிரமிப்புக்குள் போனது.

காட்டுக்குள் தங்கிய இன்கா மக்களை ஸ்பானிஷ் படை நெருங்க முடியாமல் விலகி விட்டது. ஆனால் கானகத்தில் நுழைந்த இன்கா மக்கள் தங்களுக்கென ஒரு பெரிய நகரை காட்டுக்குள்ளேயே நிர்மாணித்தனர். வில்கபாம்பா என அவர்கள் அந்த நகருக்குப் பெயரிட்டனர்.

நகரை நிர்மாணித்த இன்கா மக்கள் தங்களுடைய நிம்மதியான வாழ்க்கையைக் கெடுத்த ஸ்பானியர்களுக்கு சண்டை, போர் என குடைச்சல் கொடுத்துக் கொண்டே இருந்தனர். தன்னுடைய நாட்டை மீட்க நினைத்த இன்கா மக்களின் தாகமே அது.

ஸ்பானியர்கள் திரும்பத் தாக்கிக் கொண்டே இருந்தார்கள். சுமார் 36 ஆண்டுகள் இந்தச் சண்டையை விட்டு விட்டு நடந்தது. ஸ்பானியர்கள் கடைசியில் 1572ல் மாபெரும் கொடூரத் தாக்குதலை நிகழ்த்தினார்கள்.

இன்கா மக்களை வயது, பாலியல் வேறுபாடு ஏதுமின்றி கொன்று குவிக்க ஆரம்பித்தார்கள். போராளிகள் மட்டுமன்றி கண்ணில் பட்ட அனைவருமே படுகொலை செய்யப்பட்டனர்.

ஸ்பானிய படைகள் கடைசியில் வில்காபாமாவையும் தாக்கியது. இன்கா மக்களின் கடைசி மன்னன் அமாரு துப்பாக்கி முனையில் சிறை பிடிக்கப்பட்டான்.

மன்னனைச் சிறைப்பிடித்த ஸ்பானியர்கள் அவரை கஸ்கோ நகருக்குக் கொண்டு பளாசா டி ஆர்மாஸ் என்னுமிடத்தில் வந்து படுகொலை செய்தனர்.

இன்கா மக்களின் வியர்வையில் உருவான வில்காபாம்பா நகர் பாழ் அடைந்து கானகத்தின் மௌனத்துக்குள் தன்னைக் கரைத்துக் கொண்டு அமைதியாய் இருந்தது, ஓர் இனம் அழிந்த வரலாற்றின் கருப்புக் கண்ணீர் துளியாய்.

ஹிராம் பங்காம் எனும் யேல் பல்கலைக்கழக தத்துவ ஆசிரியருக்கு ஆர்வம் வாய்க்காமல் போயிருந்தால் இந்த நகரம் எப்போது உலகுக்கு அறிமுகமாயிருக்கும் என்று சொல்ல முடியாது.

இன்கா மக்களின் கதைகளிலும், அவர்களுடைய கலாச்சார வாழ்க்கை முறையிலும் ஆர்வம் கொண்ட ஹிராம் பங்காம் 1911 ஆம் ஆண்டு தன்னுடன் சிலரையும் அழைத்துக் கொண்டு கஸ்கோவை விட்டு காட்டுக்குள் பயணமானார் தொலைந்து போன நகரைக் கண்டு பிடிக்க.

இவர்கள் பயணம் துவங்கிய சில நாள்களிலேயே இன்கா மக்களின் நகர் இடிபாடுகள் ஒன்றைக் கண்டனர் அதற்கு பட்டாலக்டா என்று பெயரிட்டனர்.

தொடர்ந்து ஒருவாரம் நடந்த அவர்கள் மண்டோர்ப்பம்பா எனுமிடத்தில் தங்கினர். அங்கே சிலர் வாழ்ந்து கொண்டிருந்தனர் ! அங்கிருந்து தங்கள் பயணத்தைக் குறித்து பேசிக்கொண்டிருந்தவர்கள் எதேச்சையாக அங்கிருந்த ஒரு நபரிடம் உரையாடினார்கள் அவர் பெயர் மெல்கோர் அர்டீகா.

அவர் சாதாரணமாய் சொன்ன ஒரு செய்தியைக் கேட்டு சட்டென எழுந் தார் பங்காம். இங்கிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வில்கோணாட்டா அருவிக்கு மறுபக்கம் மலையின் மேல் சில கல் வீடுகள் உள்ளன என்பதே அந்தச் செய்தி.

ஹிராம் பங்காம் அந்த மனிதரையும் அழைத்துக் கொண்டு அந்த இடத்துக்குச் செல்ல விரும்பினார். ஆனால் அப்போது மழைக்காலமாக இருந்ததால் கூட வந்தவர்களில் ஒருவரைத் தவிர எவரும் அத்தகைய உயிரைப் பணயம் வைக்கும் பயணத்துக்கு விரும்பவில்லை.

பங்காம் துணிந்தார். தனியே அந்த நபரையும் அழைத்துக் கொண்டு பயணமானார். அவர்கள் குறிப்பிட்ட இடத்தை மிகுந்த சிரமத்துக்கிடையே அடைந்தனர். மேலே சென்று பார்த்த பங்காம் வியப்பின் உச்சிக்குச் சென்றார்.

(தொடரும்)

# இடமாற்றத்தில் சர்ச்சை

இடமாற்றங்கள் எப்போதும் சர்ச்சைக்குரியனவாகவே இருக்கின்றன. அரச உத்தியோகத்தில் இணைவதற்கு முன்னர் 'இலங்கையின் எந்தப் பாகத்திலும் வேலை செய்வதற்கு' சம்மதித்தே அரச உத்தியோகத்தில் இணைகின்றனர். அதன் பின்னர் இணைகின்ற இடம் ஒட்டிக் கொள்ள இடமாற்றம் அவர்களுக்கு கசக்கின்றது.

இடமாற்றம் வழங்கப்பட்டால் அதனை எப்பாடுபட்டாவது நிறுத்துவதற்கு அல்லது தமக்கு வசதியான இடங்களுக்கு மாற்றிக் கொள்கின்றனர். இதற்காக தமக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு அவர்கள் 'ஜால்ரா' அடிக்கவும் தயங்குவதில்லை.

எந்தவொரு வேலைத் திட்டமும் கிராமத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்காக கிராம மட்டத்திலான அரச அதிகாரிகளாக கிராம சேவையாளர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களுக்கான இடமாற்றங்கள்தான் தற்போது பாரபட்சமான ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராம சேவையாளர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்ட போதும், ஒரு சில பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே அந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மற்றைய பிரதேச செயலகங்களில் இடமாற்றங்கள் கிடப்பில் போடப்பட் டுள்ளன. அந்த இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு பிரதேச செயலர்கள் பின்னடிக்கின்றனர். கிராம சேவையாளர்களில் பலர் தற்போது அரசியல் வாதிகளின் எடுபிடிகளாகவும் ஏதோ ஒரு வகையில் அவர்களது செல்வாக்கினால் நியமனம் பெற்றவர்களாகவுமே இருக்கின்றனர். இதனால் பிரதேச செயலர்கள் இவர்களை இடமாற்றம் செய்ய முற்படுகின்ற பொழுது, அரசியல்வாதிகள் தமது தலையீடுகளை மேற்கொண்டு அவற்றை தடுத்து நிறுத்துகின்றனர்.

சில கிராம சேவையாளர்கள் பிரதேச செயலர்களுடன் நெருக்கமாக இருந்து கொண்டு தமது காரியங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதனால் கிராம மக்கள் பாதிக்கப்படுகின்றனர். சில கிராம சேவையாளர்கள் எப்போதும்தமக்கு வேண்டியவர்களுக்கே எல்லா உதவிகளையும் வழங்குவது வழக்கமாகி வருகிறது. அவர்களை அந்தப் பகுதி மக்கள் இடமாற்றம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்தாலும் பிரதேச செயலர்கள் அதனை உதாசீனப்படுத்துகின்றனர். கிராம மட்டத்திலிருக்கின்ற அரச அதிகாரிகளை முதலில் இடமாற்றம் செய்து இடமாற்றங்களை ஒழுங்குபடுத்த முயற்சிக்கக் கூடாதா?

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

உதயனை தினம் பார்த்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன் என்ற ரீதியில் எனது கருத்துக்களையும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

அண்மையில் பெய்து வரும் மழை காரணமாக மீளக்குடியமர்ந்த வன்னி மக்கள் பெரும் பாதிப்பினை எதிர் கொண்டு வருகின்றனர். இவர்கள் விடயத்தில் அரச அதிகாரிகளோ, படையினரோ எந்த விதமான முன்னேற்றகரமான சூழலினையும் ஏற்படுத்துவதற்கு தடையாக நிற்பதாகத் தெரிகிறது.

மழை பாதிப்பினை ஏற்படுத்தும் என்று தெரிந்தும் அரசு தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறை இல்லாது இருந்து வருகிறது. இதனால் மழை காலங்களில் மீளக்குடியமர்ந்த மக்கள் கூடாரங்களுக்குள் வசிக்க முடியாது குளிரினால் உடல் ரீதியான பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

மழையினால் பாதிக்கப்பட்டு வரும் மக்கள் தமது தேவை கருதி அரச அலுவலகங்களுக்குச் செல்லும் போது அரச அதிகாரிகளோ, அலுவலங்களில் பணியாற்றும் அரச அலுவலர்களோ கண்டும் காணாமல் இருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

அரச அலுவலகம் செல்லும் போது அரச அதிகாரி அலுவலகத்தில் இல்லாத காரணத்தால் அந்த மக்களை திருப்பி அனுப்புகின்றனர். இதனால் அலைச்சலுக்கு உள்ளாகும் மக்கள் தேவைகள் நிறைவேற்றப்படுமா என்ற விடயத்தை தெளிவாக அந்த மக்களுக்கு அறிவிக்கவேண்டும். அறிவிக்காமல் விடுவதால் தான் அந்த மக்கள் அலைச்சல்கள் மத்தியில் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே இனிவரும் காலங்களில் மழையினால் பாதிக்கப்படும் மீளக் குடியமர்ந்த மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் அக்கறை கொண்டு செயலாற்றுமாறு கேட்டு நிற்கின்றனர். இல்லாது போயின் வெள்ளத்தால் இடப்பெயர்வுகள் ஏற்பட்டு அங்குள்ள பாடசாலைகள் ஆலயங்களில் மக்கள் தஞ்சம் புகுவர். இதனால் பாடசாலைகள் இயங்க முடியாத சூழல் ஏற்படும்.

மழைகாலம் ஆகையால் உதயன் அது சம்பந்தமான உயிர்பாதுகாப்பு விடயங்களை முதன்மைப்படுத்தி வெளியிட வேண்டும். அதன் ஊடாக மக்கள் இடி, மின்னல், வெள்ள பாதிப்பில் இருந்து மீளவும், நோய்த்தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாக்கவும் ஒரு வழி ஏற்படும் என நான் நினைக்கிறேன். இதனை உதயன் செய்வானா? உதயனால் மட்டுமே செய்யமுடியும் என்ற காரணத்தால் உதயனை வேண்டி நிற்கிறேன்.

இதன் மூலம் வன்னி மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதான செயல்பாடுகளையும் மக்களை பாதுகாக்கக் கூடிய ஒரு விழிப்புணர்வையும் உதயன் ஊடாக எதிர்பார்க்க முடியும் என நம்புகிறேன்.

கனகு, மல்லாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழத் தெரிந்து கொள்ளுங்கள்

■ களஞ்சியன்

**“வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களெல்லாம், நம்மை உருவாக்கவே ஏற்படுகிறன. அதில் சோர்ந்து போகாமல் அதிலிருந்து புதிய பாடத்தினை, புதிய வழியினைக், கற்றுக் கொள்ள வேண்டும்.**

ஒதுங்கி ஒதுங்கி வாழ்வதுதான் வாழ்வா? தேங்கியிருந்து கொண்டு நாளை என்னும் கனவில் வாழ்வதுதான் வாழ்வா? எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி வைப்பதுதான் வாழ்வா? இல்லை எப்போதும் செயல் புரிந்து கொண்டிருப்பதுதான் வாழ்க்கை, நதி போல ஓடிக் கொண்டிருப்பதே வாழ்க்கை, பலர் வாழ்க்கையை பதுங்கிக்கொள்ளும் இடமாகவே வைத்திருக்கின்றனர்.

ஓடிக்கொண்டிருப்பதில் தான் உத்வேகமும், உற்சாகமும் இருக்கும், புத்துணர்ச் சியும் புது வேகமும் இருக்கும். செயற்பட தயங்குகிறவர்கள் அவைகளையெல்லாம் அலைச்சல்களாக நினைத்து அடங்கியிருக்கிறார்கள்.

எதிலும் ஆர்வமில்லை, எதையும் தேடிப் போக மனமில்லை. அதுவாக வரட்டும் பார்க்கலாம் என்று அமர்ந்திருந்தால், அப்படி எதுவும் வந்து விடாது. எதற்கும் சோம்பல், எதைச் செய்யவும் ஆர்வ மின்மை இவைகளுக்கெல்லாம் காரணம் மனத்தளர்வு.

அப்படி என்னதான் கிடைக்கப் போகிறது என்ற சலிப்பு. இப்படி தன்னம்பிக்கையில்லாமல் முன்னோக்கி நடவாமல் பின்னோக்கி நடப்பவர்கள் விழித்துக் கொள்ளுங்கள். எதுவும் தானாக எதுவும் கிடையாது, நாம் அதை எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதில்தான் இருக்கிறது, எனவே சோர்வு, அலைச்சல், என்று எடுத்துக் கொள்ளாமல் ஓடிக்கொண்டிருங்கள்

வெற்றியில் கிடைக்கும் மகிழ்ச்சியை விட அந்த வெற்றியை நோக்கி ஓடுவதில் தான் அதிக மகிழ்ச்சி இருக் கிறது. மகிழ்ச்சியுடனும் ஆர் வத்துடனும் ஒரு செயலைச் செய்ய வேண்டுமானால், அடுத்தவர்களின் தூண்டுதல்களினால் இல்லாமல் நமக்குள்ளிருந்து ஏற்படும் உந்துதலினால் செயற்பட வேண்டும். உள்ளுணர்வுகளின் தூண்டுதல்களைப் போன்ற வல்லமை வெளியே வேறு எங்கிருந்தும் கிடைப்ப தில்லை, எந்த திடமான முடிவும் நம்மிலி ருந்து தான் ஆரம்பிக்கப்படவேண்டும்.

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களெல்லாம், நம்மை உருவாக்கவே ஏற்படுகிறது, அதில் சோர்ந்து போகாமல் அதிலி ருந்து புதிய பாடத்தினை, புதிய வழியினை, கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு செயலை செய்து முடிப்ப தற்கு ஒரு வழியல்ல பல வழிகள் உள்ளன. நாம் காணும் துன்பங்கள்தான் நமக்கு புது வழி யினை காட்டித்தருகின்றன.

அதே துன்பத்தில் துவண்டு போனோ



வருவதில்லை. எதையும் நாம் தான் கொண்டு வர வேண்டும் என்பதை நம்புங்கள்.

வாழ்வு என்பது ஒரு துடிப்பு, வாழத் துடிக்கிறவனே வாழக் கற்றுக்கொள்கிறான், எதிலும் எதிர் நீச்சல் போடுகிறான். உங்களுக்குள்ளே ஒரு துடிப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வாழ வேண்டும், முன்னேற்றம் வேண்டும் என்ற துடிப்பு ஏற்படும் போது தயக்கம், சோம்பலெல்லாம் காணாமல் போய் விடும்.

செயல்களில் எளிதானது, கடினமானது என்று மானால் எல்லா வாசல்களும் அடைக்கப் பட்டு விடும். அங்கேதான் பல தற்கொலைகளும் நிகழுகின்றன. எனவே துவண்டு விடாமல், நம் உள்ளுணர்வுகளால் உலகை வெல்வோம்.

விலகியிருந்து பார்க்கும்போது எல்லாமே, சிக்கல் நிறைந்ததாகவே தெரியும். துணிவோடு புகுந்து சென்றால் வானமும் தொட்டுவிடும் தூரத் தில்தான் இருக்கும். எனவே எதற்கும் தய[illegible] டுங்கள்.

# இருட்டில் பார்க்கும் அதிசய கண்கள்

■ இணையவன்



கிராமங்களிலும் நகரங்களிலும் பேய் பிடித்து ஆடுவோர் பலர் இருக்கிறார்கள். பெருவாரியான பேய்கள் பெண்களைத்தான் அதிகம் பிடிக்கின்றது. இதில் உண்மையான பேய் பிடித்திருப்பதை விட தனக்கு பேய் பிடித்திருக்கும் என்ற போலியான நம்பிக்கையில் இருப்பவர்கள்தான் அதிகம்.

இதை ஒருவித ஹிஸ்ரீறியா நோய் என்றே கூற வேண்டும். இந்த நோயை நீக்க மருளுமத்தை என்ற காயைப் பறித்து காயவைத்து பொடி செய்து பாதிக்கப்பட்ட நபரின் தலையில் நன்றாக தேய்க்க போலியான பேய் ஓடிவிடும். அதாவது ஹிஸ்ரீறியா நீங்கி விடும். இதை வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்தும் எத்தனையோ போலி மந்திரவாதிகள் இருக்கிறார்கள். இவர்களிடம் நாம்தான் கவனமாக இருக்க வேண்டுமே ஒழிய அவர்களைக் குறைகூறி பயனில்லை. கும்மிருட்டான பகுதியில் நமக்கு மட்டும் நன்றாக கண் தெரிந்து நடமாடினால் எப்படி இருக்கும். அது ஒரு சந்தோஷமான அனுபவமாகத் தானே இருக்கும். அப்படி ஒரு வாய்ப்பு உங்களுக்கும் கிடைத்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்ய வேண்டாமா? அதை நீங்களே நடைமுறைப்படுத்தியும் பார்க்கலாம்.

சில சுறாமீன் தலையில் இரண்டு கல் இருக்கும். அதை விடுத்து ஒரு கல் இருக்கும் சுறா மீனிலிருந்து அந்தக்கல்லை எடுத்து சிறிது மின்மினி பூச்சிகளைப் பிடித்து தலைபிரசவமான பெண்ணின் தாய்ப்பாலில் மீன் கல்லையும் மின் மினி பூச்சிகளையும் அரைத்து நெற்றியில் திலகம் போல் அணிந்து கொண்டு இருட்டைப் பாருங்கள். உங்கள் கண்களில் இருந்து லேசர் ஒளிக்கற்றை போன்று கதிர் பாய்ந்து இருட்டில் இருக்கும் ஒவ்வொரு பொருளையும் துல்லியமாக உங்கஞக்கு காட்டும். இதை தமிழ்நாடு வேலூரில் இருக்கும் பக்தர் ஒருவர் நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுள்ளார்,

எனக்கு தெரிந்த ஒருவர் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் குடிப்பதற்கு பயன்படாத அளவிற்கு திடீரென்று உப்பாக மாறிவிட்டது. இது ஏதோ தீயசக்தியின் வேலையோ என்று அஞ்சி என்னிடம் வந்தார். சில பொருள்களைக் கொடுத்து இதை கிணற்றில் போடுங்கள் 10 நாள்களில் தண்ணீர் பழையபடி சுவையாக மாறிவிடும் என்று கூறி அவரை அனுப்பினேன். நான் கூறியபடி பத்து நாள்களுக்கு உள்ளாகவே தண்ணீர் சுவையாக மாறிவிட்டது என்று என்னிடம் வந்து சந்தோஷமாகக் கூறினார். தீய சக்திகளை அகற்றி விட்டீர்கள் சுவாமி என்று அவர் கூறிய போது நான் அவரிடம் அவரது அறியாமையை அகற்றி உண்மையை புரிய வைத்தேன்.

எந்த தீய சக்தியும் உங்கள் தண்ணீரை கெடுக்கவில்லை, ஆழ்மணலில் ஏற்பட்ட சில இரசாயன மாற்றங்கள் தண் ணீரின் தன்மையை மாற்றி இருந்தன. அதைப் போக்கிட மருதம் பட்டை, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், நெல் லிக்காய், புளியங்கொட்டை ஆகியவைகளில் இருந்து பெற்ற பொடியை உங்களிடம் கொடுத்து நீரில் போடச் சொன்னேன். அது தண்ணீரை நன்றாக மாற்றி விட்டது.

இது மந்திரமாயம் அல்ல, கண்கட்டு வித்தையும் அல்ல. ஏரி, குளங்களில் கூட இந்தப் பொடியைத் தூவினால் விஷம் கலந்த நீரும் நன்னீராக மாறிவிடும் என்று கூறி அவரை தெளிவு பெறச்செய்தேன். இந்த பொருள்களோடு மந்திர பிரயோகமும் இணைந்தால் எந்த ஒரு செயலிலும் அளப்பரிய வெற்றியைக் காணலாம்.

நான் மேலே கூறியவைகள் கண்கட்டி வித்தைகளில் இருக்கும் நன்மைகளில் சில. எந்த ஒரு விஷயத்திலும் அல்லாதவைகளை விட்டு நல்லனவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். கோயிலில் இருக்கும் கற்சிலைகளை கண்கட்டி வித்தையால் கண்ணீர் வடிக்கச் செய்யலாம். பாலைக் குடிக்கச் செய்யலாம். வேப்ப மரத்தில் இருந்து பாலையும். இரத்தத்தையும் வடியச் செய்யலாம். இவையெல்லாம் இறை சக்தி என்று பிரசாரம் செய்யப்படும் பொய் விஷயங்களே ஆகும்.

இந்த வித்தைகளையும் பற்றி ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருந்தால் போலி மனிதர்கள் நடுங்குவார்கள். நல்லவர்களும் நல்லவைகளையும் மட்டுமே நாம் காணக்கூடிய நிலை உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிக்கும் குணம் இருந்தால் இதய நோய் வராது

மனிதர்களின் மனதிற்கும், உடல்நலத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினர் ஆய்வை மேற்கொண்டனர். 200 பேர் பங்கேற்ற அந்த ஆய்வில் 100 பேரிடம் உங்களுக்கு கெடுதல் செய்பவர்கள் மீது நீங்கள் எப்படி கோபமடைவீர்கள், அவரை எப்படிப் பழிவாங்குவது போல் கற்பனை செய்து கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. மீதமுள்ள 100 பேரிடம் நண்பர் தவறு செய்த பிறகும், அதை மன்னித்து மறந்து விடுவது போன்று கற்பனை செய்து கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஐந்து நிமிடம் கழித்து அதே சம்பவங்களை மீண்டும் நினைத்துப் பார்க்க வைத்து அவர்களது இரத்த அழுத்தம் பரிசோதிக்கப்பட்டது. நண்பரின் தவறுக்கு கோபப்பட்ட 100 பேரின் இரத்தம், அளவுக்கதிகமாக வேகமாகப் பாய்ந்தது. மறப்போம், மன்னிப்போம் என்ற மனப்பாங்கைக் கொண்ட 100 பேரின் இரத்த அழுத்தம் சாதாரணமாக இருந்ததும் தெரிய வந்தது. இது குறித்து கருத்துத் தெரிவித்த குழுவின் தலைமைப் பேராசிரியர் டாக்டர் பிரிட்டா லார்சன், மன்னிக்கும் மனம் இல்லாதவர்களின் இரத்த அழுத்தம் கோபப்படும்போது மட்டுமின்றி நீண்ட நேர பாதிப்பைச் சந்திக்கிறது. இதனால், அவர்கள் இரத்தக் கொதிப்புக்கு ஆளாகி இதய நோயைச் சந்திக்க நேரிடலாம். மன்னிக்கும் குணம் கொண்டவர்களுக்கு இதயத் துடிப்பு சீராக இருந்ததும் மன்னித்ததால் ஏற்பட்ட மன அமைதி காரணமாக இதயத்துக்கு இரத்த ஓட்டம் அதிகரித்து அது பலம் அடைந்ததும் சோதனையில் தெரிய வந்தது. இது நீண்ட கால அடிப்படையில் அவர்களது ஒட்டு மொத்த உடல் நலனை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை மனமார வாழ்த்துகின்றோம்



யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் - அதிபர்

## உயர்திரு. வேலுப்பிள்ளை சிவசுந்தரம்

(Maths trd, B.Sc. SLPS - I)

எமது பாடசாலையில் சிறப்புடன் சேவையாற்றி நாளை (08.11.2012) இல் பணி ஓய்வு பெறும் எமது அதிபர் அவர்களைத் தமது ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடன் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

**அவரது சேவைக்காலம்**

| | | | |
|---|---|---|---|
| 07.05.1975 | - 20.01.1980 | யா/புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தி. | |
| 21.01.1980 | - 31.12.1982 | யா/பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை. | |
| 01.01.1983 | - 31.05.1983 | பண்/ சௌதம் ம.வி. | |
| 01.06.1983 | - 24.03.1985 | பண்/ பண்டாரவளை தமிழ் ம.வி. | |
| 25.03.1985 | - 31.05.1991 | கிளி/ இராமநாதபுரம் ம.வி. | - ஆசிரியர், அதிபர் |
| 01.06.1991 | - 15.02.1992 | கிளி/ தர்மபுரம் ம.வி. | - அதிபர் |
| 16.02.1992 | - 20.12.1994 | யாழ். பல்கலைக்கழகம் (பட்டதாரி மாணவன்) | |
| 21.12.1994 | - 08.02.1995 | கிளி/ தர்மபுரம் ம.வி. | |
| 09.02.1995 | - 08.02.1996 | கிளி/ கனகபுரம் ம.வி. | - பிரதி அதிபர் |
| 09.02.1996 | - 13.10.1997 | கிளி/ சோரன்பற்று சி.சி.த.க.பா. | - அதிபர் |
| 14.10.1997 | - 21.01.2010 | யா/ பிரான்பற்று கலைமகள் வித்தி | - அதிபர் |
| 22.01.2010 | - 08.11.2012 | யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி. | - அதிபர் |

(25100) (2-6-7)

வாழ்த்துவோர்: ஆசிரியர், ஊழியர் நலன்புரிக்கழகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், சங்கானை.



புதிது! புதிது! புதிது!

STYLE PARK

அனைத்து வகையான ஆடைவகைகளும் புத்தம் புதிய வடிவமைப்பில்..........

ஸ்ரைல் பார்க்

தீபாவளி பண்டிகையை குடும்பத்தாருடன் குதூகலமாய் கொண்டாடி மகிழ்ந்திட ஆடை உலகின் சாம்ராஜ்யம்

இல. 171, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்

(சி/4544)(6.8)



உங்களுக்கெனவே காத்திருக்கும் ஓர் உலகம்

Hutch 3G

தடையற்ற அதிவேக இன்டர்நெட் அனுபவத்தின் மூலம் புதிய உலகத்தைக் கண்டு கொள்ள இன்றே Hutch 3G யிற்கு மாறிவிடுங்கள்
நாடு முழுவதும் 21 Mbps வரை வேகம் கொண்ட ஒரே வலையமைப்பு

அழையுங்கள் 1788
www.hutch.lk

HUTCH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org